# தகடூர் யாத்திரை

புலியூர்க் கேசிகன்

வெளியீடு

# தகடூர் யாத்திரை

[செய்யுட்களும் விளக்கமும் வரலாற்றுச் செய்திகளும்]

புலியூர்க் கேசிகன்

தென்மழைப் பதிப்பகம்
34, கொத்தவால் தெரு
ஆலந்தூர், சென்னை-600 016
தொலைபேசி : 234 21 01

முதற் பதிப்பு : டிசம்பர் - 1963
இரண்டாம் பதிப்பு : அக்டோபர் - 1991

உரிமை : புலியூர்க் கேசிகன்

தொகை—76

O-21A.7
N91

விலை : ரூ. 20-00

187764

விற்பனை உரிமை

ஐந்திணைப் பதிப்பகம்
279, பாரதி சாலை
திருவல்லிக்கேணி
சென்னை - 600 005

தொலைபேசி : 840410

அச்சு அமைப்பு :
ஸ்ரீ வெங்கடேஸ்வரா அச்சகம்
7/40, கிழக்கு செட்டி தெரு,
பரங்கிமலை, சென்னை-600 016

# பதிப்புரை

'கொங்கு நாட்டுச் செங்கரும்பு' என்று சொல்வழக்கைக் கேட்டிருப்போம். கரும்பைத் தமிழகத்திற்குக் கொணர்ந்தவர் அதியமான்கள்; அவர்கள் கொங்கு நாட்டுத் தகடூர்ப் பகுதியினர்; அதனால் தான் இப்படி ஒரு பேச்சு எழுந்ததுபோலும்!

இன்றைய தர்மபுரிதான் அந்நாளில் புகழுடன் திகழ்ந்த தகடூர். தகடூர் அதியமான்கள், வள்ளன்மையும் போராண்மையும் கொண்டவர்கள். அவர்கள், ஔவையார் அரிசில்கிழார் போன்றோரால் பாடப்பெற்ற பெருஞ்சிறப்பும் உடையவர்கள்.

தகடூர்ப் பெரும்போரும், அதனையொட்டி எழுந்த 'தகடூர் யாத்திரை' என்னும் பெருநூலும் புகழுடையன. நூல் முற்றவும் கிடைக்கவில்லை. கிடைத்த செய்யுட்களைக் கொண்டும், பிற சங்க நூற் செய்திகளைக் கொண்டும் இந்த நூலை ஆக்கித் தகடூர்த் தமிழ் மறவரின் தறுகண்மையைப் போற்றுகின்றார் ஆசிரியர் புலியூர்க் கேசிகன்.

தமிழ் அன்பர்கள் இதனை ஆர்வமுடன் வரவேற்பார்கள் என்று நம்புகிறோம். தர்மபுரி மாவட்டத் தமிழ் அன்பர் அனைவரும், இதனைப் பெருமிதத்துடன் போற்றி வரவேற்றுக் கற்றுத் தம் பண்டைய முன்னோரின் மாண்பினை வியந்து உளங்கொள்வார்கள் என்றும் கருதுகின்றோம்.

—பதிப்பகத்தார்

## நூலின் உள்ளே...


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தகடூர் யாத்திரை | — 5 |
| 2. | கொங்கு நாட்டின் நிலை | — 9 |
| 3. | பெருஞ்சேரல் இரும்பொறை | — 17 |
| 4. | அதிகமான் எழினி | — 25 |
| 5. | பாடிய சான்றோர்கள் | — 48 |
| 6. | தகடூர் யாத்திரைச் செய்யுட்கள் | — 53 |

# 1. நகர் யாத்திரை

அளவற்ற வளமுடன், செழுமையின் சீர்மை எங்கணும் விளங்கத் திகழ்ந்திருந்த காலமொன்று, நம் தமிழகத்திற்கு இருந்ததென்றால், அதனை ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டிருந்த 'சங்ககாலம்' என்று கூறலாம். சங்ககாலத் தமிழகம் நகர் வளத்துடன் மட்டுமின்றித், தமிழினத்தின் வாழ்வியலிலும்கூட ஒப்பற்றதாகத் திகழ்ந்திருக்கிறது. இதற்கு இலக்கியச் சான்றுகள் ஏராளமாக உள்ளன.

முடியுடை மூவேந்தரும் தமிழகத்தின் அரசியலைத் தலைமையூன்றி செவ்விதாக அக்காலத்தே செலுத்தி வந்தனர். அறமும் மறமும் அறமும் திகழ அவர்களுடைய அன்றைய ஆட்சி, இன்றைக்கு வாழ்கின்ற நாமும் எண்ணிப் பெருமூச்சு விடக்கூடிய உயர்வுடனும் சீருடனும் திகழ்ந்திருக்கிறது. மக்கள், உரிமை வீறுடனும் அறநெறித் திண்மையுடனும், பண்பின் பெருமிதத்துடனும் செம்மாந்து விளங்கியிருக்கின்றனர். 'நாகரிகம்' என்பதன் உண்மையான ஒரு தன்மையினை உளங்கொண்டு, ஒப்பின்றி வாழ்ந்த அவர்களது சிறப்பியல்புகளைத்தாம், இன்று நாம் வியப்புடன் கற்றுப் புரிந்து கொள்ளுகின்ற பேரிலக்கியங்கள் பலவற்றின் எழுச்சிக்கும் அடித்தளமாக விளங்கியிருக்கின்றது.

மூவர் ஆளுகை நீத்த தமிழினத்தின் ஆட்சிப் பொறுப்பு அன்று நிலைகுலைந்திருந்ததாம். சிறுசிறு பகுதிகளைப் பற்றிய

குடியேறி வாழ்ந்து வந்தனர் என்பதும் உண்மைதான். எனினும், அவ்வளவு எண்ணற்றவராகப் பரவிக் கிடந்த சிற்றரசர்களுள் ஒவ்வொன்றுமே உயர்வுடன் திகழ்ந்தன என்பதனை நம்மால் மறுக்கமுடியாது. 'மௌரிய' என்ற வகையில் மூவேந்தர்களும் நிகரிலர் என்பதுடன், நாட்டின் நிர்வாகப் பொறுப்புக் குறுநிலத் தலைவர் களிடமே முற்றாகப் பரவிக் கிடந்ததனால், நாட்டின்கண் எக்கூறுமே செம்மையான ஆட்சியினை ஏற்றிருக்கிறது.

தமிழறிந்த சான்றோர்கள் பலராகவும், அவர்களைப் போற்றிப் புரந்த மன்னர்கள் பலராகவும், தமிழ்மொழியின் செழுமையைக் எங்கும் பரவி மலிந்திருந்த பான்மைக்கு, அந்தச் செம்மைசான்ற ஆட்சிமுறைதான் ஒருவகையிற் காரணமாக இருந்திருக்க வேண்டும் என்னலாம்.

எனினும், இப்படிச் சிதறிக்கிடந்த சிற்றரசு நாடுகள் ஒவ்வொன்றுமே வீரத்திருவுடையார் பலரைப் பெற்றிருந்தனர், ஒருவகையில் தமிழகத்தின் பொதுவான ஒருமை வளர்ச்சிக்கும், உறுதிபோற்றும் வலிமைக்கும் அதுவே தடையாகவும் இருந்திருக்கிறது. ஒருவருக்கொருவர் இனர்களை தமக்குள் மோதிட்டுக் கொண்டிருந்தனர் என்பதனால், தமிழரின் வீரத்தன்மை வெளிப்பட்டதாயினும், ஒற்றுமைப்பட்டுள் இவர்களுக்குள் இருந்திருந்தால் ஏற்பட்டிருக்கக்கூடிய நன்மைகள் பலவும் ஏற்படாமற் போய்விட்டன என்பதும் உண்மையாகும்.

பேரரசுகள், சில காலங்களில் இந்தக் குறுநில மன்னர்களை அடக்குவதற்கு இப்படியாக வலிமிகுந்து போயிருந்த காலமும் உண்டு. அவ்வேளைகளில், குறுநில மன்னர்கள் தத்தம் பேரரசுகளை மதியாது, தம்முடைய வெற்றிப் பெருமிதத்தைப் பரப்புவதற்கு முயன்றும் வந்திருக்கின்றனர்.

இவ்வாறான ஒரு காலத்தில் நடைபெற்றதால், தமிழகத்தின் புகழ்பெற்ற போர்களுள் ஒன்றான தகடூர்ப் பெரும் போரும் நிகழலாயிற்று. இந்தத் தகடூர்ப் பெரும் போர் பிற போர்களினும் காட்டிலும் ஒரு தனிப்பட்ட தீவிர வேட்டத்தை அந்நாளைய அறிஞர்களிடையே ஏற்படுத்தியதற்குக் காரணம், அந்தப் போர்க்களம் நடைபெற்ற மன்னர்கள் இருவரது மாண்பும் பெருக்கமே எனலாம்.

போரினை மேற்கொண்ட பெருஞ்சேரல் இரும்பொறை தன்னைப் போற்றிப் பத்துச் செய்யுட்களைப் பாடிய அரிசில்கிழாருக்குத் தன் நாட்டையும் ஆட்சியையும் பரிசாகத் தருவதற்குத் துணிந்த தமிழுள்ளத்தைக் கொண்டவன்! முரசு கட்டிலில் அறியாதே துயின்ற மோசிகீரனாரை முறைப்படி வெட்டி வீழ்த்தாமல், அவரது தமிழ் நலத்தினை நினைந்து, அவருக்குத் தானே கவரி வீசிநின்ற பண்பினன்! பொன்முடியார்பால் பேரன்பு கொண்டு விளங்கியவன். இங்ஙனம், தமிழைப் பெரிதும் தலைசிறந்து நிறைவுற் பெற்றிருந்த ஒருவனாகிய இவன் மேற்கொண்ட தகடூர்ப் பெரும் போர், தமிழ்ச் சான்றோரிடையே பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது; அவர்களின் கவனத்தையும் ஈர்த்தது.

இவனுக்குப் பகைவனாகித் தன்னைக் காத்துக்கொள்ள முயன்று போரிட்டவனோ, அதியமான் ஆவான். கரும்பைக் கொணர்ந்து தமிழகத்தில் பயிர் செய்தது உதவிய அதியர் மரபிலே தோன்றியவனுடன், கரும்பினும் இனிக்கின்ற கன்னித் தமிழின்பாலும் பேரன்புடையவன். இவன், நெடுநாள் வாழ்வினைத் தருகின்ற அருநெல்லிக் கனியைப் பெற்றபோது, தான் உண்ணாது, தமிழ்ப் பெருமாட்டியான ஔவையாருக்கு அளித்து, அவருள்ளம் கண்டு மகிழ்ந்த தகுதியினை உடையவனும் இவனே! இதனாலும், தமிழறிஞர் பலரும் இந்தப் போரினை மிகவும் விழிப்போடு கவனிக்கலாயினர்.

இதனால், தகடூர்ப் போரின் நிகழ்ச்சிகள் பலவும் இருவகையில் தனித்தன்மை பெற்றன. அவற்றை விருந்து பாடினர் பொன்முடியார், அரிசில்கிழார் போன்ற சான்றோர்கள். இவ்வளவு புலவர் பெருமக்களாற் பாடப் பெற்ற இந்தப் போரது வரலாறும் தமிழ்வரலாற்றில் முதன்மை கொண்டதாயிற்று. இவர்களின் செய்யுட்கள் பின்னர்த் தொகுக்கப் பெற்றன, **'தகடூர் யாத்திரை'** என்னும் பெயருடன் ஒரு தனி நூலாகி, வழிவழி வந்த தமிழறிஞர்கள் பலராலும் வியப்புடன் போற்றப் பெற்றும் வந்திருக்கின்றன.

எனினும், காலக் கொடுமைக்குக் கணக்கில்லை என்றாற்போலத் தமிழிலக்கியங்களுட் பலவற்றைப் போக்கடித்த காலவெள்ளம், தகடூர் யாத்திரையினையும் நமக்குக் கிடையாதபடி செய்துவிட்டது. கிடைப்பவை வெவ்வேறு புறத்திரட்டிற் சேர்க்கப் பெற்றுள்ள ஒரு சில செய்யுட்களும், தொல்காப்பிய உரையாசிரியர்களாற் காட்டப்படும் துண்டிரண்டு செய்யுட்களும், மற்றும் சிலவுமே யாம்.

இந்தச் செய்யுட்கள் விளக்குகின்ற செழுமையைக் காணும்போது, நம் ஏக்கம் மிகப்பெரிதாகின்றது. முற்றவும் பெறுதற்குக் கொடுத்து வைக்காமற்போயின கொடுமை நம்மை வாட்டுகின்றது. கிடைத்துள்ள இந்தச் செய்யுட்களையும், இந்தப் போரைச் சார்ந்த பிற செய்திகளையும் ஒருங்கே தொகுத்துக்கொடுத்து தமிழன்பரை மகிழ்விப்பதே இந்த நூலின் நோக்கம் ஆகும்.

# 2. கொங்கு நாட்டின் நிலை

சேரர்ப் பெருமன்னரைப் பற்றி அறிவதற்கு முன்பாக, அக்காலத்தைய கொங்குநாட்டினது அமைப்பைப் பற்றியும் ஓரளவிற்காவது நாம் அறிந்து கொள்ள வேண்டும். இன்றேல், அதன் அடிப்படையான சில முக்கிய செய்திகளை நாம் உணராது போக நேர்ந்து விடலாம்.

சேர நாடு, ஒரு காலத்தில் தெற்கே பொதியமலை முதலாக, வடக்கே துங்கபத்திரையாற்றங்கரை வரைக்கும் விரிந்து பரந்திருந்தது. மேலை மலைத்தொடருக்குக் கீழ்பால் இருந்த கொங்குநாட்டுப் பகுதியும் சேர நாட்டைச் சார்ந்ததாகவே இருந்திருக்கிறது. சேர நாட்டின் மேலைக் கடற்கரைப் பகுதியானது குட்டநாடு, குடநாடு என்னும் இருபெரும் பிரிவுகளாகச் சேரர் குடியினரால் ஆளப்பட்டும் வந்திருக்கிறது. குட்ட நாட்டிலிருந்து அரசியற்றிய சேர மன்னர்களைக் குட்டுவர்கள் எனவும், குடநாட்டிலிருந்து அரசியற்றியவர்களைக் குடக்கோக்கள் எனவும் சான்றோர்கள் குறிப்பிட்டு வந்துள்ளனர்.

குடநாட்டிற்குத் தெற்கேயும், குட்டநாட்டிற்கு வடக்கேயும் சேரநாடுகள் சிறப்புற்றிருந்தன. ஒரு குடிப்பிறந்த அரசகுமாரர்களுள் மூத்தவன் குட்ட நாட்டையும், இளையவன் குடநாட்டையும் ஆண்டு வந்தனன் என்பதனையும் இலக்கியச் செய்திகள் நமக்கு எடுத்துக் கூறுகின்றன.

காலப்போக்கில் குட்டநாட்டின் வடபகுதியையும் குடநாட்டின் தென்பகுதியையும் ஒரு நாடாகக் கருதி, அதற்குப் பொறைநாடெனப் பெயரிட்டு அதனைத் தனியொரு ஆட்சிக்கு அமைத்தனர். இப்படியே சேரநாட்டின் வடகீழ்ப் பகுதி பூழிநாடு எனப் பிரிந்தது; பொறை நாட்டின் கிழக்கில் கொங்குநாட்டை அடுத்திருந்த பகுதி கடுங்கோ நாடு எனத் தனியாகப் பிரிந்தது.

இவ்வாறு சங்ககாலத்தே சேரநாடு நான்கு பிரிவுகளாக அமைந்திருந்ததனைச் சங்கநூல்களும், சேர மன்னர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள முறையினைக்கொண்டு நாம் அறியலாம். குட்டுவன் எனவும், இரும்பொறை எனவும், கடுங்கோ எனவும், குடக்கோ எனவும் இந்த அரசர்களைத் தமிழ்ச்சான்றோர் குறிப்பிட்டுள்ளனர். இவர்கள், சேர மரபின் அந்தந்தப் பகுதிகளில் இருந்து அரசியற்றிய அரசர்கள் ஆவர் என்று நாம் அறிதல் வேண்டும்.

சேரவரசு இவ்வாறு நிலவிய காலத்திலே, மேலை மலைத்தொடருக்குக் கிழக்கேயுள்ள சேரரின் நாட்டை அடுத்திருந்த கொங்குநாட்டுப் பகுதிகள் பெரும்பாலும் குறுநில மன்னர்களின் ஆட்சிக்குள் விளங்கின. சேரவரசின் மேலாண்மைக்குட்பட்ட சுதந்தர மன்னர்களாக இவர்களுட் பலர் திகழ்ந்தனர். வேளிர் குடியினர் சிலரும் சேரமன்னர் மரபினர் சிலருமாக இவர்களது குடியிருப்பு இருந்திருக்கிறது. போர் நிகழ்ச்சிகளும், இத்தகையவர்கள் தம்முடைய பேரரசாகிய சேர நாட்டிற்குத் துணை செய்வதும், அவர்கட்காகப் படைத்தலைமை பூண்டு போரிட்டுக் கொடுப்பதும் இயல்பாக இருந்தன.

சங்கப் போர்க்காலத்தில், சேரவரசு கொங்குப் பகுதிகளில் பெரிதும் பரவியிருந்தது. கொங்குப்பகுதியின் கோநகராகக் **கொங்கு வஞ்சி** என்னும் பேரூர் விளங்கிற்று. இந்நாளில் **தாராபுரம்** என வழங்கும் ஊர்தான் கொங்கு வஞ்சியாகத் திகழ்ந்திருந்தது என்பர் தமிழறிஞர். இத்தக

கொங்கு வஞ்சியின்கண் வீற்றிருந்தது. கொங்கு நாட்டுப் பகுதியையும், பொன்னானி கள்ளிக்கோட்டை போன்ற பகுதிகளையும் அடிப்படுத்தி ஆண்டவர் சேரர் குடியினருள் ஒரு சாரார். இவர்களுட் சிறந்தவன் சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்பவன். கபிலர் பெருமானின் பாடல்பெற்ற பெருஞ் சிறப்புடைய இவன், தன்னுடைய போர்வன்மையாலும் பிற பண்பு நலன்களாலும் அந்நாளில் மிகவும் சிறப்புடன் விளங்கி வந்தான். இவனுக்குப் பின்னர் அரசுகட்டி லேறியவன்தான் பெருஞ்சேரல் இரும்பொறை என்பவன்.

இவன் காலத்தில் கொங்கு நாட்டின் வடக்கில் புன்னாடும் எருமை நாடும் விளங்கின; கிழக்கில் தொண்டைநாடும் சோழநாடும் இருந்தன. தெற்கிலும் மேற்கிலும் சேரநாடு எல்லையாக அமைந்திருந்தது.

கொங்கு நாட்டின் கோயம்புத்தூர்ப் பகுதி மீகொங்கு நாடு என வழங்கி வந்தது. குளித்தலையும் அதன் தென் மேற்குப் பகுதியும் கீழ்க்கொங்கு நாடெனவும், சேலம் பகுதி வட கொங்கு நாடெனவும் பெயர் பெற்றிருந்தன.

இந்தப் பகுதிகளுள் சேலநாட்டுத் தகடூர்ப் பகுதியை ஆட்சிசெய்து வந்தவர் அதியமான்கள் என்னும் மரபினர். இவர்கள் சேரர் வேண்மரைச் சார்ந்த ஒரு குடியினரே என்பர். பேராண்மைச் சிறந்த வீரர்களாக வும், பெரும் படைத்துணையோடு வலிமிகுந்தவர் களாகவும் இவர்கள் விளங்கினர்.

சேரரது ஆட்சிக்குப் படிப்படியாக விரிவடைந்து தங்கள் நாட்டின் எல்லை வரைக்கும் வந்துகொண்டிருப்பதை அறிந்ததும், அதிகர் குடியினர் கவலைகொள்ளத் தொடங்கினார்கள். தங்கள் நாட்டைக் காத்துக்கொள் வதற்கான தற்காப்பு ஏற்பாடுகளை முயற்சியுடன் மேற் கொண்டு, தம்முடைய வலிமையைப் பெருக்கிக் கொள்ளத் தொடங்கினார்கள்.

இடையில் இருவராருக்கும் நண்பரும் அன்பருமாக விளங்கிய சான்றோர்களின் தூது முயற்சியும் நிகழ்ந்தது. எனினும், இருவராரும் சமாதானமாகப் போவதற்கு இயலவில்லை.

எப்படியும் தகடூரைக் கைப்பற்றிவிட வேண்டுமென்ற உறுதி இரும்பொறையிடம் இருந்தது. இரும்பொறையைக் களத்தே எதிரிட்டு வெல்வது கடினமாதலின், கோட்டையைக் காத்து நின்று அழியும் வரைக்கும் போராட வேண்டுமென்ற நினைவு அதியனிடம் இருந்தது.

இருதிறத்தாரிடம் இப்படி உறுதிப்பட்டுப் போன போர்வெறி ஏற்பட்டிருந்த காரணத்தாலும், இருவரும் மிகவும் வலிய ஏற்பாடுகளுடனேயே போரிட்டிருந்த காரணத்தாலும், இந்தப் போரின் நிகழ்வுக்கு ஒரு தனிச் சிறப்பு காலத்தில் ஏற்படலாயிற்று.

இனி, இக்கச் சூழ்நிலையில், கொல்லிக் கூற்றம் எனப்படும் பகுதிக்கண் இருந்த வல்வில் ஓரி என்பான், பாண்டியரும் சேரப்பேரரசிற்குத் தடையாக இருந்தான். இவ்வல்வில் ஓரியை ஒழித்தாலன்றிச் சேரர் ஒருகாலும் நிலைப்படையச் செய்யமுடியும் இல்லை. தகடூர் நாட்டுக்குத் தெற்காக, காவிரியின் மீக்கரைக்கும் கொல்லிமலைக்கும் இடைப்பட்டுக் கிடந்தது இந்த நாடு. இதனை வென்றாலொழியத் தகடூரைச் சார்தல் இயலாத காரியமெனக் கருதிய சேரர்கள், அந்நாளில் திருக்கோவலூரிலிருந்து ஆண்டுவந்த மலையமானின் துணையினை நாடினர்.

மலையமான் பெரும்படையுடன் சென்று போரிடக் கொல்லிக் கூற்றம் வீழ்ந்தது. கொல்லியின் வீழ்ச்சி தகடூர் அதியமானைக் கலக்கத்துக் குள்ளாக்கிற்று. அவன், மலையமானின் செயலை நினைந்து வேதனைப்பட்டான். செல்வத்திற்கு விரும்பி, பகைமேலும் இல்லாத காலத்திலேயே, சேரர்க்குத் துணைநின்ற மலையமானின்

செய்வதை என்ன என்ன. அதிகமானின் ஆத்திரம் மிகுந்தது. அவனை அழித்தால் ஒழிய வேறு வழியில்லை என்ற முடிவிற்கு அதிகமான் வந்துவிட்டான்.

இதே சமயம், பாண்டியரும் சேரப் பேரரசை நினைந்து வேதனை கொண்டிருந்த சோழர்கள், தம் பேரரசுக்கு கட்டுப்பட்ட மலையமான், தம் நண்பனாக விளங்கிய வனும், சேரரது நாட்டாசைக்குத் தடைக்கல்லாக நின்ற வனுமான கொல்லிக் கோமானை அழிக்கத் துணைசெய்ய அதிகனோடு பொருந்தியிருந்தனர். அதிகனும் சோழரும் மலையனை ஒழிப்பதிலும், சேரரின் நாட்டாசைக்கு முடிவு கட்டுவதிலும் தமக்குள் ஒத்துழைப்பதென்று முடிவு செய்தனர். இந்த முடிவின்படி நிகழ்ந்த திருக்கோவலூர்ப் பெரும்போரிலே மலையமான் வீழ்ந்தான்; அவன் வலிமை முற்றவும் அழிந்தது.

மலையமானின் சிறந்த வள்ளன்மையைக் கபிலர் பெருமான்,

நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
வறிது பெயர்குநர் அல்லர் நெறிகொளப்
பாடான் றிரங்கும் அருவிப்
பீடுகெழு மலையற் பாடி யோரே. (புறம் 124)

என்று பாடுவர். இத்தகைய மலையமானை, தன்னுடைய படையாண்மை காரணமாகத், தனக்கொரு நிலையென் பது யாதுமின்றிச் சோழர்க்குத் துணையாகியும், சேரர்க்குத் துணையாகியும், அதனாற் பெறுகின்ற பெரும்பொருளே தனக்குக் குறிக்கோளாகக் கொண்டமை யின், இப்படி முடிவில் அழிவெய்தினான்.

அதிகனது இந்தக் கோவலூர் வெற்றியை ஔவையார் போற்றிப் பாடுவர்—(புறம் 99). அதன்கண் 'முரண் மிகு கோவலூர் நூறிநின் அரணடு திகிரி ஏந்திய தோளே'

என, அவன் தோளாற்றலைப் பாராட்டும் ஔவையாரின் சொற்கள், கோவலூர்ப் போரின் கடுமையினை நன்கு காட்டுவதாகும். முடிவில் கோவலூர் சேரர் வசமாகியது. தகடூர் அதிகமான்கள் சற்று மனத்தெம்பு பெறலாயினர்.

இதனிடையே, தொண்டையர் கோமானுக்கும் அதிகமானுக்கும் எல்லைத் தகராறுகள் பல நிகழ்ந்தன. அதிகமானை அழித்துவிடத் தொண்டைமான் முனைந்தான். ஔவையாரின் தலையீட்டினால் இவ்விருவர்க்கும் தோன்றிய பெரும்போர் சமாதானத்தில் முடிந்தது. இங்ஙனம், தொண்டைமான் போரொழித்துச் சமாதானமாகிவிடச் சேரர்கள் பெரிதும் மனம் வருந்தினர்.

இந்நிலையில், எழுவர் குறுநில அரசர்கள் தகடூர் அதிகமான் மீது பகைமை கொண்டனர். அவனை அழிக்க முயன்று படையெடுத்து எதிர்த்தும் சென்றனர். இந்தப் போர்களிலெல்லாம் வெற்றி அதிகமானுக்கே வாய்த்தது. எழுவரது வலிமையும் அழிந்து ஒழிந்தது. இதனைச் 'செருவேட்டு, இமிழ்குரல் முரசின் எழுவரொடு முரணிச் சென்றமர் கடந்துநின் ஆற்றல் தோற்றிய அன்றும் பாடுநர்க்கு அரியை' என வரும் ஔவையார் வாக்கினால் அறியலாம்—(புறம் 99).

இவ்வாறு, தம்மைப் பகைத்த பகைவரும் வெல்லு பகையின்றிச் செருக்குடன் திகழ்ந்தனர் அதிகமான்கள். சேரரது நட்பும் அவர்கட்கு இருந்தது. இந்த நிலையில், சேரரது ஆத்திரம் நாளுக்குநாள் மிகுதியாகிக் கொண்டே போயிற்று. பொறுமை குறைபட்டவர்களாய்த் தாம் நேரிற் சென்றே தகடூரைக் கைப்பற்றிவிட வேண்டுமென்ற முடிவிற்கு அவர்கள் வந்துவிட்டனர்.

இந்த முடிவிற்கு அவர்கள் வந்ததன் பின்னர், அதனைச் செயற்படுத்தத் தகுதியான ஒரு சந்தர்ப்பத்தை ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். அது, ஆயர்த் தலைவனான கழுவுள் என்பவனின் குறும்போடு வந்து சேர்ந்தும் இருந்தது.

முள்ளூர்ப் பகுதியிலிருக்கும் திருக்கோயிலூர் அக்காலத்தில் கோவலூர் என வழங்கியது. அதன் தலைவனாக விளங்கியவன் காரி என்னும் ஆய்குலத் தலைவன். சேர நாட்டின் சேரது செல்வாக்குப் பெருகி வருவதறிந்து அவனை வென்றடக்கும் இயல்பும் ஒருவன். இந்தப் பகைமை காரணமாகக் காரி அதிகமானின் நட்பும் ஆதரவும் இவனுக்குக் கிடைப்பதாயிற்று. அந்த வகைத் தான், இவன் தென்கொங்கு நாட்டின் பகுதிகளுட் புகுந்து திரை கவர்ந்தும் கொள்ளையிட்டும் கொடுமைகள் பலவற்றைத் தொடர்ந்து செய்து கொண்டு வந்தான்.

காரியின் செயலைப் பொறுக்கமாட்டாத அந்தக் கொங்குப் பகுதியின் தலைவர்கள் ஒன்றுகூடிப் பெருஞ்சேரலிடம் சென்று காரியை முற்றுகையிட்டுத் தீக்கிரையாக்கிக் காரியின் செருக்கைத் தொலைத்தனர். காரியும் தோற்றுத், தகடூர் நாட்டையடுத்துள்ள மலைப் பகுதிக்குத் தன்னைச் சார்ந்தாருடன் ஓடிவிட்டான்.

கொல்லிக் கூற்றத்து ஓரியை அழித்துவிட்டபின், அது சோழநாட்டைச் சேர்ந்து, வல்வில் ஓரி தலைமையின் கீழ் விளங்கியது காரிக்கு உதவியாக இருந்தது. அத்துடன், அதிகமானின் நண்பர்களான வேளிர்குலத் தலைவர்களும் இனும். சேரர்மீது பகைமை கொண்டிருந்தமையால் காரிக்கு ஊக்கமும் உதவியும் தந்து வந்தனர். இதனால் காரியும், கொல்லிக் கூற்றத்தைத் தனக்குரியதாக்கிக் கொண்டு, அங்கு நிலவியிருந்த சேரது ஆட்சிமுறையினை அழித்தும் விட்டான்.

காரியனது இந்தச் செயல் எரிகின்ற நெருப்பிற்கு எண்ணெய் வார்த்தது போலாகச், சேரன் பெருஞ் சேரல் இரும்பொறை, காரியைப் பெரும்படையுடன் அழிப்பது கருதிப் புறப்பட்டுவிட்டான்.

காரிக்கு உதவிநின்ற வேளிர்கள், கடமை கருதி ஒன்றுகூடிச் சேரப் பெரும்படையைக் கண்டதும் பகை

துறந்து பணிந்து போயினர். கழுவுள் கோட்டைக்குள் அடைத்துக் கிடந்தான். சேரமான் கோட்டையை முற்றுகையிட்டுக் கடுமையான தாக்குதலை நிகழ்த்தச் செய்வதைப் பொறாது நினைந்த கழுவுள், தன் அழிவுக்குக் காலம் வந்ததை உணர்ந்து கொண்டான். அழிவது அல்லது இரும்பொறையைப் பணிந்து வாழ்வது என்னும் இரண்டினுள் ஒன்றைத் தேர்ந்துகொள்ளும் நெருக்கடி ஏற்பட்டது. முடிவில், பணிவதையே தேர்ந்துகொண்ட கழுவுள், தானாகச் சென்று இரும்பொறையைப் பணிந்து நிற்க, அவனும், கழுவுளை மன்னித்துத் தனக்கு அடங்கியவனாய் வாழ்வதற்கு இசைவளித்தான்.

இதன்பின், அதியமான் ஒருவன்தான் சேரர்க்குப் பகைவனாக எஞ்சிநின்றான். தகடூர் நாடு தவிரப் பிறவனைத்தும் சேரரது காவலுக்கு உட்பட்டனவாயின. அதியமான், இதனால் தளர்ந்து விட்டானில்லை. தன் உரிமையைக் காத்தற்குப் போரிடவே முனைந்து நின்றான்.

சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறையின் படையெழுச்சியின் எல்லைக்கண்ணதும் தகடூரைக் கைப்பற்றுவது ஒன்றுதான் எஞ்சி நின்றது. அதனை வென்றன்றி மீள்வதில்லை என்ற உறுதியுடன், தக்க வாய்ப்பினைக் கருதியவனாய், அவன் தகடூர் எல்லைக்கண் பாடியமைத்து அவ்விடத்தேயே தங்கிவிட்டான்.

தகடூர்ப் போருக்கான சூழ்நிலைகள் பலவும் இவ்வாறாக வந்து ஒன்றுகூடி நின்றன. 'போர் எப்பொழுது தோற்றப்போகிறதென்ற' ஒன்றுதான் எஞ்சியிருந்தது. இவ்வளவும், உருவாகிய ஒரு சூழ்நிலையினை மனத்தே கொண்டோமானால், தகடூர் யாத்திரையின் சிறப்பிற்கான காரணமும் நமக்கு நன்கு விளங்கும்.

இனி, இந்தப் போரின்கண் எதிர்த்து நின்ற உறுதிப்பாரான சேரர்க்குத் தலைவனான பெருஞ்சேரல் இரும்பொறையைப் பற்றியும், தொன்மையரான தகடூர் மன்னன் அதியைப் பற்றியும் அறிந்துகொண்டு, மேற்செல்வோம்.

# 3. பெருஞ்சேரல் இரும்பொறை

அந்துவஞ் சேரல் இரும்பொறைக்கும் பொறையன் தேவிபால் பிறந்த மகன் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்பவன். இவன் தன் காலத்தில் பேராற்றலுடன் விளங்கியவன் ஆவான். சேரரது ஆட்சி கொங்குநாட்டுப் பகுதிகளில் கால் கொள்வதற்கான உறுதிப்பாட்டை மேற்கொண்டவன் இவனே எனலாம்.

இவனது சிறப்பினைப் பாடிய புலவர் கபிலர் பெருமான் ஆவார். பதிற்றுப்பத்துள் ஏழாம் பத்தாக அது அமைந்து இவனது பெரும்புகழை அழியாது நிலை பெறுத்துகின்றது.

பார்ப்பார்க் கல்லது பணிபறி யலையே
பணியா வுள்ளமொ டணிவரக் கெழீஇ
நட்டோர்க் கல்லது கண்ணஞ் சலையே
வணங்குசிலை பொருதநின் மணங்கமழ் அகலம்
மகளிர்க் கல்லது மலர்ப்பறி யலையே
நிலந்திறம் பெயருங் காலை யாயினும்
கிளந்த சொல்நீ பொய்ப்பறி யலையே.

(பதிற்று. 7—3)

என்னும் கபிலர் பாட்டு இவனது சிறந்த பல இயல்புகளையும் விளக்கி, இவனுடைய பெருமிதச் செல்வத்தினை உணர்த்துவதாக இலங்குகின்றது. குன்றுகட் பாலியாதனார் என்பாரும் இவனைப் பாடிப் போற்றியுள்ளனர்.

இவனுடைய வெற்றிச் செயல்களுள் குடநாட்டுப் பகுதி இருப்பு செய்த சதுக்கண்ணர் வேந்தனை வென்று

அவன் குறும்பினை அடக்கியதும், மற்றும் தன் ஆணைக்கு அடங்காது ஒழுகிய குறுநில வேந்தர்களை ஒடுக்கியதும் சிறப்புடையன. முடிவில், சிக்கற்பள்ளி என்றவிடத்தே நடந்த பெரும்போரில் இவன் இறந்தான். இரும்பொறைத் தலைவர்கள் அரசுவீற்றிருந்து தமிழும் அறமும் செய்வதாகத் திகழ விளங்கிய இவனது மறைவிற்குப் பின்னர் அரச கட்டில் ஏறியவன் பெருஞ்சேரல் இரும்பொறை என்பான் ஆவான்.

செல்வக் கடுங்கோவுக்கும் வேளாவிக்கோமான் பதுமன் தேவி என்பாளுக்கும் பிறந்தவன் இவன். 'பதுமன் தேவி' என்பதனைப் பதுமனின் மகள் என்றே பொருள் கொள்ளல் வேண்டும். பதுமனின் மகள் ஒருத்தி இமயவரம்பன் நெடுஞ்சேரலாதற்கு மனைவியாகி இருந்தனள் எனவும், அவள் மக்களாகத் திகழ்ந்தவர் களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரலும், ஆடு கோட்பாட்டுச் சேரலாதனும் எனவும், மற்றொரு மகளே செல்வக் கடுங்கோவின் மனைவியாகத் திகழ்ந்த சிறப்பினள் எனவும், முன்னரே செய்திகளை நாம் அறிகின்றோம். இவள் மகன்தான் இந்தப் பெருஞ்சேரல் இரும்பொறை என்பவன்.

ஆசிரியர் பெருங்குன்றூர்க் கிழார் பாடிய ஒன்பதாம் பதிற்றுப்பத்து, குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையைப் பற்றிக் கூறுவதாகும். அதன் பதிகம், 'குட்டுவன் இரும்பொறைக்கு மையூர்கிழான் வேண்மாள் அந்துவஞ் செள்ளை ஈன்ற மகன்' என அவனைக் கூறுகின்றது. இக்குட்டுவன் இரும்பொறை என்பானைப் பெருஞ்சேரல் இரும்பொறையாகவே கொண்டு, இவன் மகனே இளஞ்சேரல் என்பாரும் உளர். அவ்வாறாயின், இவன் மனைவியானவள், மையூர்கிழான் வேண்மாள் அந்துவஞ் செள்ளை ஆவாள். அன்றிக் குட்டுவன் இரும்பொறை பிறன் இவனினும் வேறாக இவன் தம்பியாகக் கொள்வாரும் உளர். அவ்வாறாயின், இவன் மனைவி

பற்றி எதுவும் அறிவதற்கில்லை என்றுதான் நாம் கூறுதல் வேண்டும்.

இந்தப் பெருஞ்சேரல் இரும்பொறை இளமைக்கண் சிறந்த போர்வீரனாகப் பயிற்சிபெற்று கல்வியறிவுடன் மட்டுமல்லாது, சிறந்த தமிழறிந்த சான்றோனாகவும் திகழ்ந்திருக்கின்றான். இந்த இவனுடைய தகுதிப்பாடான செய்யுட் சுவையில் ஈடுபட்டிருந்த சான்றோரான கபிலர் பெருமான் கொங்கரைத் துணையே காரணமா யிருந்திருக்கலாம்.

இவனுடைய தமிழ்ப்பற்றுக் குறித்து அவன் இளமையிலே நுனித்து கற்பதுடன் மட்டுமே அமைந்து விடவில்லை; தமிழறிந்த சான்றோரைப் போற்றிப் புரந்து பேணிய தன்மையினாலே — செயலாலும் உணர்த்தியிருக்கிறது. இந்தச் செய்தியை விளக்குவன வாக இரண்டு சம்பவங்கள் இலக்கியங்களிலும் கூறப்படு கின்றன.

ஒன்று, முரசுகட்டில் அறியாதேறிய மோசிகீரனைத் தண்டு செய்யாது, அவன் துயில்கொள்ளும் வரையும் கவரி கொண்டு வீசியது. மற்றொன்று, தன்னைப் பாடிய அரிசில்கிழாருக்குத் 'தானும் கோயிலும் புறம்போந்து நின்று, கோயிலுள்ளவெல்லாம் கொண்மின்' என்று காணம் ஒன்பது நூறாயிரத்தோடு அரசு கட்டிற் கொடுத்த அந்த அருமையுடைய செயல்.

இவற்றுள் முன்னைய மோசிகீரனாரின், 'மாசற விசித்த' என்னும் புறப்பாட்டால் (புறம்-50) நாம் அறிகிறோம். வெற்றி முரசம் வீற்றிருக்கின்ற, நுரை முகந்தன்ன மென்பூஞ் சேக்கையிட்டிருந்த, அதன் தன்மை யறியாது ஏறிப்படுத்திருந்தார் மோசிகீரனார். அதனைக் கண்ட இரும்பொறை முறைப்படி வெட்டிக் கொன்றா னில்லை. சினந்து அவரைப் பிடித்துத் தண்டித்தானும் இல்லை. இவையாவிலும், அவன் நற்றமிழ் முழுதறிந்த

தன்மையனாதலின் பொறுத்தனன் எனக் கொள்ளற் பாலன. ஆனால் அவனோ, அதனோடும் அமையாது, அறியாமையைப் பொறுத்து நல் மனத்துடன் முழவுத்தோள் ஓச்சித் தண்ணென வீசியும் நின்றனன்! செயற்கரிய செயல் அது! அரசிருக்கையின் முறைமையைக்கூடத் தமிழறிந்த சான்றோரின் ஆற்றலைக் கருதி மறந்து விட்ட செயல் அது! எனினும், தமிழ்நெஞ்சின் தலைசிறந்த மன்னன் அவன்! ஆதலால், அவன் செயல் தமிழ்ப்பாடு கலந்து, பிறவற்றை எல்லாம் கடந்து பெருமைபெற்று உயர்கின்றது! தன்னையும், தன் பொறுப்பையும், தன் கடமையையும் நினைக்க மறந்தவனாக, உறங்கும் தமிழறிஞரின் உறக்கத்தைக் கலையவிடாது தண்ணென வீசிநின்றான் அவன்! பெருஞ்சேரல் இரும்பொறை, அதனால் பெருந் தமிழ் இரும்பொறையும் ஆகி, விளங்கு புகழுடன், தமிழுள்ளளவும் வீற்றிருக்கும் தகுதிகொண்ட சால்பினையும் ஆகிவிடுகின்றான். இதனைக் கண்டு வியந்து பாடுவார் மோசிகீரனார்; ஆனால், அவர் செய்யுளைக் கற்கும் பொழுதெல்லாம் நாமும் வியந்து அவனைப் போற்று கின்றோம். தமிழறிந்தாரை ஆட்சித் தலைவர்கள் மன்னர்கள் போற்றிப் பரந்துயர்த்த அந்தப் புகழமைந்த பொற்காலத்தின் நினைவு, இன்றும், தமிழறிந்தார்க்கு இன்றைய ஆட்சித் தலைவர்கள் தருகின்ற மதிப்பின் குறைபாட்டைக் காட்டும், பேறும் உயர்வுடைய ஒரு பெருஞ்செயலாக நிலைபெறுகின்றது.

இந்தப் பெருஞ்சேரல் இரும்பொறையின் மற்றொரு செயலும் இவனது வியப்பிற்குரிய உயர்வாகும். வளமான தமிழறிஞர்க்கு வாரிவழங்கிய வள்ளல்களின் செயல்களைக் காட்டிலும், இவனுடைய அன்பும் தமிழ்க் காதற் செல்வி நம்மை மெய்ச்சிலிர்க்கச் செய்வதாக விளங்கு கின்றது.

பதிற்றுப் பத்தின் எட்டாம்பத்து, இவனை ஆசிரியர் அரிசில்கிழார் பாடியதாக அமைந்திருப்பது. அந்தப்

பத்துச் செய்யுட்களையும் பாடிய அரிசில் கிழாருக்கு இவன் அளித்த பரிசில் யாது தெரியுமா? அதனைப் பதிகம் கூறுகின்றது:

> "பாடிப் பெற்ற பரிசில், தானும் கோயிலாளும் புறம்போந்து நின்று, கோயிலுள்ள எல்லாம் கொள்க என்று, காணம் ஒன்பது நூறாயிரத் தொடு அரசு கட்டில் கொடுப்ப"

என்று. இந்தப் பரிசிலைக் கேட்டதும் அரிசில்கிழார் அயர்ந்து விடுகின்றார். அவர் மட்டும் என்ன? கேட்பவர் எவருமே அயர்வடையத்தான் செய்வர். 'யான் இரப்ப இதனை யாள்க' என்று சொல்லி அமைச்சுப் பூண்டார் அவர்'' என்கிறது பதிகம்.

இங்ஙனம், தன் நாட்டையும், தன் அரண்மனைச் செல்வம் அத்துணையையும் ஒருங்கே அளித்துநின்ற அருந் தமிழ்ச் செம்மல் இவன்! இவனுடைய பெருந்தன்மைக்கு மின் குன்றா விளக்காக நின்று திகழ்கின்றன அரிசில் கிழாரின் செய்யுட்கள்.

இவனுடைய போர்மறத்துள் குறிப்பிடத் தகுவன, ஆயர் அண்ணலாகிய கழுவுளை வென்றதும், மற்றும் குறும்பு செய்த குறுநில மன்னர்களை வென்று பணிவித்ததும் ஆகும். இவனது போர்மறத்துள் தலைமை பெற்றது தகடூர்ப் பெரும்போர். அதன் வெற்றி காரணமாகத் **தகடூர் எறிந்த பெருஞ்சேரல்** இரும்பொறை என்ற பெயரும் இவனுக்கு ஏற்பட்டது.

பகைத்து எழுந்தாருடன் போரிடும் அமையமறிந்தும் பெருந்திரளினை உடையவராயினும், அவரே பணிந்து திறைபகர்ந்தாராயின், அவர்க்கு அருள்செய்து திருவின்ற அன்பு பண்பினை உடையவனும் இவன் ஆவான். 'மேம் பன்னாற் பற்றப்பட்டாரது உயிரினைக் கொல்லாமல், தனக்கிட்ட பணியைமட்டும் பெற்றுச் செல்லுதலேபோல, நிலம் இறையைக் கைக்கொண்டு அவர் உயிரைப் பறியாது

போகின்றாய்' (பதிற்: 81 : 33-4) என்றும் அறிவிக்கிறார் வாக்கு, இவரது பேராண்மையினை நன்கு காட்டுகின்றதும். பொங்கு பிசிர் குடக்கிய செஞ்சுடர் நிகழ்மின் மடங்கல் தீயின் அனையை' என, இவன் தன் பகைவரை மிகுந்து அழிக்கின்ற கருணையின்மையினைக் குறிப்போர்ந்து நின்றவாறு அறிவிக்கிறார் (பதிற்: 72 : 14 - 15).

'காவிரி மண்டிய சேய்விரி வனப்பின்
புகாஅர்ச் செல்வ! பூழியர் மெய்ம்மறை!
கழைவிரிந் தெழுதரு மழைதவழ் நெடுங்கோட்டுக்
கொல்லிப் பொருந! கொடித்தேர்ப் பொறைய.'

(பதிற்: 73;8-11)

என வரும் செய்திகள், இவன் காலத்தைய சோழ பாண்டியரும், இவனுக்கு எதிர்நிற்கத் துணியாராய், இவனுடன் இணைந்து நின்றே வாழ்பவராயிருந்தனர் என்பதனைக் காட்டும்.

இவனுடைய தேவியானவள் கற்புநலமும் பொற்பு நலமும் ஒருங்கே அமைந்த செல்வியாக விளங்கினாள். இதனைப் பதிற்றுப்பத்தின் 74-ஆவது செய்யுள் இனிதாக எடுத்துரைக்கும். அதன்கண்,

'சால்புஞ் செம்மையும் உளப்படப் பிறவும்
காவற் கமைந்த அரசுதுறை போகிய
வீறுசால் புதல்வற் பெற்றனை.'

என வருவன, பெருஞ்சேரல் இரும்பொறைக்கு அறிஞனாக மகன் ஒருவனை அவன் மனைவி பெற்றுத்தந்த சிறப்பினை விளக்கும்.

'அனைத்தும் முன்னைத் தவத்தினை உடையவர்க்கே வந்து வாய்ப்பன என்ற' கோட்பாட்டுக் குறிப்பிட்டவன் பெருஞ்சேரல் ஆவான், இதனை,

'முழுதுணர்ந் தொழுக்கு நரைமூ தாளனை
வண்மையும் மாண்பும் வளனும் எச்சமும்
தெய்வமும் யாவதும் தவமுடை யோர்க்கென
வேறுபடு நனந்தலைப் பெயரக்
கூறினை பெரும' நின் படிமை யானே.

(பதிற்: 74; 33-38)

என்பதனால் அறிகின்றோம். வயதால் முதிர்ந்தவனும், கேள்வியால் முழுதுணர்ந்தொழுகியவனுமாகிய ஒருவனுக்கே உண்மைநெறி உணர்த்திக் காட்டும், உயரிய செம்மையாளனாகவும் இவனை நாம் காண்கின்றோம்.

'வேந்தரும் வேளிரும் பிறரும் கீழ்ப்பணிந்து
நின்வழிப் படாஅ தாயின்'

முற்றவும் அறியவுடையர், எனக் கூறுகின்ற எழுபத்தாறாவது பதிற்றுப்பத்தும் இவனது வெற்றிப் பெருமிதத்தை எடுத்துரைத்துப் போற்றுகின்றது.

பெருஞ்சேரலின் படைப்பெருக்கம் எப்படி இருந்ததென்பதனைக் கூறும் 77-ஆவது பதிற்றுப்பத்துச் செய்யுள், 'தொக்கன், ஆபரந்தன்ன செலவிற் பல், யானை காண்பல் அவன் தானை யானே' எனவும் 'மீன்பூத் தருண்ட தேஎர் ஆறியிர், பன்னாளை தேரும் மாவும் மாக்களும், எண்ணற்கு அருமையின் எண்ணின்றோ இலனே' எனவும் உரைக்கின்றது.

இவனுடைய தகடூர் வெற்றியை உரைக்கும் எழுபத்தெட்டாவது பாட்டை நாம் நன்றாகவே கவனிக்க வேண்டும்.

"வெண்மைத் தன்மையினையுடைய மகளிர் அகைந்து நடந்து சென்று, வயற்புறங்களிலுள்ள மலர்ந்த இதழ்களையுடைய தாமரைப் பூவையும் நெய்தற்பூவையும் கொய்துகொண்டு வருவர். முல்லைப் புறத்துச் சென்று புனந்தோறும் வந்து படிகின்ற கிளிகளை ஓட்டும் விருப்

யினராகச் செல்வப் பாட்டைப் பாடுவர்; மலைகளைப் பலவிலும் நிலைபெற்ற காட்டிடத்து ஊர்களும், வென்று மிக்க போரையுடைய வீரர்கள் மறமாண்மையை மட்டுமே விரும்பினோராய் நின்று காக்கும் விற்படை நிரம்பிய காவற்காடும் விளங்கும்; இத்தகைய சிறப்புடைய தகடூரினை அழித்தனை'' என்று அரிசில்கிழார் கூறுவர். அப்பொழுது 'ஆடுகள் பரந்தாற் போலப் போர்க் குதிரைகளும், மாடுகள் பரந்தாற் போலப் போர்க் களிறுகளும்' இடமெங்கணும் பரவி நின்றன. (பதிற்.78: 4-14). என்கின்றனர் அவர்.

இவ்வாறாகப், பெருமையுடையும், பெரும் போராண்மையும், பெருந் தமிழன்பும், அருள் உள்ளமும், ஒருங்கே நிலைபெற்ற ஆண்மையின் உருவாகத் திகழ்ந்தவன் சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை ஆவான். இவனுடைய இத்தகைய தலைமைகளை நாம் அறிந்து கொண்டால், போரின்கண் வெற்றி இவனுக்கே வாய்த்தல் வேண்டுமெனக் கருதி விழைவோம். ஆயின், இவனுக்கு எதிர்நின்ற அதிகனும், இத்தகு நற்பண்புகளாற் சிறந்தவனாதலை அறியும் பொழுதுதான், இவ்விருவரும் பொருதாது நட்பினராகி உயர்ந்திருக்கக் கூடாதா என்று ஏக்கம் அடைவோம். அதிகனைப் பற்றிய செய்திகள் சிலவற்றை இனிக் காண்போம்.

# 4. அதிகமான் எழினி

**சே**லம் மாவட்டத்தில், சேலத்திலிருந்து கிருஷ்ண கிரிக்குச் செல்லும் வழியில், தர்மபுரி என்றொரு ஊர் இருக்கிறது. தர்மபுரி மாவட்டத்தின் தலை நகரம் இது. இதன் பெயர் தர்மாபுரி என்று வழங்கி வந்ததாகவும், பின்னர்த் தர்மபுரி என்று ஆயிற்றெனவும் கூறு கின்றார்கள்.

இந்நாள் தர்மபுரி என்னும் ஊர்தான் சங்க காலத்திலே, பெரும் புகழுடன் தகடூர் என்று இருந்தது. இதன்கண் அரசு வீற்றிருந்து, இதனையொட்டியமைந்த நாட்டுப் பகுதியை அதிகமான்கள் என்னும் அரசகுடியினர் ஆண்டு வந்தனர்.

மேலை தேசத்திலிருந்து கரும்பை இந்நாட்டிற்குப் பயிரிடக் கொணர்ந்து பரப்பியவர்கள் இவர்களே என்ப தனை அகநானூற்றுச் செய்யுட்களால் நாம் அறி கின்றோம். அத்துடன், இவர்கள் சிறந்த படைமறவர் களாகவும், தமிழ் அன்பர்களாகவும் இருந்திருக் கிறார்கள். அறத்திறமான வகையில் குடியோம்பிய சிறப்பும் இவர்கட்கு உண்டு.

இந்த அதியர் குடியினருள், நாம் முதலாவதாக அறிவது, அதிகமான் நெடுமான் அஞ்சி என்பவனைத் தான். இவனுக்கு முற்பட்டிருந்த அதியர்கள் பற்றிய செய்தியில் எதனையும் நம்மால் அறிந்திட இயலவில்லை. 'அதியமான்' என்ற சிறப்புப் பெயரைத் தன் பெயரின் முன்பாகக் கொண்டதுபோல, 'எழினி' என்ற பெயரினை

இவர்கள் தம் பெயரில் பிள்ளைகளைக் கொண்டிருந்தனர். மேலும், சேரர்களது குடியினருள் ஒருவராக இருந்தவ ரான், சோழர்களோடு [illegible] இடைக்காட்டுக் [illegible] [illegible]. இதற்குச் சான்றாகக் கல்வெட்டுகள் பல உள்ளதை நாம் அறிவோம். மேலும், தஞ்சைப் போர்க் களம் அதிகாரிகள் வீழ்ந்த பின்னர், வெற்றி வீரனாகத் திகழ்ந்த சோழன், [illegible] [illegible] [illegible], இறைப்புக் கடன்களைச் செய்து போற்றியும் வழிபாடு செய்ததையும் நினைத்தால், இந்த உறவுநிலை நன்கு உறுதிப்படும்.

தஞ்சைச் சோழர் ஆட்சிக் காலத்திலே அதிகாரி களாக இருந்தவருள், அந்தணர் செம்பியன் அநிருத்தனை யும், அவன் மகனாகிய பொருட்டெழுதினனையும் கருத் துக்கள் நிலவுகின்றன. அதிகாரி அநிருத்தன் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த போர், அவன் வீழ்ந்த பின்னர், அவன் மகன் பொருட்டெழுதினன் காலத்தும் தொடர்ந்திருக்க லாம் எனவும், இதுவே தஞ்சைப்போரில் அதிகாரம் வழிவழி யாய்ச் சோழர் வென்றதன் [illegible] பொருளாக லாம் எனவும் கொள்வார்கள் சிலர். இது ஏரளவு உண்மையாக இருக்கக்கூடியதே யாகும். போரினது [illegible]. இருசாரரும் அருகே முன்னேறுவதோ டுறும் [illegible] நிகழ்த்தனராதலின், போர்க் காலம் ஒரு சில ஆண்டுகள் வரை நீடித்திருந்தமையும் பொருந்துவதே.

தஞ்சை அதிகாரிகளுள் நாம் சிறப்பாக அறிந்துகொள்ள சிறப்பினையுடைத் திகழ்பவன் அதிகாரி செம்பியன் அநிருத்தன் என்போம். இவனுக்கு முற்பட்டவர் யாவரென்பதனை நாம் அறிந்திலேம். இவன் மகன் பொருட்டெழுதினி என்பதும், இவன் அந்தை மகள் [illegible] [illegible] சிறந்த தமிழ்ப் புலமையுடன் திகழ்ந்தாள் என்பதுமே இவன் குடும்பத்தைப் பற்றி நாம் அறியக் கூடியனவாக உள்ளன.

**கீழ்த் தனையே அறனில் கூற்றம்**
**வாழ்தலின் வருஉம் வயல்வளன் அறியான்**
**வீழ்குடி உழவன் வித்துண் டாஅங்கு**
**ஒருவன் ஆருயிர் உண்ணாய் ஆயின்**
**நேரார் பல்லுயிர் பருகி**
**ஆர்குவை மன்னோ, அவன் அமரடு களத்தே.**

அரிசில் கிழாரோ தமிழ்நாட்டு வேந்தனான சேரமானின் பாசறைக்கண் இருந்தார். போரிடை அதியமான் வீழ்ந்ததும், தகடூர்க் கோட்டை சேரமானின் கைப் பட்டதும், அந்த வெற்றிச்சிறப்பிபோல், வீழ்ந்த அதிகனின் புகழ்ச் சிறப்பாலும் அவருள்ளம் நிறைகின்றது. அவனைத் தாக்குப் பகைவன் எனச் சேரர் கருதினும், அவன் ஆண்ட நாட்டிற்கு அரியவற் செல்வமாலும் சிறந்தவனாகவே விளங்கினன். இதனை உணர்ந்த அரிசில்கிழார் அவனை இழந்ததனால் வருந்தி நிற்க விளங்கிய தகடூர் நாட்டுக் குடிமக்களைக் கண்டதும், அதிகனின் இறப்பினை நினைத்து கலங்கிப் பக்கப் பாடி அவன் புகழைப் பாடுகின்றார்.

இனி, அரிசில் கிழாரைப் போலவே, அதிகனின் அவை யிடத்திருந்தே, அவன்பால் பேரன்பினராகி, அவன் நாள்தோறும் பெரிதும் சிறப்பு கொண்டவராகி இருந்த ஔவை யாரின் தமிழ் உள்ளம், அதிகனின் இறப்பினால் கசிந்து கசிந்து நலிந்த தன்மையையும் காண்போம்.

'வெட்டுச் சுட்ட கொல்லை நிலம் குறவரால் அறுக்கப்பட்ட பாத்திகளின் கதிர்ப் பரந்த கடைய வாயில் கிடக்கின்றன. அத்தகைய நொந்துறுடைய விறகால் அடுக்கப்பட்ட, சமத்தின் எல்லை எரிக்கிற நுள்ளி அழவிட்டதே. நின் உடல் கடப்பினொடு சென்று சேர்ந்தாலும் சேர அவ்வாறு சேராது பேரா ஒளிரு வானத்துப் பொருக்கு நுண்ணும் முன்னும் அதிகனனோ! இனித் தடாரி கதிழ்ந்துப் போன்ற வெண்கொற்றக் குடையினை உடையோனே! துளிர்ந்த

துபோலவே நின் புகழ் என்றும் மறைவதும் மறையாது" என்று அதியனின் புகழ்ப் பெருமையைப் பாடுகின்றார் ஒளவையார்.

எறிபுனக் குறவன் குறையல் அன்ன
கரிபுற விறகின் ஈம ஒள்ளழல்
குறுகினும் குறுகுக குறுகாது சென்று
விசும்புற நீளினும் நீள்க பசுங்கதிர்த்
திங்கள் அன்ன வெண்குடை
ஒண்ஞாயிறு அன்னோன் புகழ்மா யலவே

(புறம் 231)

அதியமானின் உடலை எரித்திட்டு எரித்துச் செய்யப் பதிவைத்திருந்த எலும்பும் செய்து, உடன்குலத்தைச் சேரமானே வென்றிடலாம், வெற்றி மிகுந்திடன், வீரப்பெருமையை இந்தச் சொல்லும் கவிந்து காட்டக் கல் வைத்து நிற்கின்றனர் அதியன் மக்கள். ஒளவையார் சொல்கிறார்.

அடுத்து அவனுக்கு நடுகல் நாட்டிப் பீலிசூட்டி அவன் பெயரும் பொறித்து, நடுகல் வழிபாடும் செய்து நின்றனர். அப்பொழுது, நடுகல்லின்கண் நிறுத்திய அதியனாருக்குக் கள் வார்க்கின்றனர். ஒளவையார் கண்டு கலங்கிச் சோர்கின்றனர். ஆயின் சங்கர் கண்ணீரை வார்க்கின்றனர். அவர் உள்ளம் எங்கேயோ சென்று சுழல்கின்றது.

சேரமானோடு பகைமை நீக்க நெடுநெடுங்காலத்துப் பணிந்து போருடைய அதியமானர் பகைமுனை அவரே சென்று பெருமையின் எடுத்துக் கொண்டிருக்கின்றனர். எனினும், முந்திய பகைமையும் மாறாமல் அதியமானை அழித்திருந்த மறுத்துவிடுவது செய்து விட்டன. அந்த நெஞ்சினையை நினைத்து அதியமானார் வருந்துகின்றார். சேரமானைப் போர்த்துறையர், அவ் விட்டுச் சென்றிருந்த இந்தச் செய்தியையும் நினைவுபடுத்துகின்றார்.

"மூங்கில் விளைந்து விரிந்தவையாக மலையை நோக்கி உயர்ந்தெழுகின்றதும், மாமேகம் தவழ்கின்றதுமான நெடிய உச்சியினையுடைய கொல்லி மலைக்குத் தலைவனே! கொடி விளங்கும் தேர்மேற் செல்லும் பொறை நாட்டின் முதல்வனே!

நின் வளமையும் ஆண்மையும் கொடைத்திறனையும் பற்றி, அவை மக்களது அளவிறந்தனவாகும் அளவிறந்தன என்று நன்மையாளரால் பலமுறை சென்று உரைத்தேனே. உரைப்பவும் நின் பகைவர் தெளிவுற்றார் இல்லையே! பிறராகிய சான்றோர் எடுத்துச் சொல்லினால் தெளிவரென்று கருதி, அவ்வாறின் முயன்றேனே! ஆங்கிட்டத்தும் பகைமையால் தம் மதிமருண்டு அவர் நின்னைப் பகைத்துப் போதலையே காண்பேன்! இந்த வகை யான் மயங்கியவர்க்கு எவ்வாறு உரைத்துத் தெளிவிப்ப தென்றெண்ணியும் வருந்துவேனே!"

கழைவிரிந்து எழுதரும் மழைதவழ் நெடுங்கோட்டுக்
கொல்லிப் பொருந கொடித்தேர்ப் பொறைய! நின்
வளனும் ஆண்மையும் கைவண்மையும்
மாந்தர் அளவிறந் தனவெனப் பன்னாள்
யான்சென்று உரைப்பவும் தேறார் பிறரும்
சான்றோர் உரைப்பத் தெளிகுவர் கொல்லென
ஆங்குமதி மருளக் காண்குவல்
யாங்குரைப் பேனென வருந்துவல் யானே!

(பதிற். 73)

இதனால், தகடூர்ப் போரின் நிகழ்ச்சிக்கு முன்னரே அதிகமானையும் சேரமானையும் சமாதானம் செய்து வைக்க அரிசில்கிழாரும் பொன்முடியாரும் ஔவையாரும் பிற தமிழ்ச் சான்றோரும் பெரிதும் முயன்றனர் எனவும் அறியலாம். அந்த அறிவுரைகளை ஏற்காது, மானமே பெரிதாகப் போரிட்டு மாண்டவன் அதியமான். ஔவையார் மனமும், அவ்வகை நிறுத்து வந்த சான்றோர்

சொல்லிய சொற்களை நினைக்கின்றது. நடுகல்லையும் நோக்குகின்றது.

'அதியமானே!' எனக் கூறிக் கதறுகின்றார். அருகில் நின்ற அரிசில்கிழார் முதலியோர் தேற்றவும் தெளியாத் [illegible] ஔவையார் புலம்புகின்றார்!

'அதியமானை இழந்தேன்! அவனை இல்லாதே கழிகின்ற காலை என்பதும் மாலை என்பதும் எனக்கு இனி இல்லாமற் போவதாக! யான் வாழ்கின்ற நாள் என்பதும் எனக்கொரு பயனாதல் இல்லாமையின், அதுவும் இல்லையாகிப் போவதாக!

'அந்நாளிலே, சிகரம் ஓங்கிய உயர்ந்த குன்றுகளை பொருந்திய நாடு முழுவதையும் நீங்கள் கொடுப்பினும், அதனை ஏற்றுக் கொள்ளாது, வேண்டாமென்றே வெறுத்தொதுக் கினான் அவன்.

'இந்நாளில், நடுகல் நாட்டிப், பீலி சூட்டி, நாரால் அரிக்கப்பெற்ற தேறலைச் சிறுகலத்திலே நீங்கள் வார்க்கின்றீர்கள். இதனை அவன் ஏற்றுக் கொள்வானோ? அவன் ஏற்கவே மாட்டான்' என்று மனம் கருகிக் கலங்குகின்றார் அவர்.

இல்லாகியரோ காலை மாலை
அல்லாகியர் யான் வாழும் நாளே
நடுகல் பீலிசூட்டி நாரரி
சிறுகலத் துகுப்பவும் கொள்வன் கொல்லோ
கோடுயர் பிறங்குமலை கெழீஇய
நாடுடன் கொடுப்பவும் கொள்ளா தோனே!

(புறம்-232)

'தகடூர் நாடு தமக்கு உரியது' என்பதில் உறுதி பூண்டவன் அதியமான். தன் உரிமைக்குப் பகைவனாகிச் சேரமானை அடிபணிந்து, அவன் அந்நாட்டைத் தனக்கு அளிக்கப் பெற்று வாழ்கின்ற நிலையினை அவன் ஏற்க இசைந்தானில்லை. தன் நாட்டைக் காத்து நின்று

சாவையே தழுவினான். அவன், இன்று இந்தக் கனியை நீங்கள் பார்த்தால் எந்தக் கொள்வரோ? என்று இருந்திருந்த ஒளவையாரின் சொற்கள், அதியமானின் தமிழ்ப்பற்றுக் கருதியின் உறைகல்லாக நிலவுகின்றது.

அதியமானின் இத்தகைய பெருமிதத்தின் செல்வியை மனத்திலே கொண்டு பார்த்தோமானால், தமிழின் வித்தி எத்துணைப் பெரிதான ஒரு வரலாற்று நிகழ்ச்சி என்பது நமக்கு விளங்கும்.

ஒளவையாருக்கும் அதியமானுக்கும் நட்பு ஏற்பட்டதே ஒரு சுவையான கதையின் ஆகும். அதியமானிடம் பரிசில் நாடிச் சென்றனர் ஒளவையார். அவரது தமிழ்ச் சிறப்பினை நுகர்ந்த அதியமானுக்கு அவரை விரைவில் செல்லவிடுத்து மனமில்லை. அதனால், அவருக்குப் பரிசில் கொடுக்காது காலத்தை நீட்டிக்கொண்டே போயினான்.

அதியமானின் உள்ளக்கருத்தினை அப்போது அறியாதவராகிய ஒளவையார், அவனது செயலின் நோக்கத்தைத் தவறாகவே கொண்டனர். பரிசில் தராது தம்மைக் கழிக்கவே அதியமான் காலத்தை நீட்டிப்பதாகக் கருதி விட்டனர்.

ஆதலால், தம் நட்டுடைமைக் கட்டிக் கொண்டு அரண்மனையினின்றும் வெளியேறிக் கொண்டிருந்த ஒளவையாரை, வாயிற்காவலனாக நின்றிருந்த அதியமான் தடுத்து நிறுத்தினான். அவரது முகமை உணர்ந்து அதனைத் தடுத்திட நினைந்தே அதியன் வாயிற் காவலனாகப் புனைந்து கொண்டு நின்றிருந்தான்.

வாயிற் காவலன் தம்மைத் தடுத்ததும், ஒளவையாரின் சினம் பொங்குகின்றது. காவலன் பரிசில் வழங்கத் தீட்டுக்க, இவன் வெளிச்செல்ல விடாதும் தடுத்தல் தவறே என வெகுண்டனர். அவ்வேளை, 'வாயில்

அதியமான் பரிசில் தராது நீட்டித்தது உண்மைதான்; எனினும் அவ்வாறு விடுப்பான் அல்லன்; எனவே, நான்கள் இருக்கலாகாது எழுகின்; யான் சென்று சேர்ப்பேன்' என்கின்றனர்.

''வாயிற்காவலனே!

''வள்ளன்மை உடையவரது செவியிடத்தே விளங்கிய சொற்களை விதைத்து, அதன் மூலம் தாம் நினைத்த பரிசிலை விளைத்துக் கொள்வதற்கு வலிமையுடைத்தான நெஞ்சினை உடையேம் யாம். மேம்பாட்டிற்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கை வாழ்க்கையை உடைய எம்போல்வார்க்கு அடைத்திராத வாயிலைக் காத்து நிற்பவனே!

''விரைந்த குதிரையை உடைய தலைவனாகிய அதியமான் அஞ்சி, தான், தன் தரத்தினை அறிய மாட்டானோ? அல்லது, என் தரம் யாதெனத் தான் அறிந்தானில்லையோ?

''அறிவும் புகழும் உடையவர்கள் இறந்தாராக, அத்தகையோர் அற்றுப்போய்த் தனால் வறுமையுற்றுக் கிடக்கின்ற உலகமும் இதுவன்றோ! அதனால், எம் கலன்களைக் காவினேம்; எம் முட்டுக்களையும் கட்டினேம்.

''மரத்தைக் கொல்லும் தச்சன் பெற்றவரும், வலிய மழுவினைக் கொண்டவருமான கைத்தொழில் வல்ல மக்கள் காட்டிடத்துச் சென்றால், அக்காட்டகம் பயன்படுவதின்று வறுமை எய்தப் பட்டது?

''அப்படியே எமக்கும், எத்திசை இசைவிடத்துச் செல்லினும், அத்திசைக்கண் சோறு தப்பாமற் கிடைப்ப தாகும்'' என்றனர்.

(புறம் 206)

இதனைக் கேட்ட அதியமான், தன் அறியாமைக்கு நொந்து கொண்டான். தன்னை வெளிப்படுத்தி நின்று

பொருத்தமுள வேண்டியவனாக, ஔவையாருக்கு வேண்டிய பரிசிலை அளித்து வழியனுப்பினான். அவ னைப் [illegible] அந்தக் கொடைத் திறனை வியந்து, தாம் கொண்ட அவா முடிவுற்று [illegible] கொண்டது.

மற்றொரு சமயம், இதே போன்று அதியமான் பரிசில் நீட்டிக்கப் புலவர் வெறுப்புற்று வெளியேறக் கண்ட ஔவையார், அவரைத் தடுத்து நிறுத்தி, அதியனது பண்பு நலத்தை வெளியிடுகின்றார்.

“அதியமானிடத்து ஒரு நாளோ இரண்டு நாட்களோ சென்று வந்தவர் யாம் அல்லேம். பல நாட்களும் பலரொடும் கூடச் சென்றுமொரு பழக்கத்தை உடையோம். இருப்பினும் முதல் நாளில் எம்மைக் கண்ட போது விரும்பிய அதே விருப்பத்தோடே அவன் எப்போதும் விளங்குகின்ற தன்மையானாக இருக் கின்றான்;

“அழகிய வேலைப்பாடு பட்டத்தை அணிந்த பெரிய யானையையும், இயன்ற தேரையும் உடையவன் அதிய மான். அவனிடத்துப் பரிசில் பெறுகின்ற காலம் நீட்டித் தாலும் நீட்டாதே போனாலும், இரண்டும் ஒன்று தான். யானை தனது கொம்பினிடையே வைக்கப்பட்ட கவளத்தைப் போல, அவன் பரிசிலும் நம்முடைய கைக் குத்து அகப்பட்டதே; பொய்யாகிப் போவதில்லை.

“ஆகவே, உண்ணுதற்கு ஆசைப்பட்ட நெஞ்சத்தை உடையீரே! அது குறித்து நீவிர் வருந்தல் வேண்டா! அவன் தாள் வாழ்வதாக!”

என்று கூறுகின்றார் (புறம் 101) ஔவையார். இத்தகைய தமிழ்ப்பற்றில் தலைசிறந்து நின்றவனாக விளங்கி னான் அதியமான். இதனை அறியும்போது, நம் நெஞ்சம் விம்முகின்றது. தமிழ்த்தாயைப் போற்றிப் புரக்கும் அத்தகைய வள்ளல்கள் இந்நாளில் இல்லையே என நினைந்து

எக்குறிக்கிறது. ஔவையாருடன் சேர்ந்து, 'வாழ்க அவன் தாள்!' என, நாமும் அவன் திறனை வாழ்த்துவதற்கு முனைகின்றோம்.

ஒருநாட் செல்லலம், இருநாட் செல்லலம்
பலநாட் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ!

தமிழ்ப் புலவர்கள் என்றும் தமக்கென ஒரு பெருமையுடை யவராக வாழ்ந்திருந்த அறிவோம், அவ்வாறே பிற கலைகளிலும் எல்லோரும் குன்றாத சிறப்பினராகவே இருந்துள்ளனர். இதனை ஔவையார் பல செய்யுட்களால் கூறியுள்ளார். அவர் திறனை என்றும் நினைவுபெறுத் தியும் சென்றுள்ளார். இவற்றையும் நாம் காண் போமாக:

அணிபூண் அணிந்த யானை இயல்தேர்,
அதியமான் பரிசில் பெறூஉம் காலம்
நீட்டினும் நீட்டா தாயினும் யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவது பொய்யா காதே
அருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்கவன் தாளே.

(புறம்-101)

ஒரு சமயம், கோவூர் கிழார் கருவூர் வேள், வளர்ந்து வருகின்ற அதியமானின் பெருமையைக் கண்டு பொறுக்க முடியவில்லை. அவர்கள் கொதிப்புற்றுச் சேரரும், சோழர் முதலானோராகத் தொகுத்த மன்னர்களாலும் தூண்டிவிட்டு வருகின்றனர். அவர்கள் அதியமானை அழித்து விடுவது என்னப் படையெடுத்து வருகின்றனர். அவர் களது நிலையைக் கண்டதும் ஔவையாருக்கு நகையே தோன்றுகின்றது. அவர் கூறுவது:

'பகைவர்களே! போரிடுதல் வேண்டுமென்று போர்க் களத்தே புகுதலை மட்டும் விட்டுவிடு வீரர்கள் எம் பக்கத்

அன் ஒரு வீரன் இருக்கின்றான். ஒரு நாளைக்கு எட்டுத் தேர்களைச் செய்துவிட வல்லானொரு தச்சன் ஆகியவன், ஒரு திங்கள் வரைக்கும் வேலைசெய்து வடித்த தேர்க் காலைப் போன்ற உறுதியுடையவன் அவன்" என்கின்றார்.

களம்புகல் ஓம்புமின் தெவ்விர் போரெதிர்ந்து
எம்முளும் உளனொரு பொருநன்; வைகல்
எண்டேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த காலன் னோனே.

(புறம்-87)

ஔவையாரின் இந்தச் சொற்களைப் பகைவரது சீற்றம் மிகுவிக்கின்றது. "எங்களுள் எதும் வீரத்திற்குக் குறைவில்லை. எங்களது படையாளிகளும் தானைப்படையும் எவரையும் வென்று வாகைசூடும் திறத்தன. ஆதலின், யாம் கொண்டது முடிப்போம். அஞ்சிக்கு அஞ்சோம்" என்கின்றனர்.

இதனைக் கேட்டு ஔவையாரும் தளர்ந்தார் இல்லை. அவர்களது உள்ளம் காழ்கொண்ட பகைமையின் காரணமாக மேலும் சிறுகுவதையே அவர் கண்டார். மீண்டும் அறிவுரை கூறுதற்கு முற்படுவாராக,

யாவர் ஆயினும் கூழை தார்கொண்டு
யாம் பொருதும் என்றல் ஓம்புமின் ஓங்குதிறல்
ஒளிறிலங்கு நெடுவேல் மழவர் பெருமகன்
கதிர்விடு நுண்பூண் அம்பகட்டு மார்பின்
விழவுமேம் பட்ட நற்போர்
முழவுத்தோள் என்னையைக் காணா வூங்கே.

(புறம்-88)

என்கின்றார். 'யாம் தலைவனைக் காணாததன் முன்பாக யாவிராயினும் பொருதும் என்று கூறுங்கள்; தேர்க் கூர்மிரலின் நீர் அறிவதுதான் கூறும்' எனக் கூறும்

சொற்கள், உண்மையின் வெளிப்பாட்டு எல்லைகளை, அச்சொற்களுள் நுழைக்கும் கவிதையே நமக்கு வலியுறுத்தும்.

ஔவையாரின் அறிவுரைகளைக் கேட்டுத் திருந்தும் உறுதியும் தெளிவும் அந்தப் பகைவரிடம் உண்டாக வில்லை. அவர்களுள் ஒருவன், ஔவையாரிடம் இறுதி ஆத்திரமாகவே கேட்கின்றான்:

"இழையணிப் பொலிந்த ஏந்துகோட் டல்குல்
மடவரல் உண்கண் வாணுதல் விறலி
பொருநரும் உளரோநும் அகன் தலை நாட்டு?"

என விளையாட்டாகத் தன் பரந்த மார்பை நிமிர்த்துக் காட்டியபடி நிற்கின்றான். அவன் கேள்வியில் ஒலித்த எள்ளல் ஔவையாரைப் பெரிதும் புண்படச் செய்கின்றது. 'பொருபடை வேந்தே' என அவனை விளித்தவராக, அவனுக்கு மாற்றம் கூறவும் முற்படுகின்றார்:

எறிகோல் அஞ்சா அரவின் அன்ன
சிறுவன் மள்ளரும் உளரே; அதாஅன்று
பொதுவில் தூங்கும் விசியுறு தண்ணுமை
வளிபொரு தெண்கண் கேட்பின்
அதுபோர் என்னும் என்னையும் உளனே! (புறம்-89)

என்கின்றார்.

"அடிக்கும் கோலுக்கும் அஞ்சாதாய்ச் சீறிவரும் பாம்பைப் போன்றவரான இளைய வலிய வீரர்கள் பலர் எம் நாட்டிடத்தே உள்ளனர்.

"அன்றியும், மன்றிலிடத்தே தூங்கும் பிணிப்புற்ற முழவினது, காற்றெறிந்த, தெளிந்த ஓசையுடைய கண்ணின்கண் ஒலியைக் கேட்பின், அது போர்ப்பறை தான் என்று மகிழ்ந்து எழுகின்ற எம் தலைவனும் உளன்."

படைமறவர் மட்டுமல்லர்; அவர்க்குத் தலைவனாக விளங்கும் பேராண்மை மிக்க அஞ்சியும் உள்ளான் என்று

கூறும்போது, அவரது வெருமிதச்செறிவு நமக்குப் புலப் படுகின்றது.

இவ்வளவு அறவுரை பல கூறியும், பகைவர் தம் முரட்டு நிலையினின்று உறுதியுடன் இருப்ப, அதுகண்ட ஔவையாரும், அவர்களது தீயூழினை நினைந்து வருந்தி யவராகத் திரும்பி விடுகின்றார். அதியமான் வந்து அடைந்தபோது, அவன், அவரது முகக்குறிப்பினாலே நிகழ்ந்திருப்பதை உணர்ந்து கொண்டவனாக, 'அம்மையே! தங்கள் அறவுரைக்கு அவர்கள் செவிசாய்க்க வில்லை போலும்! இனி என்ன செய்வது?' என்று வினவு கின்றான்.

அதியமானின் கேள்வியிடத்து உட்பொருளாக அமைந் திருக்க நுட்பத்தை ஔவையார் புரிந்துகொண்டனர். பகைவர்கள் அறவுரைக்குச் செவிசாய்த்தல் இல்லை என் னும் போது, அவர்கள் படைப்பெருக்கத்தை உடைய வராக இருத்தல் வேண்டுமன்றோ? இந்த நினைவுதான் அதியமானின் கேள்விக்குக் காரணம் ஆகும்.

''அதியமானே!

''மறத்தன்மையுடையது புலி. அது சீறி எழுந்தெழுந்தால், அதற்கு எதிர்நின்று வெல்லத்தகுதிய மான்கூட்டம் யாதா யினும் இவ்வுலகில் உளதாகுமோ?

''ஞாயிறானது கொதித்து எழுந்ததாயின், மயங்கிய வானிடத்தும் எட்டுத் திசைகளிடத்தும் செறிந்திருக்கும் இருள் என்பதும் உளதாகுமோ?

''புகள் கொழிக்கப்பட்ட வண்டி பாரத்தும், சகதி பிளக்கவும் நடக்கவல்ல மிக்க மனச்செருக்கினை உடைய தான கடாவிற்குப் போதற்கரிய துறையும் பாதையும் உண்டோ?

''இவ்வண்ணமன்றோ அதியமானே, எழு மரம் கடுக்கும், தாள்தோள் தடக்கை, மருவிய வள்ளை, மழவர் பெரும!

நீ களத்தின்கட் புகுந்தாயானால், பெரிய இந் நிலத்தின் கண் நின்று மன்னனைக்கொன்று ஆர்க்கும் வீரரும் உளரோ?'' என்கின்றனர்.

ஔவையாரின் சொற்கள் அதிகனின் உள்ளத்திலே பெருமிதத்தை ஊட்டுகின்றன. 'இப் பகைவரை அழிப்பேன்' என்று நினைந்து எழுகின்றான். போர் ஒலிக்கப் பெரும் படை திரள்கின்றது. பகைவர் தன் நாட்டை அடைவதற்கு முன்பாகத், தானே அவர் அரண்களைச் சென்று வளைத்துக் கைப்பற்றி வெற்றியாளனாகத் திகழ்கின்றான் அதிகன். நிகழ்ந்த இந்தப் போர் வெற்றியை,

'கடிமதில் அரண்பல கடந்த
நெடுமான் அஞ்சி

(புறம்-92)

திண்பிணி முரசம் இழுமென முழங்கச்
சென்றமர் கடத்தல் யாவது வந்தோர்
தார்தாங் குதலும் ஆற்றார் வெடிபட்டு
ஓடல் மரீஇய பீடில் மன்னர்
நோய்ப்பால் விளிந்த யாக்கை தழீஇக்
காதல் மறந்தவர் தீதுமருங் கறுமார்
அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
திறம்புரி பசும்புற் பரப்பினர் கிடப்பி
மறங்கந் தாக நல்லமர் வீழ்ந்த
நீள்கழல் மறவர் செல்வுழிச் செல்கென
வாள்போழ்ந் தடக்கலும் உய்ந்தனர் மாதோ
வரிஞிமி றார்க்கும் வாய்புகு கடாஅத்
தண்ணல் யானை அடுகளத் தொழிய
அருஞ்சமம் ததைய நூறி
பெருந்தகை விழுப்புண் பட்ட மாறே.

(புறம்-93)

என்று ஔவையார் கூறுகின்றார். இப் போரின்கண் அதிகமான் புண்பட்டான் என்பதும், இதனால் அறியப் படுகின்றது. இந்தப் போரினை,

எழுபொறி நாட்டத்து எழாஅத் தாயம்
வழுவின்று எய்தியும் அமையாய் செருவேட்டு
இமிழ்குரல் முரசின் எழுவரொடு முரணிச்
சென்றமர் கடந்துநின் ஆற்றல் தோற்றிய
அன்றும் பாடுநர்க் கரியை..........

(புறம்-99)

எனக் கூறுகின்றது ஔவையாரின் புறப்பாட்டு. இதே பாட்டினால், அவன் மலையமானை வென்று கோவலூரைக் கைப்பற்றிய சிறப்பும், 'முரண்மிகு கோவலூர் நூறிநின் அரணடு திகிரி ஏந்திய தோளே' என உணர்த்தப் படுகின்றது.

மேலும், 'போர்க் குரைஇப் புகன்று கழித்த வாள்' எனவரும் புறப்பாட்டும் (97) பகைவரை அதியனுக்குத் திறைதந்து பணியுமாறு கூற, ஔவையார் கூறுவதும், 'முனைத்தெவ்வர் முரணவிய' என அவனது பிறர் அரண்களை வென்ற செவ்வியைப் பாராட்டுவதும், இங்கு நினைவு கூர்த் தக்கதாகும்.

இங்ஙனம், போர்முனைத்தாக்கால் சிறப்புற்று விளங்கினவன் அதியமான். அவன், இடையறாது இங்ஙனம் இயற்றிவந்த போர்ச் செயல்களும் பெரும்பாலும் வெற்றி அவனுக்கே வாய்த்தும் வந்தது. அவனுக்குத் தலைமகன் பிறந்தபோதும் அவன் போர்க்களத்திலிருந்து நேராக வந்துதான் தன் மகனைக் கண்டுமகிழ்ந்தான். இதனை ஔவையாரின் பாடலால் நாம் அறியலாம்.

கையது வேலே காலன புனைகழல்
மெய்யது வியரே மிடற்றது பசும்புண்
வட்கர் போகிய வளரிளம் போந்தை
உச்சிக் கொண்ட ஊசி வெண்டோடு
வெட்சி மாமலர் வேங்கையொடு விரைஇச்
சுரிஇரும் பித்தை பொலியச் சூடி
வரிவயம் பொருத வயக்களிறு போல

இன்றும் வறாது மிசையே அன்னோ
உய்ந்தனர் அல்லர்இவன் உடற்றி யோரே
செறுவர் நோக்கிய கண்டன்
சிறுவனை நோக்கியுஞ் சிவப்பா னாவே.

(புறம் 100)

தனக்குப் பிறந்த மகவினின் முகத்தினைக் காணும் போதுகூட, அதியமானின் முகத்திலே மகிழ்ச்சி தோன்ற வில்லை. போர்க்களத்திலிருந்து தான் பெற்ற பசும் புண்ணுடன் வந்துநின்ற அவன் கண்களின் சினத்தோற் றம் மாறவில்லை. 'சிறுவனை நோக்கியுஞ் சிவப்பா னாவே' என வருந்தும் ஔவையார், அதே நேரத்தில் அதியனின் வன்மையையும் நினைந்து, 'உய்ந்தனர் அல்லர் இவன் உடற்றியோரே' என்றும் பாடுகின்றார்.

முனைகெட வெறுத்த மக்களுள் மாப்புகை
மனைதொறும் மறுகின் மழகளிறு அணியும்
மகைப்புலத் தேரின் பலவேல் அஞ்சி.

(புறம்-103)

என உரைக்கும் புறப்பாட்டடிகள், இவன் இடையறாது போரிட்டுக்கொண்டிருந்தவன் என்பதனையே நமக்குக் காட்டுவனவாகும். எனினும், பகைவழிப்படுதில் அத்தகைய சினமுடன் வெளிக்கிளம்புகின்ற இயல்பினன் ஆயினும், தன்னை வந்து இரக்கின்ற இரவலர்க்கும் பாட வந்த பரிசிலர்க்கும் வரையாது வழங்கிய வள்ளியோ னாகவும் அதியமான் விளங்கியிருந்தவன்.

'அற்றத்துக் காலை யாயினும்
புரத்தல் வல்லன் வாழ்கவன் தாளே!

(புறம்-104)

'கனவிலே பசித்தால் வருந்தி வாடுகின்றவர்க்கு ஒருத் தாமே காலத்திலுங்கூடத் தன்னை வந்தடைந்த வறிய வரைப் புரத்தற்கு வல்லன்' என்கின்றனர் ஔவையார்.

அவனுடைய இறுதியைக் கவனத்தில் எடுத்தால் இச் செய்யுளால் நாம் அறியலாம்.

அதியமான் இளம் போர்வீரர்க்கு யாது காரணம்? அத்தானியின் சிறுமன்றுவிடத்து பெற்றுத் தப்பநினைகும், அவர்களையான்மட்ட குறவிய வேழத்தும், அவையிர் போனவி வாழ்வினைத் காட்டிலும் போர் மறத்தால் வாழ்வினையே தம்முடைய குறிக்கோளாகவும் தம்முடைய இன்பமாகவும் கொண்டிருந்தனர். அதியமான் இளம்பருவத்திலேயே இளர்களுட் பரின் படைகளைத் திரட்டினான் விட்டான். 'இளைஞன்; இவனை அழித்துவிடுதல் எளிது' எனக் கருதிப் பகைவர் கூறுதலும், ஆனால் இவன் எதிர்த்து நின்று போரிட்டதும். இதன்பால் இளமையிலே போர் வெறியைக் கொண்டிருக்கச் செய்திருக்கும் வேண்டும்.

வயதால் இளைஞனாயினும், பயிற்சியாலும், வலிமையாலும், போர்க்கலைத் தேர்ச்சியாலும் அதியமான் சிறந்து விளங்கியிருந்தான். இதனை உணர்த்தும் ஒளவையார்,

போற்றுமின் மறவீர் சாற்றுதும் நும்மை
ஊர்க்குறு மாக்கள் ஆடக் கலங்கும்
தாட்படு சின்னீர்க் களிறட்டு வீழ்க்கும்
ஈர்ப்புடைக் கராஅத் தன்ன என்னை
நுண்பல் கருமம் நினையாது
இளையனென்று இகழிற் பெறலரிது ஆடே.

(புறம்-104)

என்று, அவன் படைஞருக்கு உரைக்கின்றனர். பகைவர் பலரும் நம் மன்னன் இளையன் என்று கருதி எதிர்த்து ஆடுகின்றனர்; படைமறவர் பலரும் அவ்வாறே கருதி நின்றனர். இதனால் அவ்வாறு கவனம் ஆகின்றது: 'இவன் நமக்கு வெற்றி தேடித் தருவனோ?' என்று ஐயம் கொள்ளுகின்றனர். அவர்களது எண்ணத்தை மாற்றுவதற்குத்தான் 'இவனை இளையவன் என்று கருதி

நோக்கிக் கூறிச் சேர்த்துவிட்டாரே! இவனுடைய ஆற்றலிய பல கருத்தையும் திறமையும்; இவன் வன்மை கண்டுற்றுப் புலம்பும், அந்த நிலையிலேயே மலைவலை எதிர்த்து நின்றான் வெற்றியும் கண்டே மாறும் என்று ஔவையார் கூறுகின்றனர்.

அதியமானின் போர்வன்மை பெரிது என்பதற்கு இவ்வாறு பற்பல செய்யுட்களும் சான்று பகர்ந்து நிற்கின்றன. இடைவிடாது போரிலீடுபட்ட இவனது பெருமை சிறப்பினை ஒருமுறை ஔவையார் மிகவும் தெளிவாகவே கூறிப் போற்றுகின்றார்.

தொண்டைமான் அதியனிடம் பகைகொண்டு அவனை அழிப்பது கருதிப் படைதிரட்டி இருந்தான். இவ்வாறிருந்த ஔவையார் அதியனுக்கு அறிவுகொளுத்தத் தக்கக் கருதினவராக, அவன்பால் செல்லுகின்றார்.

ஔவை புலமைக்கு மதிப்பளித்து அவரை வரவேற்றுப் போற்றினான். தொண்டைமானின் உள்ளத்திலே அவர் அதியனுக்கு வேண்டியவர் என்ற நினைவும் நிலைபெற்றே இருந்தது. 'என்னைப் பகைத்தால் அதியன் அழிவெய்துதல் உறுதியென்பது' அறிவிக்க நினைக்கின்றான் அவன். ஔவையாரை அழைத்துச் சென்று தனது படைக்கலக் கொட்டிலைக் காட்டுகின்றான். அவனது எண்ணத்தைப் புரிந்துகொண்டார் ஔவையார்.

“தொண்டைமானே! நின் படைக்கலங்கள் மிகவும் அழகியவை! பீலி அணியப்பட்டு, மாலை சூட்டப்பட்டு, கண்திரண்ட அழகிய காம்பை அழகுபடச் செய்யப் பட்டு, நெய்யிடப்பெற்றுக், காவலையுடைய அகன்ற அரண்மனையிடத்தனவாக உள்ளன.

“ஆனால், அதியமானின் படைக்கலங்களைப் பற்றி நீ அறியமாட்டாய். அவைதாம் பகைவரைக் குத்துதலால்

தம் சுற்றும் நுனியும் சிதைந்தனவாய்க், கொல்லனது பணிக்களரியாகிய குறிய கொட்டிலிடத்தனவாகவே எந்நாளும் விளங்குகின்றன.

"செல்வம் உண்டாயின் உணவு கொடுத்தும், இல்லை யானால் உள்ளதனைப் பகிர்ந்தும் பகிர்ந்துண்டும், வறியோருடைய சுற்றத்திற்குத் தலைவனாகிய எம்முடைய வேந்தன். அவனுடைய கூரிய நுனியுடைய வேலின் தன்மை இதுதான்."

ஔவையாரின் சொற்கள் தொண்டைமானைச் சிந்திக்கத் தூண்டுகின்றன. தன் போர்முயற்சி பயன் தராது என்று உணர்வதற்கு அவனுக்கு நெடுநேரம் பிடிக்கவில்லை. ஔவையாரின் சொற்கள் உண்மை யானவை என உணர்ந்த அவன், அத்துடனே தன் படையெடுப்பின் கருத்தினைக் கைவிட்டுவிடுகின்றான். அதியனோடு நட்புக்கொள்ள நினைக்கின்றான். அதற்கு ஔவையாரே உதவுகின்றனர். இந்தச் செய்தியைக் கூறும் ஔவையார்,

இவ்வே, பீலி அணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்தி நெய் அணிந்து
கடியுடை வியன்நகர் அவ்வே; அவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ; என்றும்
உண்டாயின் பதம் கொடுத்து
இல்லாயின் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்
அண்ணல்எம் கோமான் வைந்நுதி வேலே.

என்கின்றனர். (புறம்-95)

ஔவையார்பால் அதியனுக்கிருந்த அன்பின் எல்லையைக் காட்டுவது, அவன் அரிதிற்பெற்றதும் நெடுநாள் வாழச் செய்வதுமான நெல்லிக்கனியைத் தானுண்ணா

தும், அதனைத் தானுண்ணாது ஔவையாரின் நல்வாழ்வைச் சிறப்பு எனக் கருதியும், அதனை முதியவள் அவருக்கு உண்ணக் கொடுத்து, அவர் உண்டதன் பின்னரே அது பற்றிய சிறப்பினைக் கூறி அவரைத் திகைப்படையச் செய்த பெருந்தகையும் ஆகும்.

இதனை வியந்து போற்றும் ஔவையார் :

**வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்**
**களம்படக் கடந்த கழல்தொடித் தடக்கை**
**ஆர்கலி நறவின் அதியர் கோமான்**
**போரடு திருவிற் பொலந்தார் அஞ்சி**
**பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி**
**நீல மணிமிடற் றொருவன் போல**
**மன்னுக பெரும நீயே! தொன்னிலைப்**
**பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட**
**சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது**
**ஆதல் நின்னகத் தடக்கிச்**
**சாதல் நீங்க எமக்கீத் தனையே.** (புறம்-91)

என வாய்மனமார வாழ்த்திப் பாடுகின்றார்.

இத்தகைய பெரும்புகழுடன் இலங்கிய அதியமான், போரில், அதுவும் தன் குடிமக்களின் போராண்மைக்கும் பகைவர்க்கும் உள்ளாகியதில் வியப்பேதும் இல்லை. சேரன் பேராற்றலுடையனான இரும்பொறை தன்னுடைய பேரரசினை அதியன் எதிர்க்கின்றான் எனக் கருதியதும், அதியன் அதற்கிணங்காது தன் நாட்டைக் காத்துநின்று உயிர்விட்டதும், தமிழக வரலாற்றில் ஒரு வருத்தத்தக்க நிகழ்ச்சியாகும். பேராசை மனத்தினால் மாண்பினையே செம்மாந்து நின்ற தமிழ்வேந்தர்கள், தம்முள் தாமே மோதிக் கொண்டு மாய்ந்த நிலைமையை நினைக்கும்போது, உண்மையாகவே நாம் வருந்தாமலிருக்க இயலவில்லை.

இத்தகைய வரலாற்றின்கண், இதுபோன்று நாம் காணும் மற்றொரு இணக்கமான இராசபுத்திரர்களையும்

இவ்விடத்தில் நினைவு கூர்தல் வேண்டும். ஒரு நாட்டின் சிறந்ததான புகழுக்கு இத்தகைய உள்நாட்டுப் பூசல்கள் எத்துணை இழுக்கினைத் தந்துவிடுகின்றன என்பதற்கு இராசபுத்திரரின் வீழ்ச்சி நல்ல சான்றாக எடுத்துக் காட்டப்படும். அந்த நிலையில்தான், தமிழகத்தவரின் வரலாற்றினையும் நாம் கருதி வருந்தி அமைய வேண்டியுளதாக இருக்கின்றது.

பெரும்புகழ்ச் சிறப்புற்ற குதிரைமலைக் கோமானான அதிகமானுக்குச் சேலம் மாவட்டத்தே சிறந்ததொரு நினைவுச்சின்னம் ஏற்பட வேண்டும். அதன்கண் அதிகனின் ஆற்றலும், அவன் அழிந்ததற்குக் காரணமாகிய தகடூர்ப் பெரும்போரது குறிப்பும் பொறிக்கப்படல் வேண்டும். தமிழகத்தே ஒற்றுமை நிலவுதல் வேண்டும். தமிழர் ஒருவர்க்கொருவர் பகைமையும் காழ்ப்பும் கொண்டு மோதிக் கொண்டால், அது தமிழினத்தின் கேட்டிற்கே காரணமாகும் என்ற சிறந்த உண்மையினை என்றும் விளக்கிக் கூறும் சிறந்த நினைவுச் சின்னமாக அது விளங்கும்.

'கடும்பரிப் புரவி நெடுந்தேர் அஞ்சி
நல்லிசை நிறுத்த நயம்வரு பனுவல்
தொல்லிசை நிறீஇய உரைசால் பாண்மகன்
எண்ணுமுறை நிறுத்த பண்ணினுள் உள்ளும்
புதுவது புனைந்த திறத்தினும்'

(அகம்-352)

என வரும் அஞ்சியத்தைமகள் நாகையாரது வாக்கும்,

"நெடுநெறிக் குதிரைக் கூர்வேல் அஞ்சி
கடுமுனை அலைத்த கொடுவில் ஆடவர்
ஆடுகொள் பூசலின் பாடுசிறந்து எறியும்
பெருந்துடி"

(அகம்-372)

என வரும் பரணரின் வாக்கும், அதிகனின் பெருமைக்கு மேலும் சான்று பகர்வனவாகும்.

# 5. பாடிய சான்றோர்கள்

தகடூர் யாத்திரை, உரைநடையும் இடையிடையே செய்யுட்களுமாகப் புலவர்கள் பலராலும் பாடிய நிகழ்ச்சி களைக் குறித்துப் பாடப்பெற்ற ஒரு நூலாகும். கி.பி. இரண்டாம் நூற்றாண்டினையொட்டி இந்த நூல் எழுந்த தாகலாம். ஏன் எனில், அதுவே தகடூர்ப்போரின் காவியமாக அறிஞர்களால் கொள்ளப்பெற்றுள்ளது.

இந்த நூற்செய்யுட்கள் எந்த தொல்காப்பிய உரை யில் நச்சினார்க்கினியர் காட்டியுள்ளார், அதில் மேலும் பொன்முடியாரும் பல செய்யுட்களைச் செய்த தாக அறிகின்றோம். ஔவையார் பாடல்களாக விளங்கும் புறநானூற்றுச் செய்யுட்கள் பலவற்றையும் நோக்கும் போது தகடூர் யாத்திரையின் செய்யுட்களாக இவற்றுள் சிலவும் இருந்திருக்கலாமோ என்ற ஐயம் நமக்கு ஏற்படாமல் இல்லை. இந்த நூலின் வரலாற்றுக் குறிப்புக்களைச் சிறிதளவு இப் பகுதியில் அறிந்து கொள்ளுதற்கு நாம் முயல்வோம்.

**அரிசில்கிழார்**

அந்நாளில், சோணாட்டின் வடபால், கும்பகோணத் திற்கு அண்மையில், அரிசிலாறு பிரியும் இடத்தில் 'அரிசிலூர்' என்றொரு ஊர் இருந்தது. இவ்வூரிலே வேளாண்குடியில் பிறந்தவர் இவர். இவருடைய புலமை யது புகழ் பரவத்தொடங்கிய பின்னர், இவரது இயற்பெயர் மறைந்து, அரிசில்கிழார் என்னும் ஊர்ப் பெயரே நிலைபெறலாயிற்று.

கடையெழு வள்ளல்களுள் ஒருவனாகிய பேகனை, அவன் மனைவி பொருட்டாகப் பாடிய புலவர்களுள் இவரும் ஒருவர். ஆதலால், இவரைக் கபிலர், பரணர், பெருங்குன்றூர்க்கிழார், அரிசில்கிழார் ஆகிய சான்றோர்களின் காலத்தவர் எனலாம்.

பேகனைப் பாடியபோது, அவன் செய்கையை நயமாக இவரைப் பாராட்ட, அதனை ஏற்காது, எனக்குப் பரிசில் தருவதற்கு நினைத்தாயானால், நின் மனைவியின் துயரைத் தீர்ப்பதற்கு இப்பொழுதே தேரேறிச் செல்வாயாக (புறம். 146) எனக் கூறுகின்ற இவரது சால்பினை நினைத்தால், இவரது செழுந்தமிழ்ச் சால்பினது சிறப்பும் புலனாகும்.

பெருஞ்சேரல் இரும்பொறையான் அன்புற்று அவனுடன் இருந்தவர் எனினும், அதியமானின் வீழ்ச்சியை எண்ணி வருந்திப் பாடிய இவரது செய்யுள், தமிழ்ச் சான்றோரின் உளப்பான்மையைக் காட்டும் தலைசிறந்த உயிரோவியம் ஆகும்.

'விலங்கு பகை கடிந்த கலங்காச் செங்கோல்
வையகம் புகழ்ந்த வயங்குவினை ஒள்வாட்
பொய்யா எழினி'

எனவுரைக்கின்ற இவரது பாடற்பகுதி, எத்துணை உயர்வாக இலங்குகின்றது!

அதியமான் போரின் முதல்நாள் இறந்தவனாக, அக் காரணத்தால் வெகுண்டெழுந்து அவன் தம்பி பிற்றைநாளில் வஞ்சினங்கூறிப் போர்க்கு எழுந்ததாக இவர் கூறுகின்ற 300, 304 ஆகிய புறநானூற்றுச் செய்யுட்கள், பண்டைத் தமிழரின் மறமாண்பிற்குத் தக்க சான்றாக நிலவுவன.

சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறையைப் பற்றிப் பதிற்றுப்பத்துள் எட்டாம் பத்தாற் பாடி, அவன் புகழை

நிலைபெறச் செய்தவரும் இவரே! அதற்கு அவன் கோயிலாளுடன் புறம் போந்து நின்று கோயிலுள் உளவெல்லாம் கொள்கவென்று கூறி, ஒன்பது நூறா யிரம் பொன்னையும் அரச கட்டிலையும் நல்க, அவற்றைப் பெறாது, அவனை இரந்து வேண்டி ஆங்கே அமைச்சுப்பூண்டு சென்றவரும் இவர் ஆவர் என்று அறிதல் வேண்டும்.

பொன் முடியார்

இவர், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை யின் காலத்தவர். மறக்குடி முதியோரின் கூற்றாக இவர் பாடுவர்.

ஈன்றுபுறந் தருதல் என்தலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே!

என்னும் புறப்பாட்டு (312), தமிழ்நாட்டின் கடமை யுணர்வைக் காட்டும் சிறந்த செய்யுள் ஆகும்.

பருத்தி வேலிச் சீறூர் மன்னன்
உழுத்ததர் உண்ட ஓய்நடைப் புரவி
கடல்மண்டு தோணியிற் படைமுகம் போழ
நெய்ம்மிதி அருந்திய கொய்சுவல் எருத்தின்
தண்ணடை மன்னர் தாருடைப் புரவி
அணங்குடை முருகன் கோட்டத்துக்
கலந்தொடா மகளிரின் இகந்துநின் றவ்வே.

(புறம்-299)

என உரைக்கும் இவரது பாடல், தறுகண்மையுடன் சேரர் பெரும்படையை எதிர்த்துச்சென்ற அதியமானின் குதிரை

மறத்தைப் போற்றுவதாக இருக்கலாம் போதும்; குதிரை யின் அழகினைக் காட்டுவதும் அதன் மறமாண்பே சிறந் தது என்று உணர்த்துகின்ற இச் செய்யுள். கருவைப் பொரு ளாகும் ஒருவரது செய்தியை செய்யும் திறப்பாடே போற்றுதற்குரியதெனக் காட்டுவதாகும்.

இவரது, 'கார்த்தரும் புல்லணல்' எனத் தொடங்கும் தகடூர் யாத்திரைப் பாட்டும், 'கலைகொளப் பசுந்த ளாயும்' என்னும் தகடூர் யாத்திரைப் பாட்டும், இவர் தகடூர்ப் பெரும் போர்க்களத்து அரிசில்கிழாருடன், சேரமானது பாசறைக்கண் இருந்தவர் என்பதனைக் காட்டுவனவாகும்.

## ஔவையார்

பாணர் குடியினராகிய இவர் அதியமானிடம் பேரன்பு உடையவராக, அவன் அவைக்களத்தே நெடுநாள் வீற்றி ருந்து, அவனையும், அவன் மகன் பொருட்டெழினியை யும் பாடியவர். இவராற் பாடப்பெற்ற பிறர், நாஞ்சில் வள்ளுவன், சேரமான் மாவெண்கோ, பாண்டியன் கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகியோராவர். இதனால், தகடூர் யாத்திரைக் காலத்தே இவர்கள் தமிழ கத்தில் வீற்றிருந்த பிற மன்னர்கள் என நாம் அறிகின் றோம்.

அதியனின் சார்பாகத் தொண்டைமானிடம் தூதாக இவர் தூதுரைத்துச் சென்ற செய்தியை, அதியமான் வரலாற்றிற் கண்டோம்.

சேரமான் மாரிவெண்கோவும், பாண்டியன் கானப் பேர் தந்த உக்கிரப் பெருவழுதியும், சோழன் இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒருங்கிருந்தாரைக் கண்டு உவந்து பாடிய சிறப்பினர் இவர் (புறம்:367). இந்த ஒருமை என்றும் நிலைபெறுவதாக, எல்லவரை சிறப்

புடன் தமிழக வரலாறு விளங்கியிருக்கும் என நம்மை நினைக்கத் தூண்டுகின்ற செய்யுள் அது. இது, உக்கிரப் பெருவழுதி காலப் பேரரசின் வேந்தன் மாறனை வென்று, மதுரை நகர்க்கண் கொண்டாடிய வெற்றி விழாவின்போது எனக் கருதப்படுவதனால், ஓராயிரம் ஆண்டுகட்கு முன் மதுரை நகர்க்கண் சென்றிருந்தனர் ஆதலும் வேண்டும்.

நாற்றிசை வல்லுநர்களையும், தொண்டைமண்டலத்தாரையும் பாடியுள்ள இவ்வாசிரியர், தமிழகம் முழுவதையும் சென்று, வேந்தர் பலராலும் பாராட்டப் பெற்று விளங்கிய சான்றோர் எனக் கருதலாம்.

வரலாற்றுக் குறிப்புகள் பற்றிய செய்திகளை இத்துணையில் நிறுத்திக் கொண்டு, இனித் நகரேர் யாத்திரைச் செய்யுட்களாக இலங்குவனவற்றைப் பற்றி அறியத் தொடங்குவோமாக.

# தகடூர் யாத்திரைச்
# செய்யுட்கள்

# 1. வெண்மையும் ஒண்மையும்

'வெண்மை' எனப்படுவது அறிவு முதிராமையையே விளக்கும் ஒரு தன்மையாகும். 'ஒண்மை' என்பது அறிவு முதிர்ச்சியைக் குறிப்பது. அறிவு முதிராமை, முதிர்ச்சி என்னும் இத் தன்மைகளையொட்டி மக்களை வெண்மையர் எனவும் ஒண்மையர் எனவும் ஆன்றோர் பகுத்து உரைப்பார்கள்.

> 'வெண்மை' எனப்படுவது யாதெனின்? ஒண்மை
> உடையம்யாம் என்னும் செருக்கு.

என்று கூறுகின்றது திருக்குறள் (844). 'புல்லறிவு உடைமை என்பது யாதென்றால், யாம் நல்லறிவுடையோம் எனத் தம்மைத்தாமே நன்கு மதிக்கும் மயக்கம்' என்பது இதன் பொருள்.

இதேபோல, ஒரு நலனைச் செய்யும் சான்றோர்க்கு, அதனைத் தாம் வியத்தற்குரிய சிறப்பினதாகச் செய்தோம் என்னும் செருக்கு ஒருபோதும் ஏற்படுவதில்லை. ஆனால், புல்லறிவினர்க்கோ இந்த மயக்கமே மிகுதியாக இருக்கும்.

"தாம் செய்து முடித்த ஒன்று வியந்து பாராட்டுதற்குரிய ஒன்று அல்லவென்றாலும், அறியாமை உடையவர்கள், தம்மைத் தாமே வியந்துகொள்வது போன்ற, தம் செயலின் முயற்சியினை எல்லாம் வியந்து பேசிக்கொண்டு இன்பம் அடைவார்கள்."

ஆனால், அறிவு முதிராமை எனப்படும் வெண்மையி லிருந்தும் முற்றிலும் தீர்ந்தவரான மெய்யறிஞரோ, அவ்வாறு தம்மை என்றும் வியந்து உரைப்பதில்லை; பிறர்

செயற்கை வியத்தற்குரியன காணும்போதுதான் அதனை வியத்தற்குரியதாகக் கூறி வியந்து பாராட்டுவார்கள்.

ஆகவே, தாம் செய்த செய்யுட்களையும், சான்றோர் ஏற்றுத் தம்மைப் பாராட்டுதல் வேண்டும் என விரும்புகின்றார் ஆசிரியர். இந்த முறையிலே அறிஞர்களை வேண்டுபவராக, அவையடக்கம் உரைக்கின்றார்.

வியத்தக்க காணுங்கால் வெள்ளையின் தீர்ந்தார்
வியத்தக்க தாக வியப்பர்—வியத்தக்க
அல்ல வெனினும் அறியாதார் தம்போல
எல்லாம் வியப்பர் இனிது.

(புறத்-10)

புறத்திரட்டின் 'அவையடக்கம்' என்னும் பகுதியுள் சேர்க்கப்பட்டிருக்கும் தமிழ் யாத்திரைச் செய்யுள் இதுவாகும்.

'வெள்ளையின் தீர்ந்தார், வியத்தக்க காணுங்கால் வியத்தக்கதாக வியப்பர்; வியத்தக்க அல்லவெனினும், தாம் அறியாதார்போல அமைந்தவராய், எல்லாவற்றையும் இனிதாக வியந்து பாராட்டுவதும் அவர் இயல்பாம்' எனவும் கூட்டிப் பொருள் கொள்ளலாம்.

சான்றோர், பிறரது செய்யுட்களுள் காணப்படும் குறைகளைப் பாராட்டாது, நிறைவுகளை மட்டுமே கண்டு பாராட்டி வியந்து பேசுவார்கள்' என உணர்த்தும் அவையடக்கம் கூறுகிறது இச் செய்யுள்.

இச் செய்யுளின் முதலடி, 'வியத்தக்க காணுங்கால் வெள்ளையின் தீர்ந்தார்' எனவும் வழங்கும். 'வெள்ளை' என்பதனைப் பிறர்பால் பொறாமை கொண்டு பழித்துரையிடு தன்மை எனப் பொருள்கொண்டு உரைத்தல் வேண்டும்.

## 2. நீத்தார் பெருமை

உலகப் பற்றுக்களை விட்டுத் தம்மைக் கட்டுப்படுத்தி வாழ்கின்ற சான்றோர்கள் பெரிதும் பாராட்டுதலுக்கு உரியவர்கள் ஆவர்.

பெருஞ்சேரல் இரும்பொறை, ஒரு சமயம், உயர் நிலை உலகம் புகுந்த சான்றோர்களின் பொருட்டாக வேள்வியொன்று செய்தனன். அந்த வேள்வியிற் கலந்து கொண்டு பயன்பெறுவது கருதியவராக இரு பிறப்பாளர்கள் பலரும் கொங்குநாட்டிலிருந்து ஒன்று திரண்டனர்.

அவர்களுட் பலரும், வளமான உடலினராகவும் உடையினராகவும் விளங்க, ஒருவர் மட்டும் மிகவும் எளிமையான தோற்றத்துடன் விளங்கினார். அவையிடத்து இருந்த பலரும் அவரைக் கண்டு நகையாடி ஒதுக்கி அவர் பால் தமக்குள்ள வெறுப்பினைக் காட்டுபவர்களாய் இருந்தனர்.

வேள்வி இனிதாக இயற்றிய பின்னர்ச் சேரமான் இரு பிறப்பாளர்கட்கு வேண்டியன வழங்கிச் சிறப்பிக்கத் தொடங்கினான். அப்போது, அவன் அருகிருந்த அரிசில் கிழார், அவர்களுள் எளிமைத் தோற்றத்துடன் விளங்கிய அந்தணாளரின் உண்மையான செல்வநிலை உணர்ந்தவராக, முதற்கண் அவரைச் சென்று சிறப்பிக்குமாறு பெருஞ்சேரலிடம் கூறுகின்றனர்.

“இறந்து வாழ்ந்து போயின பழம் தலைமுறையினைத்தான் கருதியிருக்கின்றனர். மிகவும் இழிந்த தன்மையினை உடையவரைப் போலப் பிச்சையேற்று உண்டும் இருக்கின்றனர்.

“ஆனால், இவர் தம்முடைய அறிவின் பெருக்கத்தால் நாற்றிசைத் தாமரையைப் போன்று சிறப்பினை உடையவராவர்.

''தாம் உண்பதாயின், முதற்கண் அவ்வுணவின் ஒரு பகுதியைச் செந்தீயின்கண் அவியாகப் பெய்து, அதன் பின்னரே உண்கின்ற தன்மையர் இவர்.

''தேவைகளான இச்சைகளை எல்லாம் அவற்றைச் செலுத்தும் முறைமையைத் தெரிந்து செலுத்தியவராக, அவற்றை முற்றவும் நீக்கிவிட்ட தோற்றத்தினையும் கொண்டிருப்பவர்.

''ஒளி சிதறும் பூவினையுடைய முருக்கமரத்தினது கொம்பினைத் தோலினை உரித்து நீக்கிவிட்டு, அதனைத் தம்முடைய கைக்கோலாகக் கொண்டிருப்பவர் இவர்.

''துவர்த்த சிறந்த ஆடையினை உடையவர்; பாடுவாராயின் அரிதான மறையினையே பாடுகின்ற தன்மையர்.

''நெடிது நினைவுபெறுகின்ற தம் கருமத்தையும் தமக்குத் தாமே உரிமையுடையதாகக் கொண்டிருப்பவர் இவர்.

''இத்தகைய தன்மையராகிய இருபிறப்பாளரான இச் சான்றோர்க்கே, முதற்கண் சிறப்புச் செய்தற்குப் பிறரினும் நீங்கிச்சென்று முற்படுவாயாக.''

விழுந்த சிதைதக் கடுத்தும்; இழிந்தார்போல்
ஏற்றிரந்து உண்டும்; பெருக்கத்து அறத்தினத்
தலைமை பயன சிறப்பினர்; தாழ்சனலின்
நீட்டிய புன்னும் படிவத்தர்; தீயவை
ஆக்குழி யாற்றிக் கழுவி நோற்றும்;
அவிர் முருக்கம் தோலுரித்த கோலர்; துவர்மன்னும்
ஆடையர்; பாடின் அருமறையர்; நீடின்
உருவர் தமக்குத்தா மாவ
இருபிறப் பாளர்க்கு ஒருடைமை நீதே

(புறத்: 19)

சிதா அர்-சீரை. நீவிறச் சிதாஅர் களைந்து (புறம் 385 கல்லாடனார்); தொன்றுபடு சிதாஅர் துவர நீக்கி (புறம் 393 நல்லிறையனார்); துரும்பட்ட சிதாஅர் நீக்கித் தன்னரைப் புகைவிரித்தன்ன பொலங்கு துகில் உடீஇ (புறம் 398 திருத்தாமனார்) என்பவற்றும் இதே பொருள்படச் 'சிதாஅர்' வருதலைக் காணலாம்.

'ஏற்றிரந்து உண்டல்' துறவுநிலையின் தன்மை.

'நூற்றிதழ்த் தாமரை' தாமரையுள் சிறந்தது; பலவுள் சிறந்தது தாமரை; அதனுள்ளும் சிறந்தது நூற்றிதழ்த் தாமரை; அதைப் போன்ற சிறப்பினர் எனவே, மிகவும் சிறப்பான துறவுநிலையினைக் கொண்டவர் என்பதாம்.

'நியமம் ஆற்றும் ஆசாரி' என்பதற்கு முத்தீ வளர்த்தலையும் முறைப்படி பேணிச் செய்யும் கடமைகளைச் செய்து வாழும் பெருந்தகையாம்.

'துவர்'—கருஞ்சிவப்பு நிறம்.

'உருவும் தமக்குத் தாம் ஆய' நிலையாவது, உடற் பற்றின்றும் நீங்கி அதனைத் தம் கருத்தாற் சுழிக்கவும் சக்தியுடைய யோகநிலையினர் என்பதாம்.

'நுமக்காதீத'- இவ்வாறு செய்தலைக் குறித்த நீக்கிப் போக என்பது கருத்து.

இச்செய்யுளால், நீத்தாரது பெருமை கூறப்பெற்றது.

## 3. இரத்தலின் இழிவு!

இரத்தல் என்பது மிகவும் இழிவான ஒரு செயலாகத் தமிழ்ச்சான்றோரால் கருதப்படும். இதன் இழிதன்மையையும் உணர்ந்து, அதனையும் மேற்கொள்ள ஒருவர்

துணிந்தவர் என்றால், அவரது நிலைமை மிகவும் வருந்தத்தக்கதே. உரியதாகும். அவ்வகை வந்து இறந்தவர்க்கு வரைமுறையற்ற வாழ்வுதான் மனிதரின் கடமை எனப்படும்.

ஆற்றலை இல்லவர்களும் சென்று தோன்றி இறந்து நிற்கும் துணிவுடையவர்க்கு ஒருபோதும் பசிக் கவலை கிடையாது. அத்தகையவர் ஆயிரம் பேர் இருப்பினும் ஒரு செயலைச் செய்யாதிருக்கக் கூடியவரும் அவ்வாறிருந்தாலும், அவர்தம் பசிக்கு மாற்றாகும் ஒரு பொருளை உவந்து கொடுக்கின்ற மகன் ஒருவன் நாட்டகத்தே தோன்றாமற் போவான். ஆகவே, அவன் உணவிற்குக் கவலைப்படுதல் வேண்டாம் என்பதும் வெளிதாகும்.

என்றாலும், பாத்து உடைமை குறைப்பெற்ற உலகத்து ஒழுக்கம் அனைத்தையும் முற்றவும் ஆராய்ந்தாலும், ஒன்று மட்டும் தெளிவாகும். அது 'இரப்பவர்க்கு இல்லையெனக் கூறாத ஒருவன் எவனுமில்லை' என்பதுதான். இதனால் இரத்தல் மிகவும் இழிந்த தென்பது நன்கு உணரப்படும்.

ஊர்த்தியில் தோன்றும் தறுகண்ணாளர் ஆகியர்
ஆற்றலில் தோக்க அவையகத்து மாற்றமொன்று
ஆற்றக் கொடுக்கு மகன்தோன்றுக் தேற்றப்
பாப்புநீக் கையகத் தெரிவும் இல்லை
இரப்போரை என்ன மகன்.

(புறநா:227)

'இரப்போரை என்ன மகன் இல்லை' எனக் கூறியமையில் கடமை வலியுறுத்தப்பட்டது.

'ஊற்றுவலிற் தோன்றும் தறுகண்ணாளர்' எனவே, அவரது பெரும் பசியும் தன்மையும் கூறப்பட்டது. 'அத்தகையவர் ஆற்றலிற் தோக்க அவையகத்து மாற்ற மொன்று ஆற்றக் கொடுக்கும் மகன்தோன்றும்' எனவே அத்தகையாரின் பெரிதான கண்ணியமும் கூறப்பட்டது.

சேரமானின் படையைக் கொடைமை வியந்து கூறியது இதுவென்று கொள்க.

அன்றி, அதியனிடம், 'நீ பெருஞ்சேரனிடம் சென்று பணிந்து நின்று, நின் தகடூர் நாட்டை நினக்குத் திரும்பத் தருமாறு இரந்து கேட்பின், அவன் உவப்புடன் தருவான்' என்று சொல்வதாகவும், அவன் இரந்து நிற்றலின் இழிவை உணர்ந்து அதனை மறுத்தது எனவும் கொள்ளலாம்.

## 4. செங்கோன்மை

தமிழகத்தில் மன்னராட்சி அந்நாளில் நிலவியது என்றாலும், அந்த அரசு இன்னின்னவாறு நிகழ்தல் வேண்டுமென்ற விதிமுறைகளும் இருந்தன. அவ்விதிகளுக்கு ஏற்ப விளங்கிய அரசு செங்கோன்மை கொண்டதெனவும், மாறுபட்டது கொடுங்கோன்மை உடையதெனவும் சொல்லப்பட்டன.

அவற்றுள் செங்கோன்மை பற்றிய இரண்டு தகடூர் யாத்திரைச் செய்யுட்கள், புறத்திரட்டில் தொகுக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று இது.

சேரமான் தகடூர்ப் போருக்கு எழுகவென்று ஆணை பிறப்பித்து விட்டான். தகடூர் மன்னன் பெருவலிமையும் மறமாண்பும் உடையவன் என்பதை அறிந்தவனாதலின், சேரமான் பெரும்படை ஒன்றைக் கொண்டு செல்லுதலையே விரும்பினான்.

போர்க்களம் எல்லை தொலைவிடத்து ஆதலாலும், போர் கடுமையாக நிகழ்தல் கூடும் என்பதை அறிந்தமையாலும், சேரமானுக்குத் தான் விரும்பிய அளவிற்குப் படை திரளுமோ திரளாதோ என்ற கவலையும் ஏற்படத் தொடங்கியது.

அதனைக் குறிப்பிட்டு அவன் உரையாடியபோது, அருகிருந்த சான்றோருள் ஒருவர் கூறியது இது.

"அரசே! அறநெறி வழுவாத செங்கோன்மையினாலே, ஆற்றலும் வெற்றியும் கொண்டு முறைபிறழ்ந்த வேற்றும் தன்னை விலக்கிக் கொண்டு, யாவர்பாட்டும் துன்பந்தருவன செய்தலை விரும்பாத பாதுகாப்புடைக் கொண்ட வேலினைக் கைக்கொண்ட மறமன்னர்களது சிறப்பினை, நீயும் அறிவாய் அல்லவோ!

"அத்தகையோர், பகைவர்க்கு எதிராக உயர்த்த படை பெருகிப்போனது, படைவீரர்களால் மிக்குப் பெருமையதாக விளங்கிப் புகழ்பெறுவதாக அமையுமே அல்லாமல், தம் சிறப்பினின்றும் குன்றிப் போவதுஎன்பதும் உண்டாகுமோ?

"ஆகையாலின், நின் கவலையை விட்டருள்க" என்று அச்சான்றோர் உறுதியுரை கூறுகின்றனர்.

**இறப்பப் பெருகி இசைபடுவ தல்லாற்**
**சிறப்பிற் சிறுகுவ துண்டோ, அறத்தோனாய்**
**ஆர்வமும் செற்றமும் நீக்கிநற் றியாவர்க்கும்**
**இன்னாத வேண்டா இகல்வேல் மறமன்னர்**
**ஒன்னார்க் குயர்த்த படை** (புறத். 660)

இறப்ப-மிகுதியாக. இசைபடுவது - புகழ்பெறுவது. அறத்தோன்-செங்கோல். இகல்-மாறுபாடு. மறமன்னர்-மறமாண்மையுடைய மன்னர். ஒன்னார்-பகைவர். அவர்க்கு உயர்த்த படையாவது, அவரை அழித்தலைக் கருதி உயர்த்த வேற்படை.

## 5. அரசிற் பிறத்தல்

'தன் செங்கோன்மை வழுவாத சிறப்பினால் தனக்கு மிகுதியான படைவந்து உண்டாகும்' என்ற சான்றோரின் சொற்களைக் கேட்டதும், சேரமான் புன்முறுவலுடன் கூறுகின்றான்.

அறம் புரிந்தன்று அம்ம அரசிற் பிறத்தல்
துறந்த தொடர்பொடு துன்னிய கேண்மை
சிறந்தோர்க்கும் படு செயலிலர் தந்தும்
பிறந்தனெம் வெற்றிப் பொருட்டு. (புறத் : 366)

"சான்றோரே!

"நாங்கள் சொல்வது உங்களனைவரின் பொருத்தமாக இருக்கலாம். ஆனால், அரச குடியில் வந்து பிறத்தல் என்பது, முன் செய்த அறத்தின் பயனாக அமைவது என்பார்களே. அது உண்மையன்று.

விட்டுப்போகிய தொடர்புடைய பகைவரோடும் செறிந்த நட்புறவு மேற்கொள்வதற்கும் முடியவில்லை. சிறந்த தன்மையுடைய சான்றோர்க்குக் கொடுத்து உதவி செய்து விளங்குதற்கும் இயலவில்லை.

"தங்கள் தங்கள் பிறந்த குடியின் புகழைக் கருதித் தத்தம் வெலாற்றலால் வென்றிபெறுவதன் பொருட்டாக மட்டுமே வேந்தர்களாகப் பிறந்துள்ளோம்" என்கின்றான் அவன்.

படையெழுச்சி என்பது அறத்தோடு பட்டதே ஆயினும், தன் குடியினரான அதிகனை அழிப்பதற்குச் செல்லுகின்ற போது, சேரமானின் உள்ளம் அதனை விரும்பாது வேதனைப் படுகின்றது. அறம் புரிந்தவர் உயர் நிலை உலகம் புகுவர் என்பதும், பிறவாப் பெருநிலை பெறுவர் என்பதும் சான்றோர் கூற்றுக்களாக, இப்படிப் பிறந்து வெலாற்றல் காட்டி வெற்றி பெறுவதன் பொருட்டாகச் செயலாற்றிக் கவலையுறுகின்ற பிறப்போ அமைதல் வேண்டும், என்று கலங்குகின்றான் அவன். இதனால், அரசப் பிறப்பு 'அறம்புரிந்ததன் பயன் அன்று; முன் செய்த வினைப் பயனேயாம்' என்று கூறியும் துயருறுகின்றான்.

அதிகன் இவன் குடியினன். இருந்தும், தொடர்பு விட்டுப் போவதும், அவனை அழிக்கத்துப் பொருத்திய புதுநட்பினைக் கொன்று பெற்றெண்ணுமாறு சேர்ந்ததும், சேரமானை வாட்டுகின்றன. தன் மனைவி மக்கட்கும் மற்றும் சிறந்தாரான சான்றோர்கட்கும் செய்தற்குரிய கடமைகளைச் செய்யாது போர்மேற்கொண்டு போந்தவன் அவன் உள்ளம் இளகிதைக் கொள்ளவில்லை.

தத்தம் படையாக வகுத்துக்கொண்ட வேலிருக்கு வெற்றி தேடுவதன் பொருட்டாகச் சென்று, உறவினரையும் பிறரையும் அழித்ததை அவன் மனம் மிகவும் துயரத்தோடுதான் ஏற்கின்றது. அந்த நிலையிலே, அவனுடைய அரசப் பிறப்புங்கூட அவனால் வெறுக்கப்படுகின்றது.

தமிழ் முறுக்குணர்ந்த சேரமானின் உள்ளச் செம்மையே, மறுசெறி மாண்பைப் பெறுவதிலும் காட்டிலும், அறநெறி பெருக்கிச் சிறப்பெய்துகின்ற ஆள்கைச் செவ்வியே மேலோங்கி விளங்கக் காண்கின்றோம்.

இந்த நிலை பாரதப் போர்க்களத்துள் அருச்சுனன் நின்று கலங்கியுற்றுச் சோர்ந்த நிலைக்கு ஒப்பாகும். 'இவர்கள் பலரும் உறவினரும் நட்பினரும் மற்றும் அன்பினரும் ஆவர். இவரைக் கொன்று பெறும் வெற்றி எனக்கு வேண்டுவதில்லை' எனச் சொல்லித் தளருகின்ற அருச்சுனனுக்கு ஒப்பானவே, அதிகன்பாற் போர்க்கு எழுகின்ற சேரலனும் வருத்தமுறுகின்றான். இதனை நாம் அறிந்து போற்றல் வேண்டும்.

## 6. புலவியின் ஊடல் இனிது

தகடூர் அதிகமானின் அனைத்துப் பெரும் புகழையும், பெருந்தன்மையையும், போர்த்திறமையையும் நன்றாக உணர்ந்து, தன் குடியினனுள் ஒருவன் அத்தகு சிறப்பினனாகத் திகழ்தலை எண்ணி ஒருபால் மகிழ்ச்சி கொண்ட

வரும் சேரமான் பெருஞ்சேரல் ஆவான். எனினும், அரசின் கடமை, தனக்கு உட்பட்ட நாடொன்று தன் மேலாட்சியை உதறித்தள்ளி நிமிர்ந்து நிற்கும்போது, அதனை வணக்கித் திறைகொள்ளும் கடனிற் செலுத்த, அதனை ஒதுக்க முடியாதும் அவன் கவலையுறுகின்றான்.

அவனுடைய மனநிலையை நன்குணர்ந்த சான்றோர் அரிசில் கிழார். ஆகவே, அவர் தாமே நேரிற் சென்று அதிகனைக் காண்பதாகவும், நிலைமையை விளக்கி அவனை நெறிப்படுத்த முயல்வதாகவும் கூறச் சேரமானும் அவரது முயற்சிக்கு ஆதரவு தருகின்றான்.

தகடூர் சென்ற அரிசில்கிழாரை அதியமான் தமிழ்ச் சான்றோர் என்ற வகையில் உவப்புடன் வரவேற்று உபசரித்தனன் எனினும், அவனுடைய ஆண்மைப் பெருக்கம் சேரனுக்குப் பணிந்து வாழ்வதற்கு இசைய மறுக்கின்றது. அவன், தன் நிலையில் உறுதியாகவே இருக்கின்றான்.

அரிசில்கிழார் ஔவையார் போன்ற அறிவுடைச் சான்றோர்களது உரைகள், அவனை ஒருவாறு தன்னை உணரச் செய்தபோதும், அவனுக்கு அணுக்கமாயிருந்த அரசகுலத் தலைவர்கள் பலரும், சேரனுக்குப் பணிவதிலுங்காட்டிலும், அவனை எதிர்த்து அழிவதே சால்பெனப் பேசி உறுதிபூண்டு அமைகின்றனர். அவர்களுடைய உறுதி இடையிலேயே மாவீரனாகிய அதிகமானையும் திண்மை கொள்ளச் செய்கின்றது.

அரிசில் கிழார் தம்முடைய முயற்சியிற் பயன் காணாதவராக வேதனையுடன் திரும்புகின்றனர். சேரன் ஆணையிடும் நாளின் முடிவை விளக்க, அதனை உணர்ந்து அமைகின்ற அவருள்ளம், தமக்குச் சார்பாக பேசிநின்ற அதிகனின் தேவியை அச்சமயத்திலே நினைக்கின்றது.

'அம்மையே! அதிகன் மாவீரன் எனினும், பெருஞ் சேரல் இரும்பொறையோடு பொருது வெற்றி கொள்ளும்

யாப்பு இல்லாத குறுநில வேந்தன் என்பதனை மறந்து விடுகின்றனன். என் சொற்களின் பயனையும் உணர்ந்தா னில்லை. சொல்லுக்குச் சொல் கேட்குந் சொல்லவித்து சொல்லியும், பழகும் பறித்த சொற்களை விலக்கிச் சொல்லியும் அமைகின்றனரே அல்லாமல், எப்போது தாய்மை சிறந்த நல்லறிவுக்கு இசைந்த கருவியினைச் சொல்லக் கேட்டு திருமாந்து இனிதான இசைகளைச் சொல்வாள் அம்மை' எனக் கூறி நொந்துகொண்ட நிகழ்ச்சியையும், அதனைக் கேட்டதும் அதிகவீரதேவி தன் தோழிபால் தன் நிலையை வெறுத்துக் கூறிய சொற் களையும் அவர் நினைவு கூர்கின்றார்.

தன் கணவனின் நல்வாழ்விற் கவலைகொண்ட அந்தத் தேவியின் சொற்கள், அவரைப் பெரிதும் இரக்கம் கொள்ளச் செய்த அந்த நிலைமையும் நினைக்கின்றார். அவர் கண்கள் நீரால் நிரம்புகின்றன.

'நுமன்னீர்! நம் முயற்சி பயன் தரவில்லை. இனிப் போர்தான் செய்தற்குரியது. நாங்கள் கலங்குவதேன்?' என்கின்றான் வேழமால்.

அதிகவீர தேவி சொன்ன சொற்களை நினைவிற் கொண்டேன்: என் மன்னர்க்கு விட்டு அளவு அச் சொற்கள் என்னைக் கவர்ந்து உருகுமாறு செய்கின்றன என்றவர், அதனை அவனுக்கும் உரைக்கின்றார்.

**செவியுணராச் சொல்லின் பயன்களையும், நாம்பிறர்க்குச்**
**சொல்லிய சொற்களை செவ்வைச்சொல்லும்-பல்லைச்**
**பழித்துரைக்கும் நீண்டதாந் சொல்லும், விழுத்தக**
**கேட்டார்க்கு இனியவாச் சொல்லாமோ-பூக்குழலாய்**
**நல்வயல் ஊரன் உழுஞ்சாந்து அணிபவனாம்**
**புல்லியன் வாடல் இனிது.**

(புறத். 756)

'நும்மைப் பிரிந்து போர்மேற் சென்று செல்லக் கொண்டாயோ ஒரு சிறந்த சொல்லைக் கேட்டுப் பணி

வுடன் நின்று நமக்கு இனிமை தரும்படியாக, அதனைக் கருதினோம் என்று அவன் சொன்னான் இல்லை. புக்குழுவாய்! நன்மைப் பொலிவுடைய வையகத்தைத் சிறந்த அந்தணர் நம் அவையின், நம்ம சாத்தனிந்த பார்வையைத் தருவதனைக் காட்டுவதும், அவனோடு கூடியிருந்தவனால் நமக்கு இனிது' எனத் தன் தொழிந்து அவன் உரைத்தவன் என்று சொன்னது.

எனினும், அதிகனின் சொல்லாற்றலும் பண்பும் அவனால் மறக்கக்கூடியவாகவும் இல்லை.

"சொல்லுங்கால் சொல்லின் பயன் காணும் திறம் உடையவன் அவன்; தான் பிறர் சொல்லிய சொல்லை வெல்லும் நுட்பத்துடன் சொல்லுதற்கும் அறிந்தவன் அவன்; பலரும் புகழ்ந்த சொற்குற்றங்களைச் சாராமல் படிக்கச் சொல்லாடலிலும் வல்லவன் அவன்."

என, அந்தச் சிறப்பையெல்லாம் கூறி, விதியின் வலியை நினைந்து நொந்துகொள்ளுகின்றனன்.

அதனைக் கேட்டதும் பெருஞ்சேரலிரும்பொறையின் கண்கள் கலங்குகின்றன. கடுமின் பெருஞ்செல்வியான அந்தத் தேவியின் கலங்கிய முகத்தை நினைவு படுத்துக் காட்ட, அவன் சோர்கின்றான். 'அந்த அம்மையாருக்கும் துயர விளைவதுபோலத் இப்பொழுது மேலும் வந்து சூழ்ந்ததே' எனக்கூறி, அவன் விதியை நினைந்து வேதனை கொள்ளுகின்றான்.

## 7. நூல்கண்டார் கண்ட நெறி

தகடூர் நாட்டைத் திறைகேட்டுச் சென்ற தூதுவர்கள் பெருஞ்சேரல் இரும்பொறையாள் வந்து, அவர் திறைதர மறுத்த செய்தியைக் கூறுகின்றனர்.

பெருஞ்சேரல் சீற்றம் கொள்ளுகின்றான். உடனே தகடூர் நோக்கிப் படைபெயர்க்குமாறு ஆணை பிறப்பிக்கின்றான். அருகிருந்த அரிசில் கிழார் பொன்முடியார் போன்றோர் கவலையுறுகின்றனர்.

“காலனைப்போலச் சினந்து எழுகின்ற பொறையனே!” யாம் சொல்லும் இதனைக் கேட்பாயாக.

“யாது சொல்லினும் அவன் நினக்குத் தம்பியாகும் முறையினன். ஆகவே, இயன்றவரையும் அவனுக்கு அறிவுரைகளை எடுத்துச் சொல்லி, அவனது அறியாமையைப் போக்குதலே முதற்கண் மேற்கொள்ளற்கு உரியதாகும்.

“அங்ஙனந் திருத்தப்பட்டபோதும் அரசுமுறையினை மேற்கொண்டு, அவன்மேற் படைகொண்டு செல்லுதல் வேண்டப்படுவதொன்று ஆகாது.

“அறிவுரை கூறித் தெருள்விக்கும் அதனைச் செய்தல் தான் அரசநெறியினை அறிந்துகூறும் சான்றோர் எடுத்துரைத்தாகக் கண்ட முறையாகும்” என்கின்றனர்.

**காலவெகுளிப் பொறையகேள் தம்பியைச்**
**சாலும் துணையும் கழறிச் சிறியரோ**
**கோல்கொண்டு மேற்சேறல் வேண்டா; அதுகண்டாய்**
**நூல்கண்டார் கண்ட நெறி.**

(புறத். 770)

இதன்மேற் சான்றோர் அறவுரைத்து அறநெறியை மேற்கொள்ளற்குச் சேரமான் இசைவளித்தனன் என்பதும், அவரும் சென்று முயன்றாரல்லர் என்பதும் அறிய வேண்டுவதாம்.

‘நூல்’ என்றது, அரசியல் நூல்களை.

## 8. அடங்கல் வேண்டும்

சான்றோர்கள், பெருஞ்சேரல் இரும்பொறையின் இளையோனாகி, தகடூர்க்குச் சென்று, அதியமானிடம் தூது உரைத்து, திரும்புகின்றனர். தூது என்பது வேந்தரின் கருத்தை எடுத்துக் கூறும் ஒரு குறிப்பேயன்றி, அதனால் அதிகாரத்துக்கு வந்துறும் இழிவு யாதுமில்லை எனவும் கூறுகின்றனர். மேலும், பெருஞ்சேரல் முறையாக அவனுக்கு அண்ணன் ஆகின் தகைமையும் எடுத்துக்காட்டி, நஞ்சேரலுக்கு இளையவன் பணிந்து போவதனால் வந்துறும் இழிவேதும் இல்லையெனவும் வாதிடு கின்றனர்.

அதியமான் சான்றோரின் உரைகளைப் பொறுமை யுடன் கேட்டானும், அவன் உள்ளம், தன்னாண்மை யுடன் மேலோங்கி நிற்கின்றது. 'தம்பி என்பவர், என் நாட்டை முழுவுரிமையுடன் கைக்கொண்டு ஆளவே விட்டு விடவோ' எனச் சீற்றத்துடன் கேட்கின்றான். அதனால், சேரனைப் பிற குறுநில மன்னர்களிடையே தனது செல்வாக்கை இழக்கவிடக் நோக்கமும் என்பதை பெறும், காழ்ப்புள் போல்வோர் குறும்பு செய்து வருத்தத் தகடூரின் நிலையே எக்காரணத்தாலும் இருந்தது என்பதை பேறும் அதியமான் எத்தனிக்கை.

'பெருஞ்சேரல், தனது ஆற்றல் எல்லையைத் தன் படையின் பெருக்கின் காரணமாகப் பிறநாடுகளில் மேற் செலுத்திப் பரப்பவே எண்ணுகின்றான்' என்று கருதி, அதற்குப் பணியாது எதிர்த்து நின்று, அதனைக் குறித்து படுவதும், அதுவே தன்னால் எதற்கடுபெறுமெனச் சாதிக் கின்றான் அவன்.

அவனது போக்கு அவனுடைய ஆற்றலின் மிக்கு உடையதாக இருப்பதையுணர்ந்த சான்றோர் அவனுக்கு அறிவு கொளுத்துவாராகச் சொல்லிய செய்யுள் இதுவாகும்.

குன்றிடு பசும்பொன் குடை சூட்டிய
வெளிற்றுப் வெண்கோட்ட களிறுபெறு வேந்தே!
விளைவுதீ யானின் கேண்மதி, விளையாது
குருடர்ப் படுதல் புரிசை தூற்றும்
இருதலைப் புள்ளின் ஒருயிர் போல
அரிக்கு வெதுளி தாங்கரு, வழிகெடக்
கன்றுறு பொழுதிற் கைபோல் எய்தி
நும்முறுக்கு,
சிறுமை யாகலும் உளவே; கோதை
முன்னவை வருடல் காலம் நும்முள்
நாக்குத் துணையாகலும் உரியன்; அதனால்
தொடங்க ஒரிய வினைபெரி தாயினும்
அடக்கல் வேண்டுமதி மன்னர்; அடங்கான்
துணைவிழைந் தியைய னாகும் புணைவிழைவன்;
பேராறு எதிர்க்கிதும் ஒருவன், அதனைத்
தாற்றுதல் அன்றோ அரிது! தலைப்படுதல்,
வேண்டுவ, பொருந்திய
வினையின் அடக்கல் வேண்டும்,
அதனை வாகின் டறிந்திசி கோக்கிகே.

(புறம்: 783)

இந்தச் செய்யுளை மிகவும் நன்றாகவே நாம் கவனிக்க வேண்டும். இதன்கண் சொல்லப்படும் அறிவுரை யாதெனில், ஒன்றை எதிர்த்து ஒரு செயலைச் செய்யும் பொழுதெல்லாம், நம் உள்ளத்தில் ஆழமாகவும் அழுத்தமாகவும் நினைவுபெறுதலும் வேண்டும். வெற்றிப்பேற்றுக்கு நம்மைச் செலுத்துகின்ற சிறப்பு இதற்கு உண்டு.

அதியனிடம் போர்க்களிறுகள் ஏராளமாகவே இருந்தன. அவற்றின் கொம்புகளை அறுத்து, அக்கொம்புகட்கு மேலாக இரும்புப் பூண்களைப் பொதிந்திருப்பார்கள். அதனால் அக்கொம்புகள், தம்முடைய வெண்மையிறும் வெளித் தோன்றாமல் பூண்மட்டுமே தோன்ற நிற்கும். மேலும், ஒளி சிறும் பசும்பொன்னால் செய்த

நெற்றிப் பட்டங்களைச் சூட்டியவையாகவும் அவை விளங்கும். இந்த யானைத்திரள் அந்நாளைய போரின் கண் மிகவும் முதன்மையான படைப்பிரிவாக இருந்தது. அதனால் இந்தப் படை வன்மையைக் குறிப்பிடு வாராகவே,

ஒளிவிடு பசும்பொன் ஓடை சூட்டிய
வெளிறில் வெண்கோட்ட களிறுகெழு வேந்தே!

என அவனை விளித்துத், தாம் சொல்லப்போகும் அற நெறியை ஆசிரியர் உரைக்கின்றனர்.

“இந்தச் சூத்திரத்தைச் செய்வதெல்லாம் என்று கேட் பாயானால், அதனைப் பற்றிய கருவோம் கேட்பா யாக” என்ற பீடிகையுடன் செய்தி சொல்லப்படு கின்றது.

“இருதலைப் புள்” என்ற ஒன்று. அதன் இருபுறமும் தலை இருந்தாலும் அதன் வயிறு ஒன்றேயாகும். அந்த ஒரு வயிற்றினுக்கு இரு பக்கத் தலைகளாலும் கொள்ளப் படுகிற உணவுதான் அதற்கு உணவாக அமைகிறது. இரண்டு தலைகளாலும் உண்ணினாலும், அந்த உணவு முழுதும் ஒரே வயிற்றிடத்தான் சென்று சேர்கிறது. அதற்கு உயிரும் ஒன்றே ஒன்றுதான். இங்ஙனம், இரண்டு தலையால் கொள்ளப்படும் உணவுகள் ஒரே இடத்தை அடைகின்றதே என்பது குறித்து, அந்தப் பறவை ஒரு போதும் வருந்துவதில்லை. அதுதான் அதன் இயல்பு. அந்தப் பறவையைப் போன்றவன்தான் ஒரு வகையில் நீயும் ஆவாய்!

“பகைவர் படையணிகள் நின் நாட்டைச் சுற்றி வளைத்துள்ளன. நின் நாட்டகத்திலிருந்தும் நீ வெளி யேறிப்போதற்குரிய வழியும் ஏதும் இல்லாதாகப் போய் விட்டது. இங்ஙனம், வெளியே போவதும் வழியும் கேட்டுப்போதலைக் கலங்குகின்ற பொழுதிலும், நீ

அது கருதியும் அற்றம் பகைவர்க்கு பணிந்து போவா யல்லை! நின்னைப் பற்றி நினக்கு அறிவைத் தருவதா யின்ற சிறந்ததுவே நின்பால் மிகுதியாகக் கொண் டுள்ளனை! நின்னாற் பொறுத்தற்கு இயலாதவாறு அதுவும் வெளிப்பட்டு வருதலை யாம் நின்னிடத்தே காண்கின்றோம்.

''உடுக்கை இழந்தவன் கைப்போல, அவ்விடத்தேயே உதவுதல் சிறந்தது' என்பார்கள். அதுவும் நின்னையின் கண்ணதேயே யாகும். பகைவரால் வளைக்கப் பெற்றுத் துயர்வாய்ப்பட்டுள்ள நின்னுடைய ஊருக்கு, அவ்வகைய கைப்போலச் சென்றடைந்து நீ துணையாகி நிற்கின்ற அருளினையும் நின்பாற் கொண்டவனாக இருக் கின்றனை!

''சேரமானே, நின்னினும் வேறுபட்ட குடியினனும் அல்லன், நின் குடியினையே சார்ந்தவன். நினக்கு அண்ணனாகின்ற உறவுமுறையினனும் ஆவான். நினக்கு ஒரு துன்பமானது பிறரால் ஏற்பட்டு வருமானால், நினக்குத் துணையாக அமைந்து, அதனை விலக்குதற்கு முற்படு கின்ற ஒரு கடமைப்பாட்டையும் அவன் உடையவன்.

''அத்தகைய அவனோடு பகைமை கொண்டு போரிட்டு அழிவதற்குத் துணிதல் நினக்குச் சிறப்பன்று.

''பகைமை வந்து வளைத்துள்ளான், அவன் அண்ணன் முறையினனே ஆயினும் ஆகுக; அவனை எதிர்த்து நின்று வெல்வது, அல்லது போரிலே அழிவது என்பதுதானே வீரனின் கடமை' என்று கருதி, நீ நின் கோட்டையைக் காத்து நிற்கும் முயற்சியில் உறுதியாக இப்போது ஈடுபட்டுள்ளனை, நீ தொடங்கியுள்ள உரித் தான காத்தற்செயல் என்பது பெரிதான புகழுடையதே என்றாலும் நீ இவ்வாறு கொதித்து எழாமல், நின் அண்ணனுக்கு அடங்கிப்போவது தான் நினக்கும் நின் நாட்டிற்கும் நன்மை தருவதாகும்.

"பேர் யாற்றின்கண் புதுவெள்ளம் கரைபுரண்டு ஓடிச் சென்றுகின்றது. அதனைக் கடக்கத் துணிவு கொண்டு நின்றான் ஒருவன். சிறு கொண்டாவொத்த துடுக்கையும் அடக்கினானாய், ஆற்று வெள்ளத்துள் குதித்தும் விடுகின்றான்.

"வேறு துணையாவாரும் எவரும் இல்லை. தன்னந் தனியாகவே அவன் நீந்துகின்றான். இடையிற் கலத்தால், அவனைக் காப்பதற்கு ஒரு புணையும் இல்லை. அந்நிலையில், அவன் ஆற்றின் போக்கோடு சார்ந்து சென்று, அதனைக் கடந்துவிடுதல் செய்ய வேண்டியதாகும். 'ஆற்றின் போக்கிற்கு எதிராகவே நீந்திச் சென்று கடப்பேன்' என அவன் சொல்வானாயின், அவன் ஆற்றைக் கடக்கமாட்டாது அழிவான் அல்லவோ? அப்படி எதிர் நீந்தத் தலைப்படுதல், ஆற்றைக் கடத்தற்கு அரிதாகிப் போகின்ற ஒரு செயலும் அல்லவோ?

"ஆகவே, நீ நின் அண்ணனைப் போரிட்டு வெற்றி கொள்ளக் கருதினாய் ஆயினும், இவ்வேளையில் நீ மேற்கொண்ட போர்ச்செயலைக் கைவிட்டு, அவனுக்கு அடங்கிப் பணிந்து போகுதலே செய்யத்தக்கது ஆகும். அதுவே நீ அவனை வெற்றி கொள்ளுதற்குரிய சிறந்த வழியும் ஆகும். இவ்விடத்தே எதிரிட்டுப் பொருத முற்படும் உங்கள் இருவரது நிலைகளையும் சீர்தூக்கிக் காண்பார்க்கு, இதுவே செய்யத் தக்கதாகத் தோன்றுகின்றது. ஆகவே, அதில் நின் போர் முயற்சியினைக் கைவிட்டுச் சேரனுக்கு இணக்கமாய்ச் சார்ந்து போவாயாக!"

இவ்வாறு, ஆசிரியர் அறிவுரையின் தன்மை குறிப்பாக எடுத்துரைக்கின்றனர். எனினும், போர் மறத்தால் மாண்புற்றிருந்த அவன்பால் இந்த அறவுரைகள் யாதும் பயனளிக்கவில்லை. பகையுணர்வும் வெற்றிவெறியும் மிகுதியாக உள்ளத்தே இடம்கொண்டு நிரம்பி

விருந்தன. அவனிடத்தே, 'போர்' என்றும் ஒன்றுதான் நல்லாறு செய்தற்கு உரியதென்ற முடிவும் அழுத்தமாக நிலைபெற்று விட்டது.

அழுகன் வலிமையை நினைத்து, அதன் வழியே தான் எல்லாம் நிகழுமென அமைந்து, சான்றோரும் தமக்குள் வருந்தி நலிபவராயினர்.

## 9. வேந்துடை அரண்

அதிகமானின் முடிபினைத் தெரிந்ததும், பாசறைக் கண் வீற்றிருந்த சேரமான் தகடூர்க் கோட்டையைக் கைப் பற்றுவதற்குரிய முயற்சிகளைக் கவனிக்குமாறு, தன் படைத் தலைவர்கட்கு ஆணை பிறப்பிக்கின்றான்.

ஆணை பெற்ற படைத் தலைவர்களும், போர் வெறி யாற் வெறித்தாராகித், தகடூர்க் கோட்டையை அணுகுதற் கான முயற்சியிலே ஈடுபடுத்தத் தம் கருத்தைச் செலுத்துகின்றனர்.

அவ்வமயம், பொன்முடியாரின் உள்ளம் பெரிதும் வேதனைப்படுகின்றது. தகடூர்க் கோட்டையின் காவல் மேம்பாட்டைக் கருதும் அவர், வெற்றி தோல்வி எவ்வா றாயினும், சேரமானின் படையும் அதனாற் பெரிதழிந்து உள்ளாகும் உறுதியொன்றும் என்பதனை உணர்கின்றார்.

'அரசே! நின் தம்பிதானே அதிகன்! அவனை வளைத்து வெற்றி கொள்ளுதல் என்பதுதான் எதற்காக? அவன் உரிமையுடனே வாழட்டும் என, இந்த முற்றுகையைக் கைவிட்டு நாம் நம் நாட்டிற்குத் திரும்பி விடலாமே' என்கின்றார்.

போர்முனைக்கண், வெற்றியொன்றே கருதுவதன்றி, உறவும் பிறவும் கருதிப் பார்ப்பது வீரரின் இயல்பாகுதல்

பொருந்தாது. ஆகவின், சேரமான் அவருடைய கருத் தினை ஏற்றுக் கொள்ளவும் இயலாதாக, அங்ஙனமே உணர்த்தும் விடுகின்றான். அவருடைய உள்ளத்திலன் அதிகமான்பால் அத்துணைச் சினம் முதிர்ச்சியுற்று வளர்ம் பெற்றிருந்தது ஆகவே, அவனை மாற்றுவதற்கு வகை அறியாதவராய் பொன்முடியார், அவன் உணரு மாறு, தகடூர்க் கோட்டையின் வலிமையைத் தாம் அறிந்த படியே அவனுக்கு உரைக்கின்றார்.

புறத்திரட்டு இதனைத் 'தூது' என்னும் பகுதியுட் சேர்த்துக் கொண்டிருப்பதனால், ஆன்றோர்கள் அதிகன் பால் சென்று தூதுரைத்த நாளிற், பொன்முடியாரும் அவருள் ஒருவராக இருந்திருக்க வேண்டும் என்று நாம் கருதலாம். அதுதானால், தகடூர்க் கோட்டையின் காவல் மேம்பாட்டைக் கண்டு வியந்தவருள் ஒருவரான இவர், அதிகன்பால் கொண்ட தம்முடைய ஆற்றாமை காரண மாக, அதனைப் பற்றிச் சேரனிடம் உரைக்கின்றார் என்றும் கொள்ளுக.

"சேரமானே!"

'தகடூர் கோட்டையைக் கைப்பற்றுக' என்னும் நின் ஆணையினைப் பெற்றதும், நின்னுடைய படைமறவர் களின் போர் முரசங்கள் ஒலிப்பன எப்புறமும் அதிர் கின்றன. வேற்படைகள் நிறைந்த கையினராக நின் படைஞர்களும் போரை விரும்பியவராக ஆர்த்தெழுந்து செல்லுகின்றனர்.

"இவ்வுலகம் அனைத்தும் அறிய, நீ அரசன் நன் னுடைய படை வலிமையை வெற்றியொன்றே கொண்டு, பகைவர் கோட்டைகளைக் கைப்பற்றி வாகைசூடுவது இந்த உறுதியை வலைவியாதனயோ?" என வியப் பின்பாற் கேட்கின்றார். முதலடியின் அதுவும் சரியாக இருக்கலாம்.

'விளக்கும் பாவையினைக் கொண்டு மார்பினை உடையவளே! ஆனால் நல்லது மட்டும் நீ நினைத்தா யில்லை. அறிவாய் என்றும் வேந்தனிடத்தும் அரணினை நீ எப்படியாய்ச் சேர நினைத்தாலும், அது நின்னால் நெருங்குதற்கு அரிதாகும் என்பதனை மட்டும் நன்றாக அறிவாயாக.

'இப்பணம் வாய் சொல்லது. நின் கருத்தைக் குறை வாக மதிப்பிட்டதாக ஆகாது. ஆயின், அதிகனின் படை வீரர்கள் அத்துணை மறமாண்பினை உடையவர்கள் என்பதனை யாம் அறிவோம்.

'இன்மையும் கூர்மையும் உடைய வேந்துடையவர் எதிரிலோராத் தம் மதிலை அறுக்கின்ற பகைவர் களைக் காணின் அதிகனின் மறவர்கள் பணிந்துபோகும் பான்மையர் அல்லர். இவ்வழி என்பதொன்றன்றி, எவ் வழியால் மதிலைப் பகைவர் அடைய முயன்றாலும், அவ்வவ் வழியிடம் எவ்வழியே தோன்றித் தடுத்து நிற்கும் பேராண்மை கொண்டவர்கள் அவர்கள்.

'புல்லாட்ட கடலினோரும் அவரது படைவரிசை புகுந்து சென்று, பகைவரது பகைவர் நாளையை அறுத்துக் களிக்கின்ற ஆண்மையாற் சிறந்தவர்களும் அவர்கள் ஆவர். அத்தகைய வலிமையினைக் கொண்டவரும், ஆண்மை சிறந்தவருமான மறவர்கள் மிகுதியாக விளங் குவது அதிகனின் படை என்பதனையும், அதனால் தகடூர்க் கோட்டையைப் பற்றி அறுத்தற்கு இயலாது என்பதனையும் தெளிவுறவே அறிவாயாக.

பொன்முடியாரின் இந்த உரையானது சேரமானின் பேரா வெறியைத் தணித்துவிடவில்லை; தம் சீற்றம் இதனைக் கேட்டதும் மிகுதியாகவே வெளிப் பட்டுவிட்டது. 'அத்தகைய வலிமிகுந்தவரான வெல்வது தான் எனக்கும் ஆண்மையாகும்' என்று கூறி, அவன் சிரித்தனன். அது மதிலைத்தாக் சேர்த்து வரும்

கிடைப்பாதுவை வகுத்த பொன்றுடையாரும், 'விடுபட்ட வழி' என நினைத்தாரோ அமைக்கின்றனர்.

மெய்வேல் வகைச் சூரனெதிர் தேர்ப்பிலை
ஐயவம அரிய வலிதுனைக் கொண்டது
இவ்வழி வென்றி இயக்கேத் மார்பு!
எவ்வழிப் பாலிலும் அவ்வழித் தோன்றித்
திண்கூடச் சுடியின் வயமக் காளின்
புண்கூடச் மெய்யின் உராதும் பனைவல்
வயிர்துளை எறிந்த வைக்துவலி நடக்கை
யாண்டடைய மறவர் மகிந்து, சிறை
தீண்டத் தகாது, செந்துறை அரசே! (புறம்-366)

இச் செய்யுளை, தமிழ்க்கொரிதியார், தொல்காப்பியப் புறத்திணையியலில், 'கொல்லார் தோல் குறித்த கொற்றமும்' என்னும் நூற்பாவுக்கான எடுத்துக்காட்டு 'இந் பொன்றுடையார் தமிழின் தன்மை கூறியது' என்பர். அவ்விடத்திலும் பாடபேதங்களுடன் இச் செய்யுள் காணப்படினும், அது வருமாறு.

மொய்வேல் வகைச் முரணிறக் தேர்ப்பிலை
ஐயவ மதிய வலிதுனைக் கொண்ட
தெவ்வழி வென்றி வியக்குநர் மார்பு
வெவ்வழிப் பாலிலும் அவ்வழித் தோன்றித்
திண்கூச் சுடியின் வயமக் காளின்
புண்கூர் மெய்யின் உராதும் பனைவல்
வயிர்துளை புரைந்த வைக்துவலி நடக்கை
யாண்டடைய மறவர் மகிந்து சிறை
தீண்டக் தகாது செந்துறை மாசே!

'மொய்வேல் வேற் வகைச் முரண்கிறந்து, ஐயவை வையகம் அரிய வலி தனைக்கொண்டது எவ்வழி' என்ச் சேரமான் கேட்பதாகவும், அதற்கு, எவ்வழி பாலினும் என்பது விடையாகவும் பதிற்றுப் பொன்றுடையார் கூறுவதாகவும் கொள்க.

# 10. வளம் பெருகுக!

ஒரு நாடு வளமும் வலிமையும் உடையதென்றால், அது அந்நாட்டின் விளைபொருள் பெருக்கத்தினை அடிப்படையில் கருதப்படுவது தெரிந்ததாகும். நாட்டுள்ளவர் தெய்வத்தைக் குன்றாப் படை வலிமையை மட்டும் பெருக்கினாலும், அந்நாடு விரைவில் அழிவெய்துதலை நோக்குபவர் தெள்ளிதில் ஆய்ந்தறியக் கூடும்.

புறநானூற்றுள் வரும் குறிஞ்சிக் கூற்றுச் செய்யுள் இந்த கருத்தினை வலியுறுத்துவதை நாம் காணலாம். உணவுப் பஞ்சத்தால் நலிந்து கொண்டிருக்கும் நாட்டின் படைப் பெருக்கம், விரைவில் தானாகவே தவிர்வதும் திண்ணம் கூடியதாகும். இதனால், ஆட்சியாளர்கள் தம் நாட்டின் உழவுப் பெருக்கத்திற்கே தம் திட்டங்களுள் சிறப்புத் தருதல் வேண்டும் என்பதும் தெளிவாகும்.

பாவலராக அமைவாரதும் எடுத்துச் சொன்னப்பெற்ற இந்த அடிப்படைக் கருத்தினைத், தமிழ்ப் பாத்திரச் செய்யுள் ஒன்றும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றது. போர் மறத்தினால் மலிந்தவரைப் பகைவரை அழித்தல் ஒன்றையே கருத்தாகக் கொண்டு பாசறையிட்டு இருந்தவன் சேரமான். சோநாட்டு வலிமையுடைய ஆடவர் அனைவருமே உழுதொழிலை மறந்தவராகிச் சேரப் படையணிகளிலே மறவராக விளங்குகின்றனர். எதிர்பார்த்தபடி போரும் விரைவாக நிகழ்ந்து முடிவு பெற்று விட்டதென்பதும் கண்டாகவில்லை. நாட்டின் செழுமைக்கு உழைக்க வேண்டிய உழவுத்தொழிலாளர் ஆடவர் பலரும், இப்படித் தம்முள் குறுவாளேந்துபவர் வெட்டு மாய்த்துக் கொள்ளுகின்ற போர்நாட்டத்தினராகக் குழுமியிருக்கும் பாசறைக் காட்சியினைக் காணும் போது, அவ்வேழின் உள்ளம் பெரிதும் வேதனை அடைகின்றது. ஆக்கவேலையைச் செலுத்த வேண்டிய ஆண்

வளமை அறிவிக்கின்ற செழுக்கும் அரசனின் போக்கினை நினைந்து குழுறுகின்றது. அவர்களுள் ஒருவர் சேர னாதுக்கு இந்த அடிப்படையினை உணர்த்துவாராக. "நின் நாடு புது வருவாயினை உடையதாகுக" என வாழ்த்துகின்றனர்.

'அகன்ற இடத்தையுடையது சேரலனாகிய அவனுடைய நாடு. அந் நாட்டின்கண் நீர்ப் பெருக்கம் விளங்குமாறு மழை வளம் சிறப்பதாக!

'பெரிய நிலத்தின்கண் இட்ட வித்துக்கள் குறைவின்றி முளைவிடுவனவாக! முளைத்த முளைகள் வளர்ந்து செழிக்குமாறு, மழையானது முட்டுப்பாடின்றி வந்து பெய்வதாக!

'இவ்வளம் காலத்தால் மழை பெய்து, எதும் வாட்டம் வந்து பொருந்தாமற்படிக்கும், பயிர்கள் விளைந்து வளருவதாக! அக் கிளைகளுள் எல்லாம் கதிர்கள் பால்கொண்டு முதிர்ந்து தலைசாய்த்து, முற்றிய கதிர்களை ஈனுவதாக!

''அவ்வளம் கொண்ட கதிர்கள் அரிதலைப் பெற்று, யாவரால் வளைந்திருக்கும் செல்வர்களுடைய களத்தின் கண் வந்து நிறைக! அக் களங்களின்கண் வந்து நிறைந்து இடப்பட்டுள்ள நெற்போர் எல்லாம் காவல் இன்றியே விளங்குவதாக!

'போரினை அடித்து நெல்லினைக் கொள்ளும் காலத்துப் போர்க்களத்தே நின்றும் எழுகின்ற அச்சந்தருகிற உழவர்களின் ஆரவார ஒலியைக் கேட்டு, நாரையினங்கள் வெருண்டு தம் பெடையோடு விளைவயல்களினின்றும் நீங்கிப் பறந்து போவதாக'

'இங்ஙனம், அவன் அகன்ற நாட்டின்கண் எவ்விடத்தும் புதுவருவாய் பெருகுக'

பெருநீரால் வாரி சிறக்க; திருவிழந்து
இட்டவித்து எஞ்சாமை நாறுக; நாறார
முட்டாது வந்து மழைபெய்க; பெய்தபின்
ஒட்டாது வந்து விளைபயிர்க; அக்கிளை
பால் வார்பு இறைஞ்சிக் கதிர்ஈன; அக்கதிர்
ஏர்கெழு செல்வர் களம்நிறைக; அக்களத்தும்
போரெலாம் காவாது வைகுக; போரின்
உருகெழு முதை வெரீஇப் பெடையோடு
நாரை பிரியும் வினைவயல்
யாணர்த்து ஆகமன் அவன்தலை நாடே.

(புறத்-844)

அதியர் பெருமக்களாள் ஏறுகின்ற தனி பெருமை இருக்கவேண்டிய நாட்டியல், மறுமம் போர்முழக்கின் ஒலியே மிகுதியாக எழுந்து கொண்டிருந்தது கண்டு வளம் வருத்திய சான்றோர் உணர்த்தும் அருமையான செய்யுள் இது.

அன்றியச் சேரமானைக் கண்டு பரிசில் பெற்றேறார் ஒருவர். அவன் தம் வளம் பெருகுக என வாழ்த்திய நாளும் இதுவாகக் கொள்ளலாம்.

## 11. புல்லறிவு

வேதனையையாவது ஓரளவு சகித்துக் கொள்ளக் கூடியது. ஆனால், தாம் தவறாகக் கொண்ட கொள்கையே சரியெனச் சாதித்து நிற்கும் புல்லறிவோ மிகவும் வெறுக்கக் கூடியதாகும்.

தகடூர்ப் போருக்கான சேரர் படையினர் குழுமியிருக்கும் பாசறைக்கண், ஒரு சமயம் போர்த்திட்டத்தைப் பற்றிய ஒரு விவாதம் நடந்துகொண்டிருக்கும்போது, போர்த் தலைவர்கள் கருத்துக்களையும் ஆராய்ந்தபோது, தாம்

ஒன்றை நயமாகப் புரிந்துகொண்டு அதனையே வலியுறுத்திப் பேசிக்கொண்டிருக்கின்றனர் சிலர். இவர்களின் போக்கினைக் கண்டதும், அந்த ஆர்வத்துடனே இருந்த அறிவுடைச் சான்றோர் ஒருவரின் பொறுமை எல்லை கடந்து போகின்றது. அவர்களின் வாயை அடைக்கும் வகையாய், அவர் சொல்லிய செய்யுள் இதுவாகும்.

“அறிவாளர்களும் இருவகையினர் உள்ளனர். ஒருசாரார், அருமையுடைத்தான பொன்னைப் போன்றவர்கள். சுடச்சுட ஒளிருகின்ற பொன்னைப்போலப் பிறர் கேள்வியால் மடக்குதற்கு முற்பட முற்பட இவர்களது அறிவின் ஒளியும் மிகுதியாக வெளிப்பட்டுப் பிரகாசிக்கும்.

இவர்கள் அறிவின் பெருமையினை நாடிடத்தே தோன்றியிருப்பக் கண்டபோதும், அதனைத் தாமும் பெற வேண்டுமென்ற ஆர்வத்துடனே, பொறுமையாகக் காத்திருப்பவர்கள். கரும்பினைத் தின்பவரின் முன்பாகத் நாக்கும் ஒன்றிரண்டு துண்டேனும் கிடைக்குமென்ற ஆர்வத்துடன் காத்திருக்கின்ற நாய்களைப் போன்று, அறிவுப் பேச்சுக்களத்தில்கண் காத்திருக்கும் ஆன்றோர்களும் ஏதாவது நல்ல பொருள் போதிக்க கருத்துத் தமக்குக் கிடையாதா என்று ஆர்வத்துடன் காத்திருப்பார்கள். பொருளற்ற புன்மையுரைகளை எல்லாம் அவர்கள் பாராட்டுவதே இல்லை.

“ஆனால் உள்ளத்தே வறுமை படைத்துள்ள புல்லறிவாளர்களின் நிலைமையோ இதற்கு முற்றவும் வேறானது. அவர்கள் கேட்கும் எல்லாவற்றையுமே அப்படியே மெய்ம் மொழிகளாக ஏற்றுக்கொண்டு பேசவும் விடுவார்கள். அல்லது, எதனையும் கேட்டு அறிவதற்கியலாமல் சோம்பலில் ஆழ்ந்துவிடுவார்கள். அதுவும் இல்லையானால், தொடர்பில்லா செய்திகளை விட்டுத்

தொடர்புற்ற செய்திகள் பலவற்றையும் எடுத்துக் கொண்டு விவாதத்திற்கு மாறுபட்ட பொருள்களையும் விரித்துரைத்துப் பேசிக்கொண்டிருப்பார்கள்."

இதனைக் கேட்டதும், அரிவாளையால் பகரிக்கொண்ட புருத்தபின் யாம் நானாகிலே நாடிக்கொள்ளுகின்றது விளாதுமை தொடர்கின்றது.

அரும்பொனன் னாச்சோட்டி யாக்குற்றக் கல்லுங்
கரும்புதின் யாக்குள்ளார் காப்போத்—கருப்புநீர்
கொண்டெடாநிய வெண்ணேர் துமிக்குப பன்மாக்காரி
விண்டுணப்பர் வேறா விருந்து.

(புறத். 995)

இந்தச் செய்யுள் புலவர் பெருமை பேசிச் செருக்குற்றுத் திரிபவர் அனைவருக்குமே சிறந்ததொரு அறிவுரை ஆகும்.

## 12. விரிச்சி வேண்டாம்

தகடூர் முற்றுகைக்கான வேலையும் நெருக்கிக்கொண் டிருக்கின்றது. சேரர் படைமனிதன் தகடூர்க் கோட்டையைச் சூழ்ந்து வளைத்துக்கொண்டவாய்ப் பாடி தங்கி விட்டன. அதிகமானையே, தகடூர் நாட்டின் ஆநிரைகளைச் சென்று கவர்ந்து வருதல் வேண்டும் என்கின்ற ஆணையானது சேரனிடமிருந்து பிறக்கின்றது.

பகைப்படை வந்து தம்மை வளைத்துக் கொள்ளத் தொடங்கியதும், தகடூர் நாட்டினர் தங்கள் நிரைகளை எல்லாம் பாதுகாவலான இடத்திற்குக் கொண்டுசென்று, அவற்றைப் பகைவர் கவர்ந்துகொண்டு போய்விடா வண்ணம், மிகவும் விழிப்பாகக் காவல் காத்தும் வருகின்றனர்.

ஒற்றரின் வாயிலாகத் தகடூரார் ஆநிரைகளைக் காத்து நிற்கின்ற காவல் பெருமைகளையும், அவை நிற்கும்

இடங்களையும் அறிந்துகொண்ட சேரர் படைத் தலைவர்கள், அவற்றைச் சென்று கவர்ந்து வருதற்கு வேண்டிய திட்டங்களை வகுக்கின்றனர். அப்பொழுது படையுறுவார் செய்யுமங்காய நல்ல சொல்லினைக் கேட்கும் நிமித்தமாக, அவர்கள் காத்திருக்கின்றனர். அவர்கள் எதிர்பார்க்கும் நற்சொல் நெடுநேரமாகியும் அவர்கட்கு வாய்க்கவில்லை.

இந்த நிலையிலே, இளமையின் செருக்கினாலே துடுக்கின்ற உள்ளத்தினனாகிய ஒரு தலைவன், நற்சொல் கேட்டதன்பின் நாம் காத்திருக்க வேண்டா; உடனேயே அரசனின் ஏவலை நிறைவேற்றற்கு எழுவோம் என்கின்றான்.

விரிச்சி (நற்சொல்) விலக்கிய வீரக் குறிப்பான இதனைக் காணும் ஆன்றோர், அந்த ஆண்மையாளனின் எண்ணத்தை வியந்து இந்தச் செய்யுளைச் சொல்லுகின்றனர்.

நாளும் புள்ளும் கேளா ஊக்கமொடு
எங்கோன் ஏவல் ஆற்றின் பகைத்துச்
செங்கோல் வெட்சியும் நிரையும் தாட்ட
மதிக்குரற் குருதி மன்றுதுகள் அவிப்ப
விரிச்சி கோடல் வேண்டா
எயிற்புறத் தரும்பகை பணைப்புல நிரையே

(புறத்-1341)

-நன்னாள் எதுவென்பதையும், நல்லநிமித்தம் புள் நிமித்தம் யாதென்பதையும் கேட்டறியாதவனாக, உள்ளத்தின் ஊக்கமே தன்னைச் செலுத்த, எம் தலைவனான சேரமானும், எயிலை நிரைகவர்ந்து வருக என்று ஏவினான்.

"ஆதலின், யாமிப்பொழுதாகிய இவ்வேளையிலே, சிவந்த காம்புகளையுடைய வெட்சிப் பூக்களையும்

இளைவரிசையையும் தாவி, ஆட்டுக்குட்டிகளை அறுத்துப் பலியிட்டு வழிபட்ட நாம் சுடுசோறு வேட்டலை நாடுதல் வேண்டாம். அறுபட்ட பகுதிகளின் கருத்துக்களினின்றும் சேரனும் தருமி பன்றிபடுத்தேனும் புதுநிலை அறிக்கும் படியாக, மீண்டும் மீண்டும் பலியிடுதல் வேண்டாம்.

“பகைவர் நாட்டிடத்துள்ள நிரைகளையெல்லாம், யாமே சென்று இந்தக் கோட்டைப் புறத்தே கொண்டு தருவோம்; எமக்கு விடை தருக.”

இவ்வாறு கூறி, ஆர்ப்பரித்து எழுகின்றான் மறவர் தலைவன் ஒருவன்.

“நாளும் புள்ளும் கேளா” என்பதற்கு, ‘நல்லநாளும் நற்சொல்லும் கேட்டறிந்து’ எனவும் பொருள் கொள்ளலாம். அப்போது, பன்னாளே கேட்டறிந்து, வைகறைப்போது எல்லை ஏவினதன் பின்னர், விரிச்சி கேட்டலும் வேண்டுமோ என்று உரைத்ததாகக் கொள்க.’

## 13. நின்று செவியேற்றனர்!

சேரப் படைத் தலைவர்கள், தம்முள் வீரவாசகத்தைப் பேசிநின்ற அந்தப் படைத்தலைவனது ஆண்மையின் மேம்பாட்டினை நன்றாக அறிந்தவர்கள். ஆதலின், அவனுடைய ஊக்கத்திற்கு இசைந்தவர்களாக, அவனைச் செயல்மேற் செல்லுமாறு ஏவுகின்றனர். அவனும், தன்னோடு ஊக்குடைய மறவோர் சிலருடன் சென்று, தகடூரார் ஆநிரைகளைப் பேணி வைத்திருந்த இடத்தினை அறிந்து, யாமே சென்று அடைந்து விடுகின்றான்.

நள்ளிரவு வேளையிற் காவலர் கண்ணயர்ந்திருக்கும் நேரத்தில் தகடூர்க் காவல்மறவர்கள் மேற் பாய்ந்து வெட்டி வீழ்த்தத் தொடங்குகின்றனர் சேரநாட்டார். தகடூர்க் காவல்மறவர்கள், தாம் எதிர்பாராத நிலையிலே

வந்து தாக்கிய சேரநாட்டாரின் செயலால், குழுவைப் பிணைப்புற்று நின்றவராயினும், அதிர்ந்து அவர்களை எதிர்த்துக் கடுமையாகப் போரிடுகின்றனர். எனினும், எண்ணிக்கையில் குறைந்த தொகையினராக இருந்த அவர்களால், வந்து தாக்கிய சேரநாட்டாரின் கடுமையான தாக்குதலை நெடுநேரம் தாக்குப்பிடிக்க இயலவில்லை. ஒவ்வொருவராக அவர்கள் வீழ்த்தப்படுகின்றனர். சேரநாட்டாரும் வெற்றிக்களிப்புடன் நிரைகளைக் கைப்பற்றிக்கொண்டு, தம்முடைய பாசறையை நோக்கி ஓட்டிக்கொண்டு போகத் தொடங்குகின்றனர்.

இந்தச் செய்தி தகடூர்ப் படைமறவர்க்கு விரைவில் கிடைத்துவிடுகின்றது. அவர்கள் கொதித்து எழுகின்றனர். போராண்மையாலும் நாட்டுப்பற்றாலும் மேலோங்கி நின்ற ஒரு படையணி உடனே கிளம்புகின்றது. வேகமாகச் செல்லக்கூடிய குதிரைகளின்மீது ஏறியவராகத் தகடூர் மறவர்கள், தங்களது நிரையை மீட்டு வருதலின் பொருட்டாகக், கவர்ந்து சென்றுகொண்டிருக்கும் சேரநாட்டாரைப் பின்தொடர்கின்றனர்.

வேகமாகவே தன்னிரைகவர்ந்த போதும் சேரநாட்டவர் இன்னும் தகடூர்ப் பகுதியினைக் கடந்துபோய் விடவில்லை. வழியில் அவர்களைக் கண்ட தகடூர்ப் படையினர், அவர்களை வளைத்துக் கொண்டு, சோர்த்தும் புலிகளைப்போலச் சீற்றத்துடன் போரிடுகின்றனர்.

வெற்றிக் களிப்போடு சென்ற சேரப்படையினர், எதிர்பாராத அந்தத் தாக்குதலை எதிர்நின்று வெற்றி காண முடியாமல் திகைக்கும், அழிந்தும் போகின்றனர். நிரையை மீட்டுக் கொண்டவராகத் தகடூர் மறவர்கள் தம் நாட்டிற்கு மீள்கின்றனர்.

அப்பொழுது இருக்கின்றபொழுது, நாம் நினைவிட்ட போர்களையே நிகழ்ந்த பற்பல நிகழ்ச்சிகளையும் குறும் தோர்வோடுகுன் செய்வி மகிழ்ந்தவர்களாக, அவர்கள்

களிப்புடன் வருகின்றனர். அவர்களுள் வீரமறவன் ஒருவன், தன் அருகே வருகின்ற மற்றொருவனிடம் உரைப்பதாக அமைந்த செய்யுள் இது.

“நண்பனே! பெரிதாக இந்த உலகத்திடத்தே எத்தனை உயிர்களையாகப் பிறந்தபோதும், யானைப் போரேறு வந்து பொருந்துமாயின், அது அனைத்திற்கும் இனிதாக இருக்கும் என்பார்கள்.

‘ஆனால் நமக்கோ, இந்த இரவின்கண் சென்று பகைவரைப் பொருதி வெற்றியுடன் மீள்கின்ற இதுவும் இனிதாகவே இருக்கிறது.

‘பகைவரைக் கவர்ந்துகொண்டு போகிய சேரநாட்டு மன்னர்கள், தம் வெற்றிச் செருக்கினால் நிரைகளை ஓர் புறத்தே நிறுத்திவிட்டுக், களிப்புடனே தம்முள் ஆடல் ஆரவாரித்திருந்த போதில், நாம் சென்று அவர்களின் புறத்தே சூழ்ந்து, அவர்களை வளைத்துக் கொண்டோம்.

“அப்போது, அவர்கள் கைப்பட்டுச் சென்ற நம் ஆக்கள், நாம் தம்முடைய கன்றுகளின் குரலைக் கேட்டன போல, நம் ஆரவார ஒலியைக் கேட்டமையால் தம் செவிகளை உயர்த்து நின்றனவே! அந்தக் காட்சியை என்னென்பது!”

ஆர்வமயமானதாகிய அவனது அந்த விளப்பு, அவன் உடனிருந்த வீரனைப் பட்டுமல்லாது, நம்மையும் இன்று இன்புறுத்துகின்றது. இந்த வகையில், அதன் நிலை பெற்றை உறுதிசெய்தனர் தமிழ்ச் சான்றோர்.

இருள்வேய் மருங்கின் எப்பித்துப் பாசிலும்
மருண்டுத் யானையே இனிதே இரவில்
ஆகோள் மன்னரும் அரவைக் காலத்து
மரப்புறத் திறுத்தெனெ மாகத் தாக்கிக்
கன்றுகுரல் கேட்டன போல
விரைகுவென் செவியேற் செவிகுயர்த்த கொடுவேல்

(புறம்-1331)

'ஆணியமைடைத் தம் நாட்டவரிடம் அத்தனைய பாசத்தைக் கொண்டிருந்தனர்' என்று கூறுகின்ற தமிழ் மறவனின் நாட்டுப்பற்று, நம்மைப் பெருமிதங் கொள்ளச் செய்கின்றது. 'என்று நாம் கேட்டனை போல' என்று கூறும் வாசகம், அந்த நாட்டுப்பற்றின் பெருமிதச் செறிவினை எழுத்த ஒப்பற்ற வாசகம் ஆகும்.

## 14. அதிகனின் கொடை!

அதியமானின் கொடையைப் பற்றிய சிறப்பினை ஔவையாருக்கு அருநெல்லிக்கனி வழங்கிய அந்த ஒப்பற்ற அரிய செயல் ஒன்றே என்றும் அழியாமல் நிலைபெறுத்து வருகிறது. எனினும், அவனுடைய அந்த வள்ளன்மையின் மற்றொரு நிலையினை நமக்குக் காட்டுகின்றார் தமிழ் புறத்திணைச் செய்யுள்களைப் பாடிய சான்றோருள் ஒருவர்.

அதியமானைக் கண்டு அவனைப் பாடிப் பரிசில் பெற்று மகிழவேண்டும் என்ற விருப்புடன் செல்கின்றார் ஒரு புலவர். அவர் சென்று சேர்ந்த வேளையோ மிகவும் பொருத்தமற்ற வேளையாக இருந்தது.

தகடூர் நாட்டின் புறத்தே கோட்டை செய்துகொண்டிருந்த சேரநாட்டவரால், தன் மக்கள் படுகின்ற துயரங்களைக் கேட்டுப் பொங்கியெழுந்த சினத்தான், அவர்களது செருக்கினை அடக்கியே தீர்வேன் என்று சொலித்து எழுந்து வருகின்றான் அதியமான். அவனுடைய ஆண்மையின் பெருமிதமும், போராற்றலின் சிறப்பும், தகடூர் மக்களை கட்டுப் பெருக்கத்தைக் கூட, அவர்களுள் குறிப்பிட்ட சிலர் அவனைத் தொடர்ந்து துணையாகின்றனர்.

இப்படிப் பகைவரைத் தாக்குதற்கான போர் வெறியுடன் சென்று அதியன் ஓரிடத்தே பாசறையிட்டுத் தங்கியிருந்தபோதுதான், புலவர் அவனைப் பாடிப் பரிசில்

பெற்று மகிழ்வேனென்றும் என்று சொல்கின்றார். அவர் புகழும் பாடிப் போற்றியும் மகிழ்கின்றார்.

அதிகமான் புலவரது புலமையை வியந்து பாராட்டு கின்றான். தன்முன் பருத்துக்கிடக்கின்ற படைக்கலன் களை நோக்குகின்றான். அவை புலவர்க்குப் பயன் படாதனவென்று ஒதுக்கின்றானில்லை. பருத்துப் பக் கங்களில் அணிகலன் பூட்டிய சிறப்புடன் விளங்கும் குதிரைகள் பூட்டிய தன்னுடைய தேரினை நோக்கு கின்றான். அதனை வழங்குவது சிறப்பாகத் தோன்றவே,

'புலவர் பெருமானே! இதோ இந்த தேரினையும், குவித்துக் கிடக்கும் இந்தப் படைக்கலங்களுள் பலவற்றை யும் மிகுதியாகவும் பெற்றுக்கொள்க' என வழங்குகின்றான்.

பகைவரை வென்று பறித்துவந்த அந்தப் படைக்கலன் களை, அவனுடைய வெற்றிச்சிறப்பைப் பறைசாற்றுகின் றது. புலவரின் உள்ளமும் அதனால் பெருமிதம் கொள் கின்றது.

> **வேத்தமர் செய்தற்கு வேற்செல்வான் மீண்டும்**
> **ஏத்தினர்க் கீத்துமென் றெண்ணுமோ—பாத்திப்**
> **புடைக்கல மான்றே ருடனீந்தான் வீத்த**
> **படைக்கலத்திற் சாலப் பல.** (புறத்-2297)

''வேந்தரொடு போர்செய்வதனை மேற்கொண்டு செல்பவனான அதிகமான், களத்தினின்றும் மீண்டு வந்த தன்பின்னர், தன்னைப் போற்றிய இரவலர்க்குப் பரிசில் தருவோம் என்று எண்ணுவானோ? எண்ணுபவன் அவன் அல்லன்.

''அவ்விடத்தில் அவ்வமயம் இருக்கதானே, பகுத்துப் பக்கங்களில் அணிபூட்டிய குதிரைகளுடன் விளங்கிய தேரினை உடனேயே கொடுத்தானே! அத்துடன் குவித்துக் கிடந்த படைக்கலன்களில் மிக அதிகமாக எடுத்துக் கொள்க என்றும் சொன்னானே!''

இவ்வாறு போற்றுகின்றார் கவிஞர். போர்க்களத்தி லும் உயர்ந்து உள்ளதை அளித்து உவக்கின்ற அதிக மானின் உள்ளச்சான்று சுவைச் சிறப்பு நம்மையும் வியப்பில் ஆழ்த்துகின்றது.

## 15. மறவர் உயிர் நேர்ந்தார்

பழந்தமிழகத்தில் போர் நிகழ்ச்சி என்பதும் இன் னின்னபடிதான் நடைபெற வேண்டுமென்கின்ற ஒரு மரபு இருந்திருக்கிறது. வெட்சியாராயினும், கரந்தையாராயி னும், உழிஞையாராயினும், தொச்சியாராயினும் தாம் மேற்கொள்ளவிருக்கும் போருக்கு முன்னால் பற்பல நடைமுறைகளை மேற்கொண்டவர்களாகவே இருந்திருக் கின்றனர். இப்படிப்பட்ட மரபுகளுள் ஒன்று, படை மறவர்க்குப் பெருஞ்சோறிட்டும் தண்தேறல் வழங்கியும் மன்னன் அவரைச் சிறப்பித்தல் ஆகும்.

சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை தகடூரை அழிக்கக் கருதிப் பெரும்படையுடனே வந்து, தன் நாட் டின் எல்லைப்புறத்தே பாசறையிட்டு, வெட்சிப் போரைத் தொடங்கியதும், தகடூர் அதிகமான் தன் நாட் டின் மானத்தைக் காத்து நிற்கின்ற பெருஞ்செயலிலே ஈடுபட வேண்டியவனாகின்றான்.

போர்முரசு முழங்கத் தொடர்ந்து வாள் நாட்கோள் குடை நாட்கோள் என்பன நிகழ்கின்றன. மறவர் கூட் டங்கள் வந்து கூடுகின்றனர். அவர்களை உரிய படை மனைகளுள் அமைத்துப் படைக்கலன்களை ஒழுங்கு படுத்துவதும், தக்க பயிற்சிகளை அளிப்பதும், அடுத்த மிகவேகத்துடன் நடைபெறுகின்றன.

இவற்றையடுத்து, மன்னன் தன் மறவர்களுக்குப் பெருஞ்சோறிட்டுப் பாராட்டும் விழாவும் ஆரவாரத்துட னும் ஆடம்பரத்துடனும் நிகழ்கின்றது. அந்த விழாவின்

கள், மன்னன் தானும் வந்து கலந்து கொள்கின்றான். அந்த விழாவினைக் கண்ட சான்றோர் ஒருவர், மறவரின் மாண்பினை வியந்து பாடுகின்றார்.

“அதியமான் கள்ளுண்டுகொள்வதில், தான் தன் படைகளுக்கு மாத்திரமாக உண்டானில்லை. அவர்களுடன் அமர்ந்தே தானும் உண்டான்.

“தன்னையே [illegible], நீரைய தன் வீரர்களுக்குத் தானே வார்த்தும் வழங்கிப் போற்றினான். இக்காலம் அவன் தன் பெருந்தன்மையின்றும் தாழ்ந்து தன் படை மறவரோடு தானும் ஒருவனாகக் கலந்து கொண்டான்.

‘அவனுடைய இந்தச் செயலுக்காகவோ, ஆற்றுப் படை மறவர்கள் பலரும் கூற்றுவனுக்குத் தம் உயிரை வழங்குதற்கு இசைந்தார்கள்!

“இவர்கள் தம் மன்னர்க்கு உறவினராக இருக்கா விடம், சற்றும் நூற்று [illegible] கொள்ளாத் தன்மையினராகவும் காணப்படுகின்றனரே!”

போர்க்களம் பலவரை அழித்தொழிந்த ஆநிரை கொண்டு செல்ல எழுந்த வீரரது பேராரவாரத்தைக் கண்ட புலவர், அந்த மறவரது நாட்டுப் பற்றையும், நாட்டுக்காக உயிரைத் தருவதற்கும் முன்வருகின்ற பெருந்தன்மையையும் வியந்து போற்றுகின்றார்.

உண்டியின் முந்தான் உடனுண்டான் தண்தேறல்
மண்டி வழங்கி வழிநாளே — கொண்டி
மறவர் மறலிக் குயிர்கொடுத்தல் மன்னர்க்
குறவினர் அல்லாமை அன்று (புறத். 1256)

மன்னர்க்கு உறவினர் என்ற அளவோடு நில்லாது கள்ளுண்டலைச் செய்வார் மறவர்க்கு உயிர்நேர்ந்தார், இக் 'கொண்டி மறவர்' என உரைத்துப் போற்றுகின்ற புலவர் அதியமானின் மன்னர் செம்மையையும் சிறப்பாக உரைத்து விளக்குகின்றார்.

## 16. கடனாற்றிய புகழோன்

தகடூர்ப் பெரும்போர் இருதிறத்து மறவர்களும் தமக்குள் பொருதுமிக்க ஒரு கடுமையான கட்டத்தையும் அடைந்து விட்டிருந்தது. சேரனின் முன்னணிப் படையினர் அணியணியாக வந்து தகடூர்க் கோட்டையை அணுகச் சுற்றி முற்றுகையிடுகின்றனர்.

தகடூர் மறவர்கள் பகைவரைக் கண்டதும் பயந்து கோட்டைக்குள் அடைந்துக் கிடக்கவில்லை. தகடூர் நாட்டின் எல்லையை அடையும் முன்பாகவே சேரனின் படைவீரர்களுக்கு எதிராக வந்து தடைசெய்து நின்றனர் தகடூர் மறவர்கள். கடல்போலத் திரண்டுவந்த சேரனின் பெரும்படைகளையும், யானைப்படைகளைச் செருக்குடன் தகடூர் மறவர்கள் அதனைக் கண்டு அஞ்சிவிட வில்லை. தம் வலிமை தோன்றப் பகைவர்களிடையே புகுந்து, தம்மால் இயன்றவரை பகைவரை அழித்துக் களத்தில் விழுப்புண்பட்டு வீழ்ந்தவரையே உணர்ந்துகொண்டு உறுதியாகப் போரிட்டு வந்தனர்.

'இவ்வளவு நிகழ்ந்த போரின் கடுமையான போக்கினால், தகடூர் நாட்டுத் தலைநகரை அடைவதற்குள் ஒவ்வொரு காவலரணான இடத்தைக் கைப்பற்றக் கூடச் சேரனின் தம் படைமறவர்கள் பலரைப் பலியிட வேண்டி யிருந்தது.

வீரத் திருமகனாக விளங்கிய ஒரு மறவன், தகடூர்ப் படையணியைச் சேர்ந்தவன், பகைவரிடையே புகுந்து வாளாற்றல் காட்டிக் கணக்கற்றோரை வெட்டி வீழ்த்தி நின்றான். அவன் வாளைக் கண்டதும் சேரர் அணிகள் கலக்கமுற்றன. அவனுடைய ஆற்றலினை பகைவரையும் திகைத்திட்டு அஞ்சிக் கலக்கம் செய்தது. முடிவில் அவனைப் பகைவர் பலர் வளைத்துக்கொண்டு அம்பினால் தம் ஆயுதங்களை எறிகின்றனர். அவனும் களத்தில் விழுப்புண் பட்டு வீழ்ந்தான்.

அவ்வாறுப் போரின் முடிவில், அவனைத் தூக்கிக் கொணர்ந்து, அவன் புண்கட்டுத் தகடூர்க் கோட்டையுள் மருந்திட்டுப் பண்படுத்த முயல்கின்றனர். அப்பொழுதும் அவனது வீர விளையாட்டையே பேசிக் களிக்கிறது. அவனை வந்து கண்டார் தமிழ்ச் சான்றோர் ஒருவர். அவர் கண்கள் வற்றாத கண்ணீர்த் துளைகளின்றன. அவனுடைய உடலினை உற்று நோக்கிய அவர், அவனை வியந்துவியந்து தம்மை மறந்த, அங்கே தமிழ் வீரச் செறிவுடன் வெளிவந்து ஒரு பாடலாகின்றது.

குழிபல வாயினும் சால்பா னாதே
முழுமுதல் முதுமரப் பேரெழில் வாயும்
அடைநுழைத் தடுத்த நெடுமுடை கிழப்புள்
செய்கிடை மிற்றல் ஆனாது மைபெய
நெருக்குசெய் பாணையிற் கிழிபல கொண்டு
முழுவதும் பொதியல் வேண்டும் பழித்த
கொடைக்கடன் ஆற்றிய வேந்தர்க்கும்
படைக்கடன் ஆற்றிய புகழோன் புண்ணே.

(புறத்-1374)

'இவன் உடலிடத்தே காணப்படுகின்ற குழிகள் பலவாயினும், அவை அவனுக்குச் சிறப்பையே தருவன வாகின்றன. பொந்துபட்ட முதிய மரத்தைப் போல, எவ்விடத்தும் புண்பட்டு நைந்து கிழிந்த இடங்களை உடையனவாக விழுப்புண்கள் தோன்றுகின்றன.

'புண்ணுக்கு நெய்யிட்டு மருத்துவம் செய்தால், நெய்யும் அவ்விடத்து நில்லாதாக வழிந்து போகின்றது. செக்கினை வெறுமனே செய்தலுக்குப் பாணையைப் போலத் துணிகள் பலவற்றைக் கொண்டு அவன் உடலினை முற்றவே பொதிந்து வைத்தல்தான் செய்தல் வேண்டும்.

''பழிப்பின்றும் நீங்கியதும் கொடைக்கடனைச் செய்வதே ஆற்றியவருமான தம்முடைய வேந்தருக்கும்

படைக்கடல் ஆற்றிய புகழினை கடைபோகான் அவன், அவனுடனிருக்கின்ற தோன்றும் விருப்புணர்களின் மிகுதியை, எம்மனைய கூறி அவன் படையாண்மையைப் போற்றுவது'

இவ்வாறு வியக்கின்றார் தங்கச் சான்றோர். அந்த வியப்பினாலே, ஓர் அரிய மறமாண்பினையும் வரியுடன் ஒருங்கு புகழமைந்த போர்க்களச் செய்தி மேம்பாட்டையும் நமக்குக் காட்டுகின்றார்.

## 17. கைபார்த் திருப்பன்!

தகடூர் மறவன் ஒருவனின் தறுகண்மையினை முன்னே கண்டோம். வேறொரு படைமறவன் ஒருவன் தன்னுடைய படைத் தலைவனின் மெய்க் காப்பாளனாகச் சென்று, களப்போரிற் கலந்து கொள்ளுகின்றான். அவனைப்பற்றி இங்கே காண்போம்.

தலைவன் மறுத்து சொல்லும் களிற்றின்மீது அமர்ந்தவனாகப் படையினை நடத்திச் சென்று கொண்டிருக்கின்றான். அப்பொழுது, தகடூர் மறவர்கள் சிலர் ஒன்றை வளைத்து வெளுத்தடித்துக் கொண்டு சேரப் படையணிகளைப் பிளந்து ஊடுருவியவராகக் களிற்றுமேலின் அரசனைப் போரக் கடுவேகத்துடன் வந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுள் ஒருவன் எறிந்த வேல் ஒன்று, அந்தப் படைத்தலைவனின் உயிரைக் குடித்துவிடுகின்றது.

அதனைக் கண்ட வீரன் சினங்கொள்ளுகின்றான். "அந்த வேலுக்கு உரியவனைக் கொன்று, அவன் கையிலுள்ள வெற்றி மிக்கதான கொள்ளு வாளையும், அங்ஙனம் கொன்று ஈராயிரமாக, பொருது வீழ்கின்ற போர்த்திறச் சென்று, என்னை அழைப்பினும் அடக்கும் இல்லைத்தே சென்று, என் கையினைப் பார்த்தபடியே கொழுப்போனை முடக்கிக் கிடப்பேன்" என்கின்றான்.

செல்வக் கடைக்களிற்றின் செம்மற் றகத்தெறிந்த
தொலைய வேற்போல் தொலைந்தேனே—எல்லை
கடுபட்ட விரைத்து கையார்த் திரும்பன்
விடுமலரிற் சென்று விரைத்து.

(புறத். - 1301)

'செல்வம் போராற்றலையுடையதும் மதம்பொழிவதுமான களிற்றினது. செல்வம் மத்தகத்திடத்தே எறிந்த ஆயுதத்தையுடைய நெடிதான வேலினை, மீளவும் சென்று பற்றிக் கொள்ளாது போனேனே, எல்லை கடப்பட்ட இம்மைத்து, விடுமலரில் விரைந்து சென்று, கையார்த்து திரும்பன்' என்பது பொருளாகும்.

'எல்லை கடப்பட்ட இல்' என்றது வெம்மைத்து விழுப்புண் பட்டாரை மறுத்தாது வேம்பும் வெண்சிறு கடுகும் தூவிக் காவற்படுத்தப்பட்டதாக விளக்கும் சிறு. 'அங்குச் சென்று விடுமலரித் கையார்த்திரும்பேன்' என்றதனால், அம் முகத்திடையில் அழிவெய்தும் புண்பட்டுக் கிடந்து சாவை எதிர்நோக்கி இருப்பேன் என்று வஞ்சினம் கூறியதாகக் கொள்க.

'தன் வாள்வேலினைப் பகைவரது களிற்றின் மத்தகத் தெறிந்து களித்த நகரில் மறவன் ஒருவன், அதனைச் சென்று கொள்ள நல் நெடுவேலினை மீட்டு வருவதாக ஆண்மை கூறியது இது' எனவும் உரைக்கலாம்.

எல்லையாயினும் பகை தம்மை நாடாது போர்க்குப் பாண்டி இருமார்ந் புண்பட்டதனைக் கண்டு நாம் நினைக்க வேண்டும். அதனாலேயுடன் நாட்டைக் காக்க முன்வருதல் நம் கடமை என்றும் உணர்ந்து நம்மிடையே நிலைபெறுதற்கு இச் செய்யுளைப் பன்முறை கற்றுப் பாராயணம் செய்தல் வேண்டும்.

## 18. இரப்போனுக்குக் கரப்போன்

சேரரது முன்னணிப் படை, யானைத் திரள்களுடன் கூடியதாகத் தகடூர் நகரை நோக்கி விரைந்து வந்து கொண்டிருக்கிறது. களிறுகள் எண்ணற்றவை. அதனை எதிர்த்து தன்னந்தனியனான ஒரு தகடூர் மறவன் தனக்குள் தடுத்து நிற்கின்றான்.

அவனது அருமையான ஆற்றலைக் கண்டு சேரர் படையினர் வியப்புடன் திகைத்து நின்றாலும், அவனது அழிவை நினைத்து அவனுக்கு அறிவுரை கூறி விலகிச் செல்லுமாறு செய்தற்கும் நினைக்கின்றனர்.

ஒரு வீரன் சொல்லுகின்றான் :

“கடுந்தறு போர்ப்பச் சினந்து வருகின்ற எம்முடைய களிற்றுப் படையினை எதிர்க்கத் துணிந்து முன்நிற்கும் அறியாமையாளனே! நின் அழிதல் வேண்டாம்; ஓடிப் போய்விடு” என்று.

அதனைக் கேட்டதும், அக்களம் முழுதும் நின்ற தலைவனின் சொற்களிலே நெருப்பெழுகின்றது. அவன் தோள்கள் பூரிப்புடன் நிமிர்கின்றன. அவன் கூறுகின்றான்:

“விரைய வரும் களிற்றின பெருமானே! நாகத்தைப் போல நன்றாக நெடிதாகத் தொங்கும் பெரிதான துதிக்கையினையுடைய, காய்கின்ற சினத்தையுடைய களிற்றாளனே!

“வெண்ணெயிற்போலப் பெருகிவரும் தானையினை யுடைய நும் வேந்தனைப் போல, அதோ ஒருவன் தோற்றுகின்றான். அவன் கண்முன்பாகவே உங்கள் படையணிகளின் உள்ளே புகுந்து அழித்து, உங்கள் நீவிர் புதுவிருந்து ஆவான். அங்ஙனம் புகாது போய்விடின், நன்னெறி யுத்து இரப்போனது இல்லாமையைக் கண்ட பின்னரும், அவனுக்கு யாதும்

கொடாது தன்பாலுள்ள செல்வத்தை தனித்து வாழ்ந்த பவனின் சிறுமையைப் போன்ற பழியினை யாரும் அடைவேனாக" என்கின்றான்.

**கலியா னேவே கலியா னேவே**
**காதத் துள்ள கல்லொன்றுதடக்கைக்**
**காய்சின மைந்தன் கலியா னேவே**
**வெள்ளத் தானையும் வேல்தொடு பான்முன்**
**உள்ளழித்துப் புகோ னாயின் உள்ளது**
**இரப்போர் இல்லை என்றும்**
**கரப்போர் சிறுமை யாஅது கல்லேல்**

(புறம் : 1304)

இந்த மாவீரன் தானுரைத்த வஞ்சினத்திற்கு ஏற்பவே படையணிகளிற் புகுந்து, ஊடறுத்துச் சென்று பேரும் வினைச் செய்தான் என்றும், அந்தப் போரிலே தானும் வீழ்ந்துபட்டான் என்றும் நாம் கருதலாம்.

இவ்வாறு, தன்னாண்மை நிறைந்த தறுகண்மையாளர் வாழ்ந்து சிறந்த தமிழினத்தைச் சார்ந்தவர் நாம் என்று நினைக்க, நம்மிடமும் இத்தகைய மறமாண்பு வாய் கொள்ளும் அல்லவோ!

## 19. போரில் முனைவு!

தகடூர்ப் போர் உச்சக் கட்டத்தை அடைந்து விடுகின்றது. தகடூர் நகரைச் சுற்றிலும் சேரர்களது பெரும் படை பாசறையிட்டுத் தங்கி முற்றியிருக்கின்றது. அதியமானோ, தன் நம்பிக்கையான வீரர்களது படைத் துணையை எதிர்பார்த்தவனாகக் கோட்டைக்குள் அடைத்திருக்கின்றான்.

சேரர் படை வருமானால், சேரர் படையின் பின்னணியில் அதுவும், கோட்டைக்குள்ளிருந்து வெளி

பெருந் தாரும் இரு பக்கமுமாக நெருக்கிப் போரிட லாம் எனவும், அவ்வளம் மாய்ப்பின் சேரர் அழிவர் எனவும் அதியமான் கருதியிருந்தான்.

இந்த நிலையினால், போரிடாதே ஒரு செயலும் ஆற்ற அமைந்திருந்தமை மிக நாட்டமாக நிலவியது. அதியனின் இந்த நிலையினைக் கருதும்போது, அது எந்நிலையில் அவனுடைய வெற்றிக்கு உதவுமாயினும், அதன் அடிப் படை தமிழ் மரபிற்குப் பொருந்தாததாகும் என்பதனைச் சான்றோர்கள் உணர்கின்றனர்.

அதியமானிடம் சென்று, அவனிடம், போர்நிலை பற்றி உசாவுகின்றபோது, அவன், தான் கோட்டையை விட்டு வெளியேறிச் சேரர்களைத் தாக்குதற்கான தக்க சமயத்தை எதிர்நோக்கி இருப்பதாகக் கூறுகின் றான்.

தன் திட்டம் யாதென்பதனையும் அவனால் தெளிவு படுத்த இயலவில்லை. இந்தச் சூழ்நிலையில், ஒரு புலவர் அதியனின் தன்மை பாராட்டக் கூடியதன்று என்பதனை வெளிப்படையாகவே கூறிவிடுகின்றனர்.

“கூற்றுவனை ஒப்பவனான பெருஞ்சேரல் இரும் பொறையானவன், நின் கோட்டை வாயிலின்கண் வந்து முற்றியுள்ளான். நின்னை அழிப்பதையும் தன் முடிவாகக் கொண்டுள்ளான்.

“இவ்வளம் கொண்டிருக்கும் அமைச்சர் சென்று அதற்கே நீ செய்யவேண்டியவரான கடமைகளும், அவ்வளம் அதற்குத் நின்னால் இயலாது போகுமானால், அவன் போரினை எதிரேற்றுச் சமாளித்தே நீ சாதல் வேண்டும். இவ்விரண்டனுள் ஒன்றே நீ செய்ய வேண்டு வதும், நினக்குப் பெருமை தருவதும் ஆகும்.

“அவ்வளம் சாவதற்றும் நீ விரும்பாயாயின் கோட் டைக்கு உள்ளாக இருந்து வருவது நினக்குச் சான்றோ

நாள் பதிக்கப்படும் சிறப்பைத் தருவதும் அன்று. திசைக் குப் புகழ் தருவதும் அன்று. இதனை அறியாயாய் நீ கேட்டார்க்கு மாற்றம் மிகவும் தந்துகொண் டிருப்பது முறையாகுமோ?

கூற்றுவந் துன்னின் இறைநலை வைத்தபின்
ஆற்றி மயலை அயிறல் அடாக்கானை
ஏற்றுக் களத்தே விளிதல் விளியாக்கால்
மாற்றம் அனையும் கொடுப்பரோ, காண்போர்க்கும்
தோற்றமும் தேசும் இழந்து!

(புறத். 1314)

இப்பாடல் அறவுணர்த்த சான்றோரது சொற்கள் அதியனின் தமிழ் வாளையே கட்டிப் பழிப்பதாக அமைந்துவிட, அவன் பெருஞ்சினங்கொண்டு எழுகின் றான். சொந்த படைகளிற் முத்து, அவற்றை அழிக்கும் செயலையும் மேற்கொள்ளுகின்றான்.

## 20. தானைகளும் போகும் உயிர்!

தகடூர் முற்றுகையின் முதற்கட்டம் தொடங்கி விட்டது. பெருஞ்சேரல் இரும்பொறையின் படை வீரர்கள் தகடூர்க் கோட்டையைச் சூழ்ந்திருந்த காவற் காட்டினை அழித்தொழிக்கின்றனர்.

தேர்கள், யானைகள், குதிரைகள் இவற்றின் மேல் அமர்ந்தவராகப் படைப்பாண்மைமிக்க தலைவர்கள் படை அணியணியாக வருகின்றனர். காவற்காட்டை நெருங்குமி வரையும் பேராரவத்தோடு செருக்குடைய வீரமொழி களைப் பேசியபடியே வெவ்வழ்ந்து உறுதியுடன் வருபவர்கள், காவற்காட்டை அணுகினதும், இலக்கெதிர்த்துகொல்ல முடியாத ஆவத்திற்கு உள்ளாகின்றனர்.

காட்டரிந்த அந்தக் காவற்காட்டை எவ்வித எதிர்ப்பு மின்றித் தங்களைக் கைப்பற்றிக்கொள்ளத்தக்க தகடூர்

மறவர்கள் விட்டுவிடுவார்களா என்று அவர்கள் ஒரு போதுமே நினைக்கவில்லை. கடுமையான போர்முனை நிகழ்த்தித்தான் காவற்காட்டை அழிக்கவேண்டியிருக் கும் என்று நினைத்திருந்தார்கள். ஆனால், எதிர்ப்பவர் எவரையும் காணாது திகைப்போடு அவர்கள் நிலைகுலைகின்றனர். தகடூர் மறவர்களின் திட்டத்தை அறியமாட்டாதவராகப் பெரிதும் மயக்கமுற்றனர்.

அந்த நேரத்தில், உழிஞைப் படையினர் காவற் காட்டை நெருங்கி விடுகின்றனர். திடீரெனத் தகடூர்க் குதிரை வீரர்கள் காட்டுக்குள்ளிருந்து கடுவேகமாகப் பாய்ந்து சேரப்படையினரை வெட்டி வீழ்த்துகின்றனர். அவர்களுடைய ஆவேசமான தாக்குதலால் சேரரின் முன்னணிப்படை சிதறுகின்றது. பலர் வெட்டுண்டு வீழ் கின்றனர். இரத்த வெள்ளமும் குறையுடல்களும் எங் கணும் மலைமலையாகக் குவிகின்றன. சாவைத் துச்சமாக வென்று முடிவுடன் வந்து மோதுகின்ற தொகுதி வீரரான தகடூர் மறவர்களது யானைத்திறலுக்கு முன்னர்ச் சேரப் படையினர் நிலைகுலைந்து போகின்றனர்.

காவற்காட்டுப் போரை முன்னின்று நடத்திய சேரத் தளபதியின் உள்ளம், தன் படையின் பேரழிவைக் கண்ட தும் கொதிப்படைகின்றது. அவன் கண்கள் அனலைக் கக்குகின்றன. குதிரையை வேகமாகச் செலுத்திச் சிதறிக் கலைந்து ஓடும் தன் படைமறவர்களைத் தடுத்து நிறுத்த முனைகின்றான்.

“போரில் கடுமை மிகுதியாக இருக்கின்றது. முறை யாகத் திட்டமிட்டும், குற்றுயிரைக் கொன்று குவிப்பதி லும் ஆற்றல்மிக்கவரே தாக்குதலில் ஈடுபடுத்தப்பட வேண்டும். இல்லையேல், நம் முன்னணிப்படை முற்றவும் அழிந்து போகும். காட்டின் மறைவிலிருந்து தொகுதி மறவர்கள் வெளிவருவதனால், அவர்களை முறையாக எதிர்த்து நிற்க நமக்கு வழியே இல்லை. ஆகவே, நம் படையின் அழிவைத் தடுக்க வேண்டுவோமாக. இப்போது

பின்வாங்கிப் போவதொன்றுதான் வழி" என்று தலைவ னிடம் கூறிவிட்டான் ஒருவன்.

அதனைக் கேட்டதும் தலைவனின் சித்தம் சிதறிவிட் டது. தன் மறுமையைத் தகர்த்துவிட்டு, அவன் கூறு கின்ற வீரவாசகம் இதுவாகும்:

'உயிரானது இந்த உடம்பிலேயே நிலைத்து இருந்து விடக்கூடிய ஒன்றென்று சொல்லமாட்டார்கள். அதனைக் காத்துப் பேணுவதற்கு எத்தனை வழிகளையும் நாம் தேடு கொள்ளலாம். ஆனால் அதுவோ, களத்தில் இல்லா விட்டாலும், என்றாவது ஒரு நாள் நாமாகப் போய் விடக்கூடியதாகவே இருக்கிறது.

'ஆகவே, உயிரைப் பேணுவதற்காகப் பின்வாங்கு வதில் பொருளில்லை. போர்க்களத்தில் வெற்றி பெறு வதோ, அல்லது வீரமரணத்தைத் தழுவுவதோதான் சிறப் பாகும். பழி வருவதான புறமுதுகிட்டுவரச் செய்வது விரும்பத்தகாதது. அந்தப் பழி என்றுமே மாறாது. வழி வழி வரும் சந்ததிகளையும் குறித்து நினைத்து பழியினை உண்டாக்கும்.

"ஆனால், களத்தில் சிறந்தாலும் வெற்றிபெற்றா லும் வருவது எப்போதும் மேன்மைதான். பகைவர் போற்றுகின்ற தலைமைப்பேற்றுடன் ஆனால் அடையப் பெறுவர். பகைவர் தொழுது போற்றும் வாழ்வுதரு வாழ்க் கையும் ஆனால் நாம் அடைவோம். ஆகவே, மேன்மைக்கு உரியவையே செய்யுங்கள். மீண்டும் களம் புகுந்து எதிர்ப்படையினை அழிப்பதிலேயே ஈடுபடுங் கள்".

இவ்வாறு வீரமுழக்கம் செய்து முடிக்கிறான் தலைவன். அவனுரை, பின்வாங்கி ஓடத்தொடங்கியவ ரைக் கிறுகிறுக்கவும், புலவோர்க்கு ஆர்த்தெழவும் தூண்டு கின்றது.

181744

நற்கொள வெறுஞ்சிறு வேந்தவைப்புத் தலைவிருந்து
ஒத்தத் துதவிர சாறுமாந்—மிதிர்ந்த
பல்லர்த்தும் செய்யல உடைந்தார் பலர்மொடு
வாறுவற வாழ்க்கை இலைபுபாம் அல்லதோர்
வேள்வை வீழும்பப் பழிசுது செய்யவோ
நாவேயும் போதும் உயிர்க்கு. (புறம் : 338)

'உடம்பைப் பாராட்டாது சென்று கடமை தீர்த்து வெற்றிப் புகழ் பெறுவீராக' என்று, தன் படைமறவரை ஊக்கப்படுத்துகின்ற சிறந்த செய்யுள் இதுவாகும். படை மறவரது மறவாண்மைக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டும் இது.

## 21. கண்ணுறும் படுங்கொல்!

தகடூர் நாட்டு மறவன் ஒருவன், காவற்காட்டின் ஒரு பகுதியைத் தன்னோடொத்தாரான வேறு சில மறவர் களுடன் ஒரு பகல் முழுதும் காத்து நின்றிருந்தான். அன்று பகல்முழுதும் அவனுடைய காவல் எல்லையருகே சோர்ப்படை எதுவும் வரவில்லை. வேறு பகுதிகளிலோ கடுமையான போர் நிகழ்ந்தது.

மாலை வேளையில், தன் பகுதிக் காவலை எதிரணித் தோர்பால் ஒப்படைத்துவிட்டு, அவன் சோர்வுடன் வீடு திரும்பி னான். அவனோடு களப்போரில் கலந்துகொண்டு இரும்புவரான வேறும் பத்துவொன்பதுருக்கின்றனர்.

"தம்முடைய மறவருள் ஒருவன் இன்று போரில் இருபது மறவர்களை வெட்டி வீழ்த்தி நின்று ஆடிக் கொண்டான். காலைக்கண் இரண்டும் குதிரைகள் பலவும் அவன் வாளுக்கு இரையாயின. அவன் தோற்றத்தைக் கண்டதும் பகைப்படை மறவர்கள் எல்லாம் ஓடத்தொடங் கினர். முடிவில், அவனும் வெட்டுண்டு வீழ்வான்கொல்லாத



6-IA,T N9

தருகின்றான். அவ்வமைதியைப் போலப் போர்த்தொழிலையன்றி, தம் தாயகத்தைக் காப்பாற்றும் வழி ஏதுமில்லை" என்று, தானறிந்த நிகழ்ச்சியை ஒரு வீரன் செருக்குடன் கூறிவருகின்றான்.

'வெண்குருகைப் பாதுகாக்கும் காவலன் இன்று ஆற்றிய பெரும்போரை நினைத்தாலும் நம் நெஞ்சம் விம்முகின்றது. காவலனைப்போலப் படைவீரர்களுடன் பகுத்து கொன்று குவித்து வீரங்காட்டி விளையாடி நின்றான் அவன்! அவன் போராண்மையைக்கண்டு நினைத்து நிலையாதார் நாம் யார்? அவன்தான் அதோ விழுப்புண் பட்டவனாகப் பிறர் தன்னைச் சுமந்து செல்ல, அதோ போய்க் கொண்டிருக்கின்றான்" என்று, புண்பட்டு வரும் மாவீரனைக் காட்டி ஒருவன் கூறுகின்றான்.

இப்படிப் பலரும் சொல்லிவந்த வகையில் நிகழ்ச்சிகளை கேட்கக்கேட்க, வீரனின் மனமும் வெறிகொண்டு விடுகின்றது. இரவு முழுதும் உறக்கம் கொள்ளாதவனாகக் கிடந்து, அன்றைய போரில் தான் கலந்து கொள்ளும் வாய்ப்பற்றுப் போனதை நினைத்து, கவலை கொண்டிருக்கின்றான் அவன்.

தம் நாட்டின்மீது பகைவர்கள் படை கொண்டுவந்து முற்றியிருந்த கொடுமையினால் வெறுமையுற்றிருந்த அவன் தாயும், பிற தாய்மார்களும் திண்ணையில் அமர்ந்தவராக, அன்றையப் போரைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றார்கள்.

அப்பொழுது ஒருத்தி, 'நின் மகன் இன்னும் உறங்கவில்லையோ?' என்று கேட்கத், தாய் தன் மகனின் நிலையைக் கூறுகின்றாள்.

'நேற்றான் வந்து குத்திக்கொள்ள போர்க்களத்திலே, ஒருவர் தம்மை எதிர்த்து நிற்கும் மற்றொருவருக்கு எதிராகப் போர் மேற்கொண்டு செல்லுதல் அல்ல; ஒன்று அவரை வீழ்த்தி வெற்றி கொள்ளல் வேண்டும்; அல்லது களத்தில் தானாவது பட்டு வீழ்தல் வேண்டும்.

"இவை இரண்டும் நேராதவனாக, இவன் களத்தி னின்று திரும்பி வந்துள்ளான். அந்தக் கவலையினால் மனம் நொந்தும் கிடக்கின்றான். அவன் தூங்குதலும் செய்வானோ?" என்கின்றான்.

தம் மகனின் போர்மறத்திலும், கடமையுணர்விலும், அந்தத் தாய்க்கு அவ்வளவு நம்பிக்கை! அவ்வளவு பெருமிதம்! நாட்டைக் காப்பதில் அந்த இளைஞருக்கு அவ்வளவு ஆர்வம்!

**கனையுள்ளும் கல்லை எய்தாச் பகைவிய**
**... ... ... ... ... ...**
**வேற்றுக் களத்தின் ஒருவர்தம் மாறாகச்**
**சென்றான், ஒருவன் பேர்**
**புண்ணும் படுக்கலான், தான் படான், போந்தாக**
**கண்ணும் படுமோ கலன்று!** (புறத். 1216)

காலையில், அன்றைப் போருக்கு அணிகொண்டு திரண்ட படைமறவர்களுள் ஒருவன், இரவெல்லாம் உறக்கமற்றவனாகி வந்துகொண்டிருந்த இளைஞனைக் கண்டு, அவனுடைய மறமாண்பினை வியந்து கூறுவதாக வும் இதனைக் கொள்ளலாம்.

## 22. அறியுநர் என்னும் செருக்கு

வேந்தரால் நாம் அறிந்து பாராட்டப் பெற்றவர் என்றும்போது, அந்தப் பெருமித நினைவால், படை மறவர் செருக்குடன் போராண்மையைக் காட்டத் தொடங் குவர். களத்தில் பகைவரோடு போரிட்டு வீழ்ந்தாலும், அந்தப் பாராட்டு அவர்கட்குரிய பெருந்தகைய பேறாகக் கொள்ளப்பட்டு, அவர்களின் குலத்தவரால் மதிக்கப்படும். இப்படிப்பட்ட செருக்குடையராவதனையே மறவர்கள் அனைவரும் விரும்புவர். அன்றி, உயிரைப் பேணிய வராக ஒதுங்குவதனை எவருமே கருதமாட்டார்கள்.

போரின் முன்னணிப் படையினை "எதிர்நின்று தடுத்தும், தமியனாக நின்று போரிட்டு, அந்தப் போரில் வீழ்ந்தும் போயினான் ஒரு மறவன். அவனுடைய மறச் செயலை அறிந்து வியந்த மன்னன், அவனுடைய பெயரினைப் போற்றி உரைத்தும் புகழ்கின்றான். அந்தப் புகழ்ச்சியினை அறிந்த மறவர்கள் ஆரவாரிக்கின்றனர். அவர்களுள் ஒருவன், தானும் அத்தகைய புகழ்ச் செயலை ஆற்றப் போவதாகக் கூறிய, அவன் அருகிலிருந்த ஒருவன், அந்தச் செயலினது அருமையினை விளக்குவான் போல, இப்படிக் கூறுகின்றான்.

"வெற்றிமாலை சூடிப் படையுடன் வீரர்கள் வெள்ளம்போல அணுகி வருகின்றனர். அப்பொழுது, ஆற்றில் கல் வருகின்ற கடுவெள்ளத்தினுடைய புதுப்புனலைத் தடுத்து நிற்கின்ற கல்லணையைப் போல, அவ்வீர மறவன், தானே தனியனாகத் தடுத்து நின்றான். எதிர் வரும் பெரும்படைக்கு எதிரே தான் ஒருவன் தடுத்து நிற்பதனால், தான் அழிவது உறுதி என்பது கருதி அவன் தடுக்கின்றானும் அல்லன். தளர்ந்து பின் நோக்கினானும் அல்லன். அசையாது நின்று, அனைவரையும் வெட்டி வீழ்த்திக்கொண்டிருந்தான்.

'அவனைப் போலத் தானைப்படையைத் தாங்கி நிற்கும் துணிவுடையார் இங்கு அல்லவர். பிறருக்கு அருகிலிருக்க இனத் தானிப் பாணையினையும் கூறுகளைய தோள்களையும் உடைய மன்னரால் அறியப்பட்டார் என்னும் செருக்கினைப் பெறுதல் எளிதாமோ?

அது எளிதன்று என்று கூறி, அந்த வீரனின் நற்றன்மையினைப் போற்றுகின்றனர் மறவர்கள்.

வெற்றுமலை வெள்ளம் வெரீஇ யாற்றுக்
கடும்புனற் கற்சிறை போல ஒருவனது
மீதுபாய்ந் தன்னான் தனியனோ பொற்புனை
முறிமலைக் கண்ணி முழுவற்றோள் மன்னர்
அறிவுநர் என்னுஞ் செருக்கு. (புறத்: 1318)

'மன்னர் அறியுநர் என்னும் செருக்கு எவன்கொலோ?' என உரைத்து, அதனைத் தாமும் அடைவதனை விரும்பி நிற்கும் மனமாண்பினைச் செய்யுள் நன்றாக நமக்குக் காட்டுகின்றது.

## 23. மூத்தோர் இளையவர்

சிலர் உடலளவில் மூத்தோராகி விளங்குகின்றனர். சிலர் அறிவினாலும் பண்பாலும் மூத்தோராகிச் சிறப்புப் பெறுகின்றனர். உடல் முதுமையானாலும் அறிவில் இளையோராயிருப்போரும் உளர்; உடலின் இளமையிலும், அறிவின் முதியோராக விளங்குவோரும் சிலர்.

போர்மறத்தாலும் பொறுத்தமையாலும் இந்த முதுமை என்பதும் இளமை என்பதும் காணப்படும்.

'நாம் பிறந்துள்ள அந்த மிக்க சிறுமையுடையதேனும், பெருமைப்பெற்ற மன்னர்களையுடைய குடிப்பிறந்த மான மிகை அளித்த நம் மன்னர்கட்கும் நம் உடம்பினைப் பலியாகக் கொடுத்தேனும் சிறந்தார்கள். முதியோர் என்னும் மதிப்பிற்கு உரியவர்கள் ஆகின்றனர். இப்படித் தான் வீரர்களை ஆக்கியோர்கள் அறிந்திருந்த கருதுவார்கள்.

இந்தக் கருத்தைப் பதித்துச் சொல்லி, அவரால் உயர்ந்தும் பெருந்தெம்பமுடைய நல்ல சிறப்பைக் காணும் அடையாளமாக ஆன்றோர் பேசுகின்றான் ஒருவன்.

தன்னாது இளமை பாராத வறுமைக் கண்ட வீரன் ஒருவன், அவன்பால் சென்று, 'நீ மிக்க இளையவன் தம்பி! நீ போர்க்கு வருதல் வேண்டா' என்று கூறவும், அந்தச் சிறுவன், தன் ஆண்மையைத் தோன்ற உரைப்பது பொருளாக அமைந்த செய்யுள் இது.

பிறந்த பொழுதேயும் பெய்தண்டார் மன்னர்க்கு
உடம்பு கொடுத்தாரே மூத்தார்-உடம்பொடு
முத்துழிக் கண்ணும் இளையரே தங்கோமாற்கு
உற்றுழிக் காவா தவர்! (புறத்: 1219)

'பிறந்திருக்கும் அந்தப் பொழுதிலேயும், பெய்த தண்ணிய மலர்மாலையுடைய மாலையினை அணிந்த தம் மன்னவருக்குத் தம் உடம்பினைக் காணிக்கையாகக் கொடுத்தவர்களே, அறிவினால் மூத்தார் ஆவார்கள்.

'அன்றி உடம்பொடு முதிர்ந்திருந்தும், மன்னர்க்கு ஓர் இடையூறு வந்தவிடத்து உதவாது அமர்ந்திருப்பவர் எவரோ அவரே இளமை உடையவர் ஆவார்கள்!

இவ்வாறு ஆண்மை மிகுதி தோன்ற உரைத்துப் போர்க்கெழுந்த மறவர் இளைஞர்களைக் கொண்டிருந்தது தகடூர் நாடு. நாட்டுரிமைக்குப் போரிட முற்படும் அத்தகைய நல்லோரை உடையதாக இருந்தமையால் தான், இன்றும் நாம் அதன் புகழைப் போற்றுகின்றோம்.

## 24. வேந்தன் நீ ஆயினாய்!

தகடூர்ப் போர்க்களம் இருதிறத்தும் வெற்றி தோல்வி காணும் பொருட்டாக, கழிபெருமாறாகச் சேரரும், தோல்வியுறாராகத் தகடூர் நாட்டாரும் இருந்தனர். ஆயினும், இரு திறத்தார்க்கும் படைத்துணையாக வந்து மற்றும் பற்பல குறுநில வேந்தர்களும் அமைந்திருந்தனர். அவர்களுள், தகடூரார்க்குத் துணையாக அமைந்திருந்த வேந்தன் ஒருவன் ஒரு சமயம், தன்னுடைய படைமறவருள் ஆர்வல் மிகுந்தவனாகிய ஒரு மறவனை அழைத்து, அவனுக்கு ஒரு பணியினையும் விதிக்கின்றான்.

"வீரனே! சேரரோ மிகவும் படைபலத்துடன் வந்து பாடிவிட்டிருக்கின்றனர். யான் கூறும் செயலினை மிகவும்

இடாப்பேரடானது. அவர்களது படையணிகளும் ஆற்றல் மிகுந்தனவாக விளங்கும். தம் பகுதிப் படைகளைப் பேரறிவுக்கு கட்டுப்படுத்தினான் கொடியவன் ஒருவன்; அவனைக் கொல்லுவது குறித்தே நினைவு ஏவுகின்றேன். ஆகவேதான், அவன் படையினையும் நீ சென்று அழித்து வருதல் வேண்டும்.

“இந்தச் செயலை இரவுப்பொழுதில் அவர்கள் பாடிவீட்டு உறங்கியிருக்கும் வேளையிலே சென்று செய்தல் சிறந்தது. அவர்கள் உறக்கத்திலே ஆழ்ந்திருக்கும் அமைதியிடையே, காவலர் அறியாதபடி காவலை மீறாத்து சென்று, அந்தக் கொடியவனையும் அவன் படைமறவரையும் கொன்றுவிட்டு வேண்டும். இதனைச் செய்யத் தகுதி உடையவர் நின்னையன்றிப் பிறர் எவருமில்லை. ஆகவே, இதனை நம்முடைய நன்மைக்கருதிக் கருத்த துணைவருடன் சென்று நிறைவேற்றி வருவாயாக” என்கின்றான்.

வேந்தனின் ஆணையைக் கேட்டதும் விறுகொண்டு எழுகின்றவன் அந்த வீர மறவன். அந்நிலையும் எழாதது மட்டுமன்று, தன் வேந்தன்பால் சீற்றமும் கொண்டு நின்றான்.

படையுடன் எதிரிலை எதிர்த்து போரிட்டு வென்றேனோ, அன்றி அச்செயலுள் வீழ்ந்தேனோ ஆண்மை யாகுமே அல்லாமல், கள்ளத்தனமாகப் போய்ப் பதுங்கிச் சென்று, அவர் உறங்கும் காலத்தில் கொல்லுவது ஆண்மைச்செயலாக ஆகமாட்டாது.

ஆண்மையற்றவனாகிய தன்னை, ‘இரவில் செல்க’ என்று கூறியது, தன்னுடைய ஆண்மையினைப் பழித்ததாகும் என்றே சீறுகின்றான் அவன்.

“படைப்போரை வேல் வீரர்களையுடைய பகைப் படையினைப் பகலிற்சென்று பொருது நின்று ...

வாள் அஞ்சி நிற்கும் தலைவரோ? அல்லவே! அவ்வள வாகிய என்னை நோக்கி, இரவோடிரவாகச் சென்று அழித்து வருக என்று ஏவுகின்றானே! மிக வியந்து சென்று செய்க எனவும் ஆணையிடுகின்றானே!

'நீ என் வேந்தன் ஆயினாய். ஆதலால், என்பால் இத்தகைய இழிசெயலைச் செய்யக் கூறிய நின்னைப் பொறுத்தேன். அன்றிப் பிறர் யாவராயினும் இவ்வண்ணம் என்பால் போந்து என்னை நோக்கிக் கூறியிருப்பின், அவ்வாறு சொன்ன அவருடைய நாவானது, மீண்டும் அவர் வாயுட் புகுந்திருக்குமோ? அதனை வெட்டி வீழ்த்தி விடுப்பேனே!'' என்கின்றான் அவன்.

**பாகவல்வேற் றானைப் பகலஞ்சு வேலை**
**இரவே எறிவென்றான் என்னை—விரைவிரைந்து**
**வேந்தன்நீ ஆயினை அன்றிப் புகுமே**
**போலுமென்னைக் கொல்லிய நா!** (புறத் : 1230)

பகைவரை அழித்தல்தான் படை மறவரது நோக்க மாயினும், அவ்விடத்தும், மதித்து அவரைக் கொல்லுதற்கு நினையாத பேராண்மை கொண்ட மறவனை, நாம் இங்குச் செய்யுளிற் காண்கின்றோம். தமிழரது மறமாண்பு, அதிலும் தமிழ்நாட்டு மறவரது செவ்விய மறமாண்பு, நம்மைச் சிந்தை சிலிர்க்கச் செய்வதாக விளங்குகின்றது!

## 25. வாளுழத் தரும்!

'வேந்தன் நாட்டாரின் கவிந்துபோன தன் தலை நோக்கி விரைய வந்து கொண்டிருக்கின்றது. அதன் வரவினைத் தடுத்து நிறுத்தத் துணிவுடையார் விரைந்து செய்க' என்று தமிழ்ப் படைத் தலைவர்களும் நருமன், தன் தலைமையிலிருந்த படைமறவருக்கு ஆணையிடு கின்றான்.

அந்த ஆணையைப் பிறந்ததும் படையினரிடையே ஆரவார ஒலி எழுகின்றது. அனைவரும் களிற்றுப்படைப் போர்க்குப் போவதாகத் தம்மை ஒருவரும் முந்துகின்றனர். 'இன்று நம் வீரத்திற்கு ஒரு நல்ல வாய்ப்பு' என்று பெருமிதம் கொண்டு, தத்தம் குதிரையேறிச் செல்லத்தொடங்கும் புறப்படு கின்றனர்.

இவ்வாறு திரண்டு சென்ற நகுரி மறவர்களின் கூட்டம், கானத்துக் கடும்புலிகளைப் போலச் சென்று, வருகின்ற சோழ களிற்றுப் படையணிகளுள் ஊடறுத்துப் புகுந்து அதனைக் கலக்குகின்றது. புகுந்தவர் சிறு கூட்டத்தவரே எனினும், அவர்களது போர் வெறியின் கடுமையால் சோழப்படையணி சிதைகின்றது. வெட்டுண்டு வீழ்ந்தோரும், புண்பட்டுக் கிடப்போருமாகக் களத்தே ஓர் பேரொலி எழுகின்றது. 'வெட்டுக வெட்டுக எனவும், குத்துக குத்துக எனவும், கொல்லுக கொல்லுக எனவும்' ஒலிகள் நாற்புறமிருந்தும் எழுகின்றன.

இவ்வாறு நிகழ்ந்த போரின், நகுரி மறவன் ஒருவன் பெரிதும் வெற்றி விளைத்துக் காளையைப் போலக் கடும்பரி செலுத்தி வெற்றியுடன் வந்து கொண்டிருக்கின்றான். களிற்றின்மேல் வீற்றிருந்து போராடும் வீரர்களை வெட்டி வீழ்த்திக் கொண்டிருக்கும் அவன், களிறுகளைமட்டும் வெட்டாது விட்டுவிட்டுச் செல்லுகின்றான்.

அன்றைய நாளத்தலில் ஒரு நிலை நடுவுறாக முடிவுறுகின்றது. சோழர் களிற்றுப் படையணி முன்னேறுவது நின்றது. தம்முடைய இருப்பிடங்களைச் சரி செய்து கொண்டுசெல்லப் போர்ப் படைத்தலைவர்கள் ஏற்பாடு கின்றனர்.

நகுரி மறவரும் அன்றுபெற்ற வெற்றியுடன் முழங்கிய வாறாகத் தம் நகருக்குள் திரும்புகின்றனர். அவ்வாறு திரும்புகின்றவர்கள், அன்றையப் போர் நிகழ்ச்சியின் பல கூற்றையும் பற்றிப் பேசியவாறாகவே வருகிறார்கள்.

வரும் அவர்களுடைய வரவை எதிர்பார்த்துத் தகடூர் மக்கள் வெற்றிக் களிப்புடன் காத்திருக்கின்றனர்.

இந்த நிலையிலே, யானை வீரர்களைக் கொன்று, யானைகளை வெட்டாது விட்டுவிட்டுவந்த மறவனை நோக்கி, ஒருவன், 'தலைவனே! யானை வீரனை வெட்டி மாய்த்ததுடன், யானைகளையும் வெட்டி வீழ்த்தல் வேண்டுமல்லவோ! அவைகளை வெட்டாது விட்டு வருவதனால், மீண்டும் அவை போர்க்குப் பயன் படுதலும் கூடுமல்லவோ?' என்கின்றான்.

'நாம் கைப்பற்றிக் கொணர்ந்த சில யானைகளைக் கண்டிருப்பாய் அல்லவோ! அவை நமக்குப் பயன்பட மாட்டாவோ?' என்கின்றான் தலைவன்.

'எனினும், வெட்டிச் சாய்ப்பதுதான் நன்று' என்று கூறுகின்றான் அவ் வீரன்.

'நண்பா! யானையே வளைத்து வைத்திருப்பது போன்று வலிமையமைந்தக் கொண்ட நெடிய பெருங்கை யினை உடைய யானைக்கு, என் கையிலுள்ள இந்த வேற்படை உரித்தாகவேண்டும் என்பாய் நீ.

''அதனை வெட்டி வீழ்த்துதல் எனக்கும் எளிதாகவே இருந்திருக்கலாம். ஆனால், ஒன்றை மறந்து விட்டனை போலும்! எத்துணை வலியுடைதாயினும், அந்த யானை தானும் ஒரு விலங்கேயாதும் அல்லவோ? அதன்றியும் ஒன்றைக் கையினை மட்டும் உடையதும் அல்லவோ! ஆகவே, அதனை வெட்டி வீழ்த்துதல் நன்று என்கின்ற ஒரு நன்மைப்பாட்டை யான் அறியமாட்டேன். அது என் வீரத்திற்கு தானும் தருகின்ற பழியுடைய செயலே யாகும்'' என்கின்றான் அவன்.

வாள்வலைக் கிவள்ள வலிதறு சீர்நடக்கை
யானைக்கீ தென்கையில் எஃகமாம்—தானும்
விலங்காதல் ஒருகைத்தால் வெல்வமைச் சொற்றும்
நல்கானோள் நறுவத் தரும். (புறத். 1020)

"யானையை விலக்காதவனாயும், ஒரு எருதினை மட்டுமே கடைபறாதவனாயும், அதனை வெற்றி கொண்டு கெட்டியாய்ப்பது தன் மறமாண்பிற்கு நாளும் தருவதாகும்" என்று கூறுகின்றான் அந்தத் தலைவன்.

அவனுடைய மறமாண்பின் பெருமித நிலையினை நாம் இதனால் அறிகின்றோம். களப்போரின் இடையிலுங்கூட, இவ்வளவு பண்புடனேயிருந்து போரிடுவது, தமிழ் மறவரின் மரபாண்மையாக இருந்தது. இதனை அறியும்போது, அந்த மறவர் தலைவனை நாமும் நினைத்துப் போற்றி நெஞ்சிற்கொள்ளுகின்றோம்.

## 26. சான்றோர் மகன்!

சேர நாட்டுப் படை மறவர்களுக்கும் சோழ நாட்டுப் படை மறவர்களுக்கும் இடையே, நெடுநாளைய பகைமைப் பூசல் ஏற்பட்டு விடுகின்றது. தொல்லும் புலிக் கூட்டங்கள் தம்முள் ஒன்றுடன் ஒன்று சினந்து போரிட்டுக்கொள்வதைப் போல, இருதிறத்து மறவர்களும் கடுமையாகப் போரிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

அந்தக் கடும்போரின் இடையேயும், ஒரு மறவன் தன்னுடைய குதிரைமீது அமர்ந்தவனாகச் சுற்றிச் சுழன்று திரிந்து கொண்டிருக்கின்றான். தன்னை எதிர்த்தாரை வெட்டி வீழ்த்திச் செருக்குடன் முன்னேறிச் செல்லும் அவன், தன்னைக் கண்டு ஒதுங்கிப்போகும் சேரர் படை மறவருக்கு யாதும் ஊறு விளைக்காது, எவரையோ தேடுவானைப் போலச் சென்றுகொண்டே இருக்கின்றான். முடிவில் அவன் எதிர்பார்த்ததும் வந்து வாய்க்கிறது. சேரர் படையணிகளுள் அன்றையப் போரைத் தலைமையேற்று நடத்தினவும் தலைவனை நாடித்தான் அவன் சென்றிருக்கின்றான். அவனைக் கண்டதும் சிங்கக் குருளைபோலப் பாய்ந்து, அவனை

வெட்டி வீழ்த்தி, வீரமுழக்கம் இடுகின்றான். அவனுடைய வெற்றியைத் தமிழ்ப் படை ஆரவாரித்துப் போற்றுகின்றது. தலைவனை இழந்துபோன சேரர்படை சிதறுண்டு பின் வாங்குகின்றது.

வெற்றி முழக்கத்துடன் தமிழ் மறவர்கள் தம் ஊர் திரும்புகின்றனர். அந்த மாவீரன் பகைவரும் சூழ்ந்து தன்னைப் போற்றத் தருக்குடன் பவனி வருகின்றான். அவனுடைய செயலை வியந்து சான்றோர் பாடுகின்றனர்.

''பகைவரது யானைக்கூட்டத்துக்கு எதிராகத் தானும் ஒரு யானையாகத் தன்னை நினைத்துக் கொண்டு, அவற்றை வெட்டி வீழ்த்துகின்றவனும் அவனேயாவான்.

''களிற்றின் கழுத்தின்மேல் அமர்ந்துவரும் மேலாட்களைக் கண்டவுடன், அவரை வெட்டி வீழ்த்த முயல்பவனும் அவனே.

''அவர்களையெல்லாம் வெல்வது தன்னுடைய பெருவீரத் தன்மைக்கு இழிவென்றே கருதினான் அவன். அச்செயல் தனக்கு நாணைத் தருவதென்றே ஒதுங்கினான் அவன்!

'வலிய போர்க்களிறுகளை வெட்டி வீழ்த்தவா வென்னில், அவை வீழ்ப்பினபோது, அவற்றையும் வெட்டி வீழ்த்தாது மேற்செல்வான் அவன்!

'தலைவனை வெல்லவேண்டும்' என்று தருக்குடன் மேற்செல்லும் அவன் சான்றோர் பெற்ற மகன்! வெற்றிக்கரிய வெற்றியே பெறும் பெருமைக்குரிய செம்மாப்புடையவன்!'

யானையைக் காண நெறியான் களிற்றெருத்தின்
மேலான் எறியான் மிகநாணக்—காளை
கருத்தினதே என்று களிறெறியான், அம்மா!
தருக்கினனே சான்றோர் மகன்! (புறத். 1322)

"எவ்வளவு முரக்கும் ஆற்றலுடைய மறவர் பெருந்தலைவராயினும் அவன், தனக்கு நேரான தகுதியுடையோராகும் வீரர்களுடன் மட்டுமே போரிட்டுத் வெற்றி கொள்வான்; தனக்குக் குறைந்த தகுதியினர் எதிர்ப்படினும், அவரைப் பாராட்டாது மேற்செல்வான்." இவ்வகை உரைத்துத் தமிழ் மறவரது தகுதி மேம்பாட்டைக் கூறி வியக்கின்றனர் சான்றோர்.

## 27. காப்பு அமைத்தனன்

தகடூர்க் கோட்டையின் வலிமையமைந்த காவல் அமைப்புக்கள் பலவற்றையும் பற்றி முன்னர்க் கூறினோம். தகடூர் மறவர்கள் எத்துணை மறமாண்பு காட்டியவராகப் போர் ஆற்றிய போதும், அவர்களுடைய தறுகண்மைத் திறன் எல்லாம், கடல்போலப் பெருகி வந்து அலைஅலையாக மோதிக்கொண்டிருக்கும் சேரர்படைகளுக்கு எதிரே நெடுங்காலம் நிலைத்திருக்க இயலவில்லை.

கோட்டை மதில்களை அடுத்துத் தொலைவாகக் காவற்காட்டை யொட்டிப் பல சிறுசிறு காவல் நிலையங்கள் இருந்தன. காவற்காட்டினுள் பகைப்படை நுழைந்து விடாதபடி தடுத்து நிற்கும் மறவர்கள் அவற்றைக் காத்து நின்றனர். இவற்றுள் சில பகைவர்க்கு வீழத் தொடங்கி விட்டன. மிகவும் கடுமையான போருக்குப் பின்னரே அவை வீழ்ந்தன. அவற்றைக் காவல் புரிந்திருந்த தலைவர்கள் ஒவ்வொருவரும் இறுதிவரை உயிரையும் பேணக் கருதாத உறுதியுடன் நின்று போரிட்டனர்.

புரிசைகள் பல இப்படி அடுத்தடுத்து வீழக் காவற் காட்டின் அங்கங்கு நிறுவப்பெற்றிருந்த பலப்பல அரண் ஞாயில்களும் சரியத் தொடங்கின. கோட்டையைச் சார்ந்த அகழியிடத்தே நடந்த போரோ மிகமிகக் கொடிதாக இருந்தது.

அவனைத் தடுக்க முயன்ற சோணாட்டு மறவனும், அவனைத் தடுக்கமுயன்ற தகடூர் மறவனும், தத்தம் கருமமே இமையின் மேலோங்கித் திறமைகாட்டினர். இரு திறத்தாரும் ஒருவரை நோக்கி மற்றவர் எய்த கணைகளின் பெருக்கமோ சொல்லி முடியாது. கணைகளின் பெருக்கத்தால் அகழிலே சில இடங்களில் தூர்ந்து போயிற்று என்றால், அங்கு நிகழ்ந்த போரின் தன்மையினையும், அதனிடத்து வீழ்ந்த தமிழ் மறவரின் பெருக்கத்தையும் எவ்வாறு கூறுவது!

களத்தால் எங்கணும் கொழுமை மக்கள் நிறைந்த தகடூரில் போரும், இப்படிக் கூறும் அதிர்வாடுற்றுக் கிடந்தது; மறவர்களின் வாளொலியும், போர்க்களத்துப் பிறந்த ஆரவாரங்களுமே எப்புறமும் நிலவின.

இந்த நிலையிலே களத்தே விழுப்புண்பட்டான் ஒரு வீர மறவனை, புண்ணுக்கு மருந்திட்டவராக, அவன் இல்லத்தார் பேணிக் காத்து வருகின்றனர். பேய்க் குற்றம் ஏற்பட்டு அவன் இறந்துபோய்விடக் கூடா தென்று கருதி வேம்பும் வெண்சிறுகடுகும் தூவியுள்ளனர். கருமையான தழைப்பினையுடைய தொச்சி மாலையினைச் சூடியவனாகத் திருந்திய வேலினையுடைய அவன் ஆற்றிய போர்ச்செயல்களைப் பாடும் விருந்து பேசுகின்றனர்.

இப்படித் தொடர்ந்து பலநாளும் நிகழ்ந்து வந்த போரினாலே ஏற்பட்ட இழப்புக்கள், தகடூராக்கு மிகுதியாக இருந்தன. அதன்றி எண்ணவே அவர்கள் வருந்திய வருத்தமும் மிகுதியாயிருந்தது. மக்கள் பலரும் வருந்துவார் ஆயினர். ஆரவாரத்தாலும் வளத்தாலும் சிறந்து விளங்கிய தகடூர் நகரம், களத்தே பட்டோரை நினைந்துக் கரைந்து புலம்பும் அவர்தம் உற்றாராலும், களத்தே விழுப்புண்பட்டு வந்தாரைப் பேணிக் காத்துவரும் உறவினராலும், எங்கணுமே சோகம் நிலவுகின்ற ஒரு தன்மையினையும் பெற்றது.

இந்த நிலைமையிலே நகரம் மாறுபட்டதைக் கண்டு சான்றோர் வருந்தினர். நகரிற் போரினை நிறுத்திவிடாது செய்ததற்குப் பெரிதும் முயன்ற அவர்கள், தம் முயற்சியின் தோல்வியால் ஏற்பட்ட போரினது அழிவாற்றலைக் கண்டு, பெரிதும் வேதனையுற்றனர்.

வீரன் ஒருவன் களத்தே பெரும்புண் பட்டான். பகைவர் எறிந்த கொல்படை அவனைக் கொல்லவில்லை யாயினும், அவனுடைய உடலின் பெரியதொரு புண்ணினை ஏற்படுத்தத் தவறவில்லை. இன்றேனும் உயரிய புகழினையுடைய சிறந்த புண் அது! ஏனெனில், பகைவரை எதிர்த்தழிக்கும் முயற்சியிலே பெற்றது! முன்னேறிப் போரிட்டதிலே பெற்றது!

அந்த வீரனைக் கட்டிலின் இட்டு, இளையரும் முதியரும் நல்ல நெறியினையுடைய மனிதருமாகக் கூடியிருந்து விழிப்பாகப் பேணி வருகின்றனர். அவனுடைய கை மெய்ப்பாட்டை உணர்ந்து கவனித்து, கவலையுடன் அவனைச் சூழ்ந்திருந்து அவனுக்குத் தொண்டு செய்கின்றனர். இரவின் யாமத்தே, வரிசைக் காவல் செய்வோரும் காவலரும், அவன் வீட்டருகே வந்ததும், சில நற்சொற்களைச் சொல்லியவராகச் செல்கின்றனர்.

நெய் விளக்கு அணையாமல் எரிந்து கொண்டிருக்கின்றது. அவன் மனைவி ஆம்பலின் பஞ்சுத்திரியை இட்டும், நெய்யினை வார்த்தும் நிலையாகப் பேணி வருகின்றாள். இங்ஙனம், திருந்திய வேலினை உடையவனான அவன், சிறிய தழையினையுடைய நொச்சியைச் சூடிப் போர்மேற் சென்றவனான அவன், வீட்டினின் காவலுக்குள் அமைந்து புண்ணுற்றுக் கிடக்கின்றான்.

அவனைக் காணும் தமிழ்ச்சான்றோரின் நினைவோட்டம் எங்கெங்கோ செல்லுகின்றது. சான்றோர் பலரையும் விளித்து, அந்த நிலைமைக் குறித்து வருத்தமுற்றுப் பேசவும் தொடங்குகின்றது. அங்ஙனம் ஒருவர் பாடிய செய்யுள் இதுவாகும்.

பல்சான் றீரே பல்சான் றீரே
விழுந்த புரிசைச் சேர்ந்த ஞாயிற்
கணையிற் றூர்ந்த கன்றுபெய் கிடங்கின்
பல்லன் றூறப் பல்சான் றீரே
பகைவர் வருந்தி விளைவதும் முதிர்வதும்
கன்றுநல் கவிழ மின்னுங்கல் நிலைய
யாமத் கொள்வதும் பொறிநுதல் வேழம்
கொல்படை பொருத்த நுன்றுகள் விழுப்புண்
வெள்ளிடைப் பழுக வேர்த்திய வைவேல்
கருங்குரல் கோர்க்கி விளைந்த
திருந்துவேல் விடலை காப்பமைத் தனனே!

(புறத். 1342)

எயில்காத்தற் போரிடையே, விழுப்புண் பட்டான் ஒருவனைக் குறித்துச் சான்றோர் செய்த செய்யுள் இது வெனவும் கூறலாம். போர்நிலை எழும்போது, இக் களம் புண்பட்டுக் கிடக்கும் வீரமறவனின் சிலையும் எழு வானால், அந்தப் போரின் நினைவே எழுமாற்போலும் அல்லவா!

## 28. அவன் யார்?

தகடூரை வளைத்துக் கொண்டிருந்த சேரர் படைகள் தாம் எண்ணியபடியே கோட்டையை எளிதாகக் கைப் பற்ற இயலாது போயின. எதிர்பாராதபடி மிகுந்த, தம்மைத் தாக்கும் தோள்வலி மறவர்களின் கடுமையான போரினை, அவை அடிக்கடி சந்திக்கவேண்டியும் இருந்தன.

ஒரு நாள், சேரரின் களிற்றுப்படை மறவர், தகடூர்க் கோட்டையைத் தாக்குதற்கான ஏற்பாடுகளிலே ஈடுபட் டிருந்தனர். தகடூர்க் கோட்டையின் கதவுகளை உடைத்து உட்புகுவதற்கான முயற்சிகளைச் செய்துகொண்டிருந் தனர். பெரிய மரங்களைக் கொண்டுவந்தும், யானை கள் கோட்டைக் கதவுகளை மோதிக்கொண்டிருந்தன.

அந்த நேரத்திலே, இருமுனைக் கோட்டையின் மறை கதவு ஒன்று திறந்துகொண்டது. அதனின்றும் சில குதிரை வீரர்கள் கொடிய வேகத்துடன் பாய்ந்து வந்தனர். அந்தக் களிற்றுப் படையினரைத் தாக்கினர். சிறிது நேரத்தில், பல களிறுகள் அங்கே வீழ்ந்தன. களிறுகளில் வெளிநாட்டு மறவர்களும் பலரும் சாய்ந்தனர்.

தகடூர் மறவரின் தலைவனாக வெளிப்போந்தவன் அங்கிட்டிலே பேராண்மையுடன் போரிட்டான். அவனுடைய வாளின் சுழற்சிக்கு எதிர்நிற்க மாட்டாத சேரர்கள் திகைத்துப் போயினர். தம் தலைவனின் ஆண்மையைக் கண்ட தகடூர் மறவர்களின் மறவெறி மிகுதியாயிற்று. அவர்களும், தாமும் வாளைச் சுழற்றிய வண்ணம் சேரர்களைச் சிதைத்துக் களித்தனர்.

சேரர்களின் படையணி தளர்ந்தது. அவ்வறையத் தாக்குதலை நிறுத்திவைக்கவும் வந்தது. சேரர் படைத் தலைவன் தன் முயற்சியில் வெற்றியைக் காணாது குமுறினான். அவன் சினம் பெருகிற்று. தானே முற்பட்டு வந்து, தகடூர்ப் படைத்தலைவனுடன் மோதினான். இருவரும் சற்று நேரம் கடும்போர் நிகழ்த்தினர்.

முடிவில் இரு படையணித் தலைவர்களும் களத்தில் வீழ்ந்தனர். தலைவர்களை இழந்த படைகளும் அன்றையப் போரினை அத்துடன் கைவிட்டவாய்த் தத்தம் பாடி நோக்கிச் சென்றன.

பிற்றை நாளில், மீண்டும் சேரரின் படைமறவர் கோட்டைக் கதவினை நெருங்க முயலுகின்றனர். அப்பொழுது, தகடூர் மறவர் சிலர் அவர்களைத் தடுப்பது கருதி முன்வந்து நிற்கின்றனர். அவர்களுள் ஒருவன் குதிரைமீது அமர்ந்தவனாகச் செம்மாந்து வீற்றிருக்கின்றான். அவனுடைய தோற்றமே சேரர்களிடையே அச்சத்தை விளைவிக்கின்றது. சேரர் படைத்தலைவன்

தன்னருகே நின்ற ஒற்றனை நோக்கி, 'அதோ வந்து நிற்கும் அவன் யார்?' என்கின்றான். அப்போது வந்து நிற்கும் அவனைப்பற்றி உரைப்பதாக அமைந்த செய்யுள் இது.

"இவன் யாவன்? என வினவுகின்றனை.

"புள்ளிகளையும் கோடுகளையும் உடைய புலியைப் போன்ற அசைகின்ற தலை மாட்டத்தையுடைய, வலிய குதிரைமேல் வீற்றிருக்கும் அவனை, யாரென வினவினாய்; சொல்வேன் கேட்பாயாக.

"தன் நோக்கம் பற்றியே நினையாத திண்மை கொண்ட உள்ளத்தினன். பகைவர் அஞ்சி நடுங்கும் சுரையமைந்த நெடுவேலினைக் கைக்கொண்டிருப்பவன். ஒளி சிதறுகின்ற பொற்பூண்களைப் பூண்டுள்ளவன்.

"அவனே எம்முடைய நாட்டுத் தலைவன்! அவன் வீற்றிருப்பது அவனுடைய போர்க் குதிரையே! வஞ்சம் கொண்ட நெஞ்சமானது தன்னைச் செலுத்துதலினாலே, அவன் இத்தானையை போர்முனைக்கு வந்துள்ளவன்.

"யானையிலும், அவனை நெருக்குதலைக் கைவிடு வீரர்; என்றால் குறைவுற்றுப் போய்விட்ட குதிரைகளோ! யாம் கூறுவதனைக் கேட்பீராக! தேர்ந்தப் பகையே, நலைத்தல் வருத்தமுடைய கடுமையான ஆற்றல் கொண்ட பெரிய தமது மதயானைகளைப் பகைப்புலத்தே வெட்டிக் கொன்று, அவ்விடத்தில் தானும் வீழ்ந்து பட்டானே ஒரு மாவீரன்! அவனை இதற்குள் மறந்திருக்க மாட்டீர்கள். அவனுடைய தம்பிதான் இவன்!

"தொடுத்த வீரக் கழல்களையும், கட்டிய தொங்கி மாலையினையும் உடையவனான தலைவனைக் கண்டாய்! அச்சம் என்பதனையே அறியாதவன்! எதிர்த்தாருக்குப் பெரிதும் அச்சத்தை விளைவிக்கும் போர்த்திறமையும் கொண்டவன்!

"இதற்குள் இப்படிக் கூறுகின்றாள். அவள் உள்ளமும் அந்த வீரப் பெருந்தகையைக் கண்டதும், 'எம்மிறை' என்று வாய் குளிர எடுத்துச்சொல்லத் தூண்டுகின்ற சிறப்பைக் காண்கிறோம்.

இவனே,
போரெதிர் மன்னர் பொலங்குழை மைந்தன்
சேம்பரன், மலிநெல் விளையில், தோலா
உரறுடை புன்னைத் தொங்கல் சூட்டுஞ்
கனைபகை செறிந்தொழ் கடற்பூ மேனவே!
அவனே எம்மிறை! வீழ்பவன் யாவோ!
கருமுதோள் செருக்கம் மதுவைக் தனனே
யாவரும்
குருகல் ஓம்புமின் குறைநான் பழனிச்
செருவில் எவ்வி கணைவரு கடுந்திறல்
பெருந்த யானை பகைப்ப நூறி
அடுகளத் தொழிலெந்தோன் தம்பி! தொடுதோள்
பொரச்சித் தெரியல் நெடுந்தகை
அஞ்சல் அறியான் ஆரணங் கினனே!

(புறம். 1342)

செய்யுள், எதிர் வந்து நிற்கும் படைத்தலைவனை அறிமுகப்படுத்துகின்ற வெண்ணிலைப் பண்புடைய சிறந்தது மனத்தை தொனிவைபானால், அந்த மாவீரனின் வீரப் பெருமிதத்தை நன்றாக உணரலாம். இத்தகைய மறவர்கள் பலரை உடைத்தாயிருந்த தமிழின் சிறப்பும் நம்மால் நினைவுபெறும்.

அதிகன்மொழி என்பவர் தமிழ் பாத்திரங்களைக் கொண்டு செய்துகொள்ளை என்று நாம் அறிவோம். அவருடையதாக விளங்கும் புறநானூற்று 100-ஆவது செய்யுளும் இதே சம்பவத்தைக் குறிப்பிடுவதாக அமைந்திருக்கிறது.

தோல்தா தோல்தா என்றி தோலொடு
துறுகல் மறையினும் உய்குவை போலாய்!
நெருநல் எல்லை எறிந்தோன் தம்பி
அகல்பெய் குன்றியிற் சுழலும் கண்ணன்
பேரூ ரட்ட கள்ளிற்
கோரிற் கோயிற் றேருமா லின்னே.

(புறம்: 300)

இதன்படி அறிக்கப்பட்டான் தகடூர்த் தலைவனே என்பதும், அவனைவழித்த சேரர்படைத் தலைவனை அறிக்கச் சென்றிலையாயிற் அவன் தம்பி எழுந்தனன் என்ப தும் விளங்கும். ஆகவே, நாம் கூறியதுபோல இருபடைத் தலைவரும் கலந்துப்படாது, பட்டவன் தகடூர்த் தலை வனே எனவும் கருதலாம்.

## 29. நோக்கி நகும்!

தகடூர்ப் பெரும்போர் நிகழ்ந்த காலத்தில் சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை கட்டளையும் கள்ளகவர் தோற்றமும் உடையவனாக விளங்கினான். கார்மேகத்தை போன்ற கருமை வண்ணத்துடன் அவனுடைய புல்லிய தாடி விளங்கிற்று. பகைவர்தம் நோக்கிற்கு அஞ்சாது வெகுண்டு போரிடும் காளையைப் போன்று கூற்றும் இன்றும் கொண்டவனாக அவன் விளங்கினான்.

தன்னுடைய படைகளைத் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் அவனுடைய தோற்றத்தைக் கண்டு பொன் முடியார் வியந்து பாராட்டுகின்றார். நுழைப்படைக்கண் நின்றும் அவனை நோக்கித் தம்முடைய வியப்பினைக் கூறவும் செய்கின்றார்.

"சேரமானின் கழுத்திலே வெற்றிமாலை விளங்கு கின்றது. அது உழிஞைப்பூவால் தொடுக்கப் பெற்றது. தகடூரை முற்றுப்போதும் அடையாள மாலை அது.

அதனை ஒரு கையால் பற்றியவனாக, அழகுமிகுந்த தன் தோள்களை நோக்கியவாறே அவன் பூரிக்கின்றான்.

"முன்னணிப் படையினை இருபுறமும் திரும்ப நோக்கிப் பூரித்தவன், அதனைப் பற்றிப் பொருட் காத்துக்கொள்ளத் திரண்டு வந்திருக்கும் தன்னுடைய யானைத் திரளையும் நோக்குகின்றான்.

"யானைத் திரளுக்குப் பின்னாகத் தேர்வீரர்கள் பலரும் திரண்டிருக்கின்றனர். அவர்களைக் கண்ணோட்ட மிட்டும் இறும்பூது எய்துகின்றான். அவர்களுக்குப் பின்னால், குதிரைப்படை வீரர்கள் விளங்குகின்றனர். அவர்கட்குப் பின்னால் வில்வீரர்கள் விளங்குகின்றனர். அவர்கட்குப் பின்னால் வேல்வீரர்கள் நிலவுகின்றார்கள்.

"ஒவ்வொரு பகுதியினரையும் பார்த்துத், தன்னுள் ளத்தே வெற்றி தனக்கேயென்று உறுதிகொண்ட பின், தன்னுடைய பறை கொட்டுவோனை நோக்கிச் சிரிக்கின் றான் அவன்.

"அதன் குறிப்பு, 'படைகள் மேற்செல்லுமாறு நின் வெற்றிப்பறையை முழக்கத் தொடங்குக' எனத் தனக்கு இட்ட ஆணையாகும் என்பதனை உணர்ந்த இளையவனும், வெற்றிப் பறையைக் கொட்டத் தொடங்குகின்றான். படைகள் செல்லத் தொடங்குகின்றன. படை செல்லும் ஆரவார மும் எழுகின்றது."

கார்த்தருப் புல்லணருங் கண்ணறுசாக் கணைநுள்
தாரப்பற்றி வேற்றுசு நோனாக்கிற்—தார்ப்பின்னை
காட்டிறுல் யானைக் கவைநோக்கி மாவினப்பின்
தேர்க்குழாம் நோக்கித்தன் மாநோக்கிக்—கூர்த்த
கணையமைவு நோக்கித்தன் வேனோக்கிப் பின்னைக்
கிணைவனை நோக்கி நகும்.

(புறத். 1369)

சேரப் படையின் பெருக்கமும், அது அணியணியாக வருகின்ற முறைமையும், இச் செய்யுளால் நன்கு அறியப்படும்.

'கார்த்த கணைவரவு நோக்கி' என்பதற்குத், 'தகடூர்க் கோட்டையினின்றும் வருகின்ற அம்புகளை நோக்கி' எனவும், 'நன் வேல் நோக்கி' என்பதற்கு, 'அது கண்டு நினைத்து நல் வெற்றிவேலை நோக்கி' எனவும் பொருள் கொள்ளலாம்.

## 30. ஏந்துவன் போலான்

படை மறவர்கள் தத்தம் படையணிகளுள் வருகின்ற முறையாண்மையின் ஆற்றல்களைக் குறிப்பிட்டு, எதிர்ப் படையினருக்கு முன்னால் நின்று முழக்கமிட்டு ஆரவாரிப் பதும் இயல்பாகும். இதனால், பகைப் படையினர்பால் அச்சம் எழுதலும், தம் படை மறவர்பால் ஊக்கம் மிகுதலும் நிகழ்வனவாம். இவ்வாறு வீரமுழக்கத்துடனே வருகின்றான் ஒரு தலைவன்! தகடூர் நாட்டுப் படையணி யைச் சேர்ந்தவன் அவன்!

"பன்முறையும் அமைந்த போர்க் குதிரையினை உடை யவன் அவன்! அந்தக் குதிரையும் போர்க்களப் பயிற்சியிற் சிறந்ததும் கவிந்துக்கதும் ஆகும்! கண்களை இமைக் கின்ற கால அளவினை 'நொடிப்பொழுது' என்பார்கள். வில்லினின்றும் வெளிப்படும் கணையானது அந்த நொடிப் பொழுதிற்குள் கடுவிசையுடனும் செல்லும் இயல்பினதாகும். அவ் இமைப்பின் அனைத்த கடுவேக மான விசையோடு சென்று தைக்கும் கணையினைப் போலக், குறித்த இலக்கினை நோக்கி வேகமாகச் செல்லக் கூடியது அந்தக் குதிரை!

"ஒருநாட் பகற்பொழுதில் அவன் படையணியின் முன்பாக வந்து போரிட நிற்கின்றான். அவனைக்

கண்ட நகரி மறவர் ஆரவாரிக்கின்றனர்; தம்பால் வந்துள்ள தலைவனின் புகழைப் பேசி முழக்குகின் றனர்.

'சேரர் படையணிக்குக் கேட்கின்றது அந்த முழக்கம். அவர்கள் அந்த வீரமுழக்கினை இகழ்ச்சியுடன் ஒதுக்கி மேல் வருகின்றனர். அப்பொழுது, நகரி மறவன் ஒருவன் செருக்குடன் கூறுவதாக அமைந்த செய்யுள் இது.

இருந்தும் ஒப்புமின் புகழ்சால் மறவீர்
கண்ணிமைப் பளவிற் கணைபோல் கடுவிசைப்
பண்ணமைப் புரவிப் பண்புபா ராட்டி
எல்லிடைப் படர்தந் தோனே, கல்லென
வேந்தூர் யானைக் கல்லது
ஏந்துவன் போலான்றன் இலங்கிலை வேலே!

(புறத்: 1370)

"புகழ் மிகுந்த மறவர்களே! இதுதனைக் கைவிடு வீராக! கண் இமைப்பதன் அளவிற்குள் கணைபோலச் செல்லுகின்ற கடிய விரைவினைக் கொண்ட, பண்ணுதல் அமைந்த தன் குதிரையினது போர்மறத்தைப் பாராட்டி யவனாகப் பகற்போதில் போர்முனைக்கு வந்துள்ளான் இவன்! ஆரவாரத்துடன் உங்கள் வேந்தன் ஊர்ந்து வந்து நின்ற யானையினை வீழ்த்தற்குமாகவும், விருப்புற்றுக் கொள்ளுகின்றான். இவன், விளங்கும் இலைவடிவமுடைய தன் வேலினை ஏந்துபவன் அன்னைப்போல விளங்கு கின்றான்!" என்பது செய்யுளின் பொருள்.

## 31. யானை நகரில் குரல்!

கோட்டை மதில்களின் மேலாக, அங்கங்கே உயர முடன் அமைந்த சிறுசிறு அமைப்புகள் விளங்கும். அவை, கோட்டை மதிலின் காவல் வீரர்கள் தங்கியிருந்து

பகைவரது மருங்கையினைநோக்கி விருத்தந்திருந்தன. அவற்றுள் ஒன்று சேரப்படையினின் தாக்குதலுக்கு ஆற்றாது வெடிப்புக் கண்டது.

அந்த வெளியின் வழியாகக் கதிரவனின் தனிக்கதிர்கள் கோட்டைக்குள் நுழைந்து விழுந்தன. ஒளிவிடும் அந்தக் கதிர்த்தோற்றத்தைப் போல விளங்கும் வெள்ளிய தன் வேலினை ஏந்தியவனாக, மறமாண்பினைக் கொண்ட இளையோன் ஒருவன், தன் குதிரைமீதமர்ந்தவனாக வந்து அவ்விடத்தே நின்றான்.

இடைவிடாது எதிர்ப்போரை விட்டிருந்த அந்த கோக்கு ஞாயிறுள்ளிருந்து வந்து நின்ற அவனைக் கண்டதும், படைமறவர் ஆரவாரித்தனர்.

“அவன் கைவிடத்தகாத ஒள்ளிய வேற்படையினை இந்நாளைச் செய்யாதீர்கள். மிகுதியான சீரையுடையனைக் கொண்ட, யானைத்திரளைப் பொருதும் செருப்ப கொற்றத்தையுடையனான நம் வேந்தன் அவன். இவன் கைவிடத்தகாத நிலைமையதும் கூர்மையுமான வேற்படை இருந்தால் புண்பட்ட மத்தகத்தையுடைய தன் யானைகளை யானது கதறுகின்ற ஒலியைக் கேட்டு, கண்ணுறங்கச் செல்லாமற் காத்திருந்தவன் எம் பகை நாடு மறமாகும்.

“அதனை நினைவிற் கொள்க!” அருகே நிற்கின்றனர்.”

அதிராது அற்ற கோக்கு ஞாயிறுள்
கதிர்விடு உடரின் விளங்கும் வெள்வேல்
கதிர்வ திருவின் இளையோன் இன்றுத்தன்
குதிரை தெளிற வந்துநின் றனனே
அவன்கை கொளப்படா விற்றுள் ஒய்புலின்
விழுச்சீர் விளைவெறு கெடுவுடை வேந்தன்
கள்படை பொறாதன் கையினன் இயல்கைத்

திணைகட் எய்க் கிறந்த
புன்கூர் யானை ஒவ்விற்றாக் கேட்டே

(புறம்: 137)

'பகற் போதிற் புண்பட்ட யானை இரவெல்லாம் கதறிக் கொண்டிருக்க, அதனால் வேந்தரும் கண்துயிற் காமல் இருந்தனர்' எனக் கூறினார், 'முன்னர் அவ்வாறு வேந்தர் யானையைப் புண்படுத்திய அவன், இன்றும் தோன்றினன் எனில், நும் அரசையே கொள்ளாமல் விடான்' என மறமாண்பு கூறினாராம். இவ்வாறு கூறத்தகும் தமிழ் மறவர்கள் பலர் இருந்தும் படையணி களிலும் தலைமை தாங்கி நடத்தினர் என்பதும் இதனால் விளங்கும்.

## 32. யானை காமின்!

அந்த நாளிலே படையணிகளுள் யானைப்படைக்குத் தனியான ஒரு மதிப்பு இருந்தது. அதனை மிகுதியாகப் பெறுவதில் ஒவ்வொருவருமே ஆர்வம் காட்டினர். எதிர்ப் படும் எதனையும் அழித்து மேற்செல்லும் இயல்பினை யானைப்படை அதிகாரிகள் பெற்றிருந்தது.

சேரமானிடம் யானைப்படை மிகுதியாகவே இருந்தது. படையணிகளுக்கு முற்பட்டுக் கம்பீரமாகச் செல்லும் அந்தக் களிற்றுப் படையினைப் பெரிதும் வலிமை யாகப் பேரரசர்கள் போற்றியும் வந்தனர்.

களிறுகள் பிளிறிக்கொண்டு கோட்டை மதிலைச் சென்று மோதித்தகர்க்கின்றன. அப்போது ஒரு பெண் கட்டுப்போன்ற கருப்புக்குடிசை வேகமாக ஒருவன் வந்து அந்தக் களிறுகளைத் தாக்கி அழிக்க முயல் கின்றான். அதைக் கண்ட மறவன் அந்த வீரச்செயலைக் கண்டு இருக்கிறான் பேரரசப் படைத் தலைவன், தன் படைக்குக் குறிப்பிக்கின்ற ஆணை இச்செய்யுள் ஆகும்.

"கட்டிப் போன்ற கரிக் குதிரையின் மேன்மையை வழுவின்றனன். அவன் காலிற் செறிந்துள்ளது பல போர்களை வென்றதன் அடையாளமாகிய வீரக்கழலே யாகும். அவன் கைவிட்டுத் விளங்குவதோ வேற்படை. அவன் கட்டிச் சென்று அளிக்க நினைப்பதும் களிறு களையே ஆகும். அதனால் நம் படை முழுவதையும் செலுத்தினாலும் நம் யானைகளைக் காப்பீர்களாக. அவன் யானைகளையன்றிப் பிறவற்றை வீழ்த்தக் கருதுபவன் அல்லன்!" என்கிறான்.

கட்டி யன்ன கரி மேலோன்
தொட்டது கழலே கையது வேலே
கட்டி யதுவும் களிறே பொட்டிய
தானை முழுதுடன் விடுத்துவம்
யானை காமினவன் பிறநெதி யலனே.

(புதுக: 1371)

'கட்டியன்ன கரி' என்றது, குதிரையின் கருமை நிறத்தை. 'கட்டி'—பனை வெல்லம். 'யானை காமின் அவன் பிறிது எறிவான்' எனக் கூறும் சொற்கள், தமிழ் மறவரது தறுகண்மையின் மேம்பாட்டை நன்கு விளக்குவனவாகும்.

வேற் படைத் தலைவருள் ஒருவனைக் கூற்றாகக் கொள்வது போன்றே, சேரர்க்கு ஒத்துணர்ப்பார் கத்து கூறிய எச்சரிக்கையாகவும் இதனைக் கொள்ளலாம்.

## 33. அஞ்சுதுக்களை!

நகுலர் மறவருள் ஒருவன் காட்டிய போர்வினை மிகவும் சிறப்புடைத்தாக இருந்தது. அவனுடைய அந்தச் செயலினை வியந்து பாராட்டுதலை நினைவிற்று எண்ணுதார். அவனை அவ்வறு தானையும் வியந்து போற்றுகின்றனர்.

“அருஞ்சமத்து உரியவன் இந்த ஈன்றோட்டிப்! அவனுடைக் களத்துக் காளத்திருவிலார் இட்டிருக்கின்ற அரிதானின் பத்தலைப் போன்று விளக்கும், வன்மையைப் பகைபுத்த கருத்தனையுடைய நாட்டுக்காள இவன், அந்தக் காதுக்குவன்?

“வெம்மை மிகுந்த போர் வருங்காலத்து என் வெட்டுவேம் என்று வருத்தியிருக்கும் வேந்தருக்கு 'அஞ்சேல்' என அமரர்த்து, அத்தப் போரினை மேற்கொள்ளும் களிறு போன்ற மகனை இவள் பெற்றுத் தந்திருக்கின்றனள். ஆதலால், இவளும் அஞ்சத் தகுந்தவள்!”

**அஞ்சுதல் காணே மருகுதல் காணே**
**பருவர வளர் பந்து வென்ன**
**வறுந்தலை முதியாள் அஞ்சுதல் காணே**
**வெஞ்சமத்து,**
**என்செய் வென்னும் வேந்தர்க்கு**
**அஞ்சல் என்பதோர் களிற்றின் நனவே!**

(புறம்: 1373)

'பகைவர்க்கு வீரத்திருவினவான இவன் மகன் மட்டு மல்லாது, இவளும் அஞ்சத்தக்க உரியவள்' என்று கூறி, வீரனைப் பயந்த அவள் சிறப்புப் போற்றப்பெறுகின்றது.

## 34. ஆற்றலோன் நிலை!

தகுதிப் படைமறவர்களுள் ஒருவன் மிகுந்த ஆற்றலுடையவனாகத் திகழ்ந்தான். அவன் படைமுகத்து வரவும், அவனது வாளினாலே செருக்குற்றுத் திகழ்ந்த தகுதி மறவர்கள், எதிரணியில் நின்றிருக்கும் போர்ப் படையினை நோக்கி, அவனுடைய பேராண்மையை உணர்த்துக் கனிக்கின்றனர்.

“வேல் வடித்தனிலே வல்லான் ஒருவன் செய்த வனைவுகள் அமைந்த அழகினையுடைய நல் வேலினைக்

கொல்லச் செல்லும் தொழில் முடியும்படி கருதிக் கூரிய இலையுடைய அவ் வெற்றிவேலினைக் கைவிடுத்தே மலையாகச் சுற்றி ஏந்திக்கொள்க' என்று சொல்லின், அவ்வினையினை முடித்துக் கொன்றுங்காலம் வரைக்கும், தன்னுடைய குதிரையையும் விரும்பாதவனாக, அந்த வேலினை வழங்கும் அதனிடத்தேயே கருத்தாயிருப்பவன் இவன்!

போர்த்தொழில் மேம்பாடு உடைய இவன், போர்ப் பயிற்சியோடு அறிவோடும் சேர்ந்து விளங்கும் செல்விய குதிரை யேறுவோனாகவும், காலிடத்தே விளங்கும் கழலினை உடையோனாகவும், இளையோனாகவும் விளங்குகின்றான்.

"புகழ்மிகுந்த மன்னர்களே! அழலினைப்போல எழுந்து விளங்கும் இவனுடைய வெகுளியினை இகழ்ந்து பேசிவருதலைக் கைவிடுவீராக!

"முன் ஒருகாலத்து நிகழ்ந்த போரினும், இவன் கைவிடுத்து வேலினாற் பட்டு வீழ்ந்தோரின் தொகை அளவிடற்கரிது! வீழ்ந்தவரின் மனைவியர்கள் கைம்மை பூண்டது குறித்து அறுக்க கூந்தல் கலைகளை ஏந்திய மலைகளும், அச்சமயம் நாங்காது புரிந்துபோயினவே பலவாகும் என்பதனை நீவிர் அறிவீர்களாக!

"ஆதலால், 'வலியுடையார்' என்றிட்டு திரிவீராக. வீழ்ந்து நமக்கேல் நிலைபெறுவீராக என, வெம்மையான போரினை நிகழ்த்த விரும்பினன் ஆர்வத்துடன் இவன் எதிர்த்துள்ளான்.

"ஆற்றல் உடையவனாகிய இவன் நிற்கும் நிலைதான் அதிர்ச்சியை ஒரு தன்மையைத் தரவல்லதாகும்!"

மல்லேசுவர் செய்த மலைகளை வளப்பித்து
கொல்வினை முடியக் கருதிக் கூரிலை
வெல்வேல் கையவன் ஏந்திக் கொள்ளெனிற்

கொன்றுங் காலும் மாவேண் டாமோ
மேலோன்
அறிவொடு புணர்ந்த நெறியிற் புரவி
கறந்தவன் இளையோன் அறுத்தியுஞ் செழுமி
இழந்துள் ஓம்புமின் புகழ்நாம் பண்ணிச்
தொல்லை ஞான்றைச் செருவிலும் இவ்வகை
வேல்வாய் வீழ்ந்தோர் பெண்டிர் கைம்மையின்
அறுத்த கூந்தற் பிறக்கடு கடவ
பொறுத்தல் செல்லா பல்லூர்த் தலையே!
அதனால்
வல்லோர் புகழு மின்மின் கல்லென
வெஞ்சமங் குழைப்பக் கூர்தரின்
அஞ்சுதக உடைத்தில் வாழ்நரோ சிலவே.

(புறம். 1374)

மலையமானின் தலைசிறந்தாரான மாண்புடைய மறவர்கள் பலர் இவ்வாறு இருதிறப் படைகளிலும் மிகுந்த காரணத்தால், தகடூர்ப் போரும் வேறும் வரலாற்றுச் சிறப்புடையதொன்றாக விளங்கிற்று என்று நாம் அறிதல் வேண்டும்.

'தொல்லை ஞான்றைச் செருவிலும், இவ்வகை வேல்வாய் வீழ்ந்தோர் பெண்டிர், கைம்மையின் அறுத்த கூந்தற் பிறக்கடு கடவம் பொறுத்தல் செல்லா, பல ஊர்த்தலையே' என உரைக்கின்ற ஆண்மையின் விறுவிறுப்பாட்டை அறிந்து இன்புறுக.

## 35. எறிந்தது களிறு!

தகடூர்க் கோட்டை மதிலைச் சோராது வலிய களிறுகள் பலவும் தாக்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றுள் மிகவும் வலிப்புடைய களிறு ஒன்று மிக வன்மையாகத் தன் நுனிட்ட கொம்புகளால் குத்திக்

கொண்டிருக்கின்றது. கைகள் நடுங்குகின்றன. விரைவில் உடைபடும் என்ற அச்சம் எப்புறமும் பரவுகின்றது.

தகடூர் மறவர்கள் சோராது அந்த முயற்சியை எப்படியும் தடுத்தாக வேண்டும் என்று நினைக்கின்றனர். அவர்களது அந்த நினைப்பிற்கு ஊன்றுகோலாக விளங்கினான் ஒருவன்! மாவீரனாகிய அவன், தன் குதிரை மேல் ஏறியவனாகப் பாய்ந்து சென்றான். தன் கைவேலினை எறிந்து அந்த வலிய களிற்றைக் கொன்று ஆரவாரித்தான். பயங்கரமான குரலிட்டபடியே அந்தக் களிறு வீழ்ந்து துடித்துச் செத்ததைக் கண்ட பிறகளிறுகள் நிலை கெட்டு ஓடின. தம் படையுடையே மிதித்தும் தாக்கி யடித்தும் நாசப்படுத்தியவாறு சென்றன.

செயற்கரிய செய்த அந்த மாவீரனின் செயலினைத் தகடூர் மறவர் மட்டும் புகழ்ந்தனர் என்பதில்லை. சேரரும் தமிழ்ச் சான்றோரும் புகழ்ந்தனர். தமிழ்ச் சான்றோர் வியப்புடன் பாராட்டுகின்ற செய்யுள் இது.

''களிவெறி கொண்டவனைப் போல அவன் வந்தான். ஆனால், கள்ளுண்டு களித்தவனோ அல்லன். அதுவும் அன்று. தனக்கும் போர் வாய்த்தது என்ற களிப்பினாலேதான் அவனுக்குக் களிவெறி பிறந்திருக்கின்றது.

''அவன் ஏறிவருவது குதிரைதான். பறவை எதுவும் அன்று. ஆயினும், அது வந்த வேகமோ பறவை ஒன்று பறந்து வந்தது போலத்தான் இருந்தது.

''இடியேன வந்து தோன்றிய அவன், மேலுலகத்து வாழும் ஒரு தெய்வமோ எனில், தெய்வமும் அல்லன்; இவ்வுலகத்து மகனே அவன்!

''எளிமை தோன்றக், கொத்தெடுத்த பூக்களுடன் பசிய தழைகளையும் விரவிக்கட்டிய தொங்கல் மாலையை அவன் சூடியுள்ளான்!

“எதிர்த்தார் கன்று வெருவி ஓடித்திரும் தக்க வேலாற்றலை உடையவன் அவன்! அவன், வேலினை எறிந்தான். அது பகுத்து தன் இனத்தை நோக்கிப் பாய்ந்து வருவது போல விரைந்து வரும். அடைய திரிந்து அங்கேயும் அவன் கையினின்றும் புறப்பட்டுவிட்டது. அதனை அம்பனை சூழ்ந்து எதிர்த்தவராக அவன் ஆர்ப்பரிக்கின்றான். அப்போது அவன் வீரக்குறிக்கள் ஆர்ப்போலி செய்கின்றன.

“தம் காக்களின் வீரக் கழல்களை அணிந்தவராக, உயரிய மனைவிடத்து உறையும் புலியைப் போரச் சிறையுடன் வேந்தர்கள் வளர்த்து வருகின்றனும். வெள்ளையான சிறையுடையவுமான களிறுகள்தாம் அவ்விரவில் வெறுங்கு நிறுக்கப்பட்டன.

“இதனை அறிந்தார்களும் நீவிர் அங்கு போவீராக!” என்பது குறிப்பு.

உண்டது
கன்றும் அன்று கனிப்பட் டனவே
ஊர்ந்தது
புன்றும் அன்று பதத்திலன் குப்பே
மேலோர்
தெய்வம் அல்லன் பகலே சொல்தாங்குத்
தெரியவர் எறிந்த பாசிலைக் கண்ணி
வெருவத் தக்க வேலி வேள்கீழல்
வைய யிமிர்ந்து பருத்தின் ஓடிக்
கழிந்தார்த் தன்றவன் எறிந்தது கழுதொட்
டெக்குவை விழுவும் புலிபோல்
வேந்தன் தரும் பெருஞ்சிறைக் களிறே.

(புறம் : 1575)

கறிந்த போரின்கண் அவன் ஆற்றிய மறச்செயலினது மாண்பினை எடுத்துப் போற்றிச், [illegible] மறவர்கள், போர் அத்தகைய அம்பனம் முழக்கினர் என்று கருத.

## 36. யானைக் கூறு அளக்கும்!

தகடூர் மறவர்கள் இம்முறையும் அஞ்சாமையினராகக் கனன்றெழுந்து வந்து போரிட்டுச் சேரர்க்குப் பெரும் அழி பாட்டை விளைவிக்கின்றனர். எனினும், சேரரது படை மறவரும் தத்தம் ஆண்மையுடையவராதலாலும் பொறுக்கத் தளராதவராதலும் தம்முடைய குறிக்கோளை நிறைவேற்றும் உறுதியுடன் விளங்குகின்றனர்.

ஒரு சமயம், இளமையும் செருக்கும் கொண்டவனான மறவன் ஒருவன், தகடூர்ப் படையணிகளின் முன்னணி யில் வந்து தோன்றுகின்றான். அவனுடைய தோற்றத் தைக் கண்டதும், சேரர் படையணி கலகலக்கிறது. தகடூர் மறவர்கள் களிகொண்டு ஆரவாரிக்கின்றனர்.

சேரத் தலைவருள் ஒருவன், அந்தக் காட்சியைக் கண்டு மலைக்கின்றான். "அவன் யார்?" எனத் தன் அருகிருந்தானை வினவுகின்றான். அவர்களுள் ஒருவன், அவனை முன்னர் நன்கு அறிந்திருந்தவன், கூறுகின்றான்.

"தலைவனே!

"வாயிற்களின் அமைந்துள்ள தெருவு இல்லங்களின் மேலாக எழுந்து நின்று, மெல்லக்கள், நிலைவாயிலில் அழகுடன் புகழ்பூண் இடம்பெற்றுப் போர்க்குச் செல்லும் தம் கணவன்மாரோடு ஐயமுடையவராகச் சிந்திய கண்ணீர் வெள் ளத்தைப்போல, ஒன்றுடன் ஒன்று கலந்து நெருங்கிக் கிடக்கும் அழகிய புள்ளிகளையுடைய காரின் குன்றையின் மேல் வீற்றிருக்கும் அவன், மறமன்னனுடைய வீரன் ஆவான்!

"தெளிவாக அவனை மனத்திலே நினைத்தாலும் அந்த நினைவே நடுக்கத்தை விளைக்கும். அத்தகைய ஒப்பற்ற வேலினை ஏந்தியிருப்பவனும் அவன்!

"குழிபட்ட பள்ளத்திலே, நீர்க்கவின் விளக்கும் தென்னை மீனின் வருகையை எதிர்பார்த்திருக்கும் நீல

மணியின் திரத்தைக் கொண்ட சிறிய பிரம்பைப்போல, அவன் தம்முடைய நல்ல பாசறையணிகளின் ஒரு பகுதியைத் தன் நிலையாக அமைத்து போய்விடக்கூடியவன்!'

கிளையமை மெறிந்தினை வேழ் வல்லோரில்
கிளைபோல புதுப்பூன் களைவினோர் நீடி
சிந்தி பகன் செருபடி வளைபிதி
புள்ளிக் கானி மேலோன் தெளிந்தின்
உள்ளிலும் பனிக்கும் நுதலே சோர்வே
குன்றிரீக்க விடலைத் தென்னடை பாக்கும்
மணிமிடைப் பவளம் போலவும்
அணிமிகு பகைவர்க் கூறாக முதுசோல்!

(புறம் : 276)

இதனைக் கேட்ட சோர் மகளிர், அவனுடைய நாக்குதலை முறியடிக்குமாறுதான், தன் படையணிகளை மீளவும் முறைப்படுத்தினான் எனவும், அன்றைய போரும் சுற்றையைப் பிருந்தது எனவும் கருதலாம்.

## 37. என்னதாகிலும் ஆகுக!

சேரர்க்குப் படைத்துணையாக வந்த குறுநிலத் தலைவர்களுள் ஒருவன், மிகுதியான போராற்றல் உடையவனாகத் தகடூர்ப் படைகளைத் தாக்கி அழித்து வருகின்றான். அவனுடைய ஆற்றலுக்கு முன்னால் தகடூர்ப்படை சிதையத் தொடங்குகின்றது.

தம் படையணிகளின் அழிவைக் குறித்த செய்தி விரைந்து வந்து அறிவிக்கப்படத் தகடூர் நாட்டின் தலைவருள் ஒருவன், 'அவனை யானே அழித்து வருவேன்' எனக் கூறியவனாகத் தன்னுடைய போர்க் குதிரையின் மீதேறி விரைந்து களத்தை நோக்கி வருகின்றான்.

அவனுடைய கருணையால் [illegible] புதிய சக்தியும் பிறக்கின்றது— அவனும் அந்த முகத்தை நோக்கி, அவனைக் கண்டதும், சோர [illegible] தலைவன் தன் அருகிலிருந்தவருடன் இவ்வாறு கூறுகின்றாள்.

"அவன் வருக! வருக!

"இவனை எவரும் தடுக்க வேண்டாம்! எவரும் எதிர்த்தல் வேண்டாம்!

"அஞ்சத்தக்க குதிரை மீதமர்ந்து, ஒப்பற்ற வாளினைக் கொண்டிருக்கும் யாரோ, இருவரையன்றி மக்களைக் கண்டு அறிந்ததில்லை. தோன்றுகின்ற அவனுடைய விளக்குகளான [illegible] அவன் கையால் முடிவதாகவேயைப் பருகித் [illegible] பெற்றிருக்கவும் இல்லை.

"அவனும் வீரன்தான். அனைத்தாலும் ஒப்பற்றவன் [illegible] பூரணச்சந்திரனைப் போலவும், [illegible] என்னைக் குறித்தே வருகின்றான்.

"யாரும் பணிக்கவும் [illegible], எண்ணிக்கையுடையவராகத் தோன்றும் என் துயரத்து, அவனுடைய [illegible] விளங்கும் ஆடைகளைப் பரிசாகக் கொடுத்துள்ளேன்

"அதனால்,

"என்னைக் கொன்று மீண்டுபோதல் என்பது அவனுக்கும் இயலாத அரிதாகும். அவ்வாறே அவனைக் கொன்று மீள்தல் என்பது எனக்கும் அரிதாகும்!

"அதனால்,

"இன்றைப் போரது முடிவு எவ்வாறாயினும் ஆகுக!

"நீங்கள் கொண்டிருக்கும் பெருங்களத்தைக் கைவிடுமாறு, நாளைக் காலையில், தோளால் பொருதல்

பட்ட தன் நெஞ்சம் குளிரும்படியாக, அவன் தாய்தான் புல்லுவாளோ? அன்றேல், என் தாய்தான் தானைக் காணல் நல்குவாளோ?''

''அன்றி, என் தாயும் அவன் தாயும் சேர்ந்து முழுது தந்தால் தெருமோ? யாம்பெறும் ஆயிரும் அதுவே''

வருக வருக தாங்கன்மின் தாங்கன்மின்
உருவக் குதிரை ஒருவே லோனே
இருவகை மாக்களை யாவது சவலே
நாற்றசை மாக்களின் நட்பகத் தில்லை
அவரும்,
தடமொடு துயல்வரும் தயக்குமணிக் கொடும்பூண்
மாசுடைக் மகுந்தலை பெற்றுத் தனனே,
யானும்,
கடிமரத் துணைக் கலைவல் காட்சியென்
இடியமழ் கனைவரை மழுவை மிகுநனே,
அதனால்,
என்னொடிங்கு பெயர்தல் அவர்க்குமாங் கரிதே
அவனொடிங்கு பெயர்தல் எனக்குமாங் கரிதே;
அதனால்,
எனை தாசிலும் ஆக முக்கே
நீர்கொள் பெருங்குளம் தயங்க நாகை
நோய்பொதி நெஞ்சம் குளிரப் வண்டுமாய
முற்றுவள் ஒன்றோ? அன்றேல் என்னை
முற்றுவள் ஒன்றோ? அன்றியவள்
தாயும் யாயும் உடனொடும் ஒருவே!

(புறம்: 1877)

இவ்வாறு இரு தலைவர்கள் தம்முள் ஒருவரை ஒருவர் அறிந்திலைக் கருதினராய்ச் எதிர்பொருள் இடுதலும் அந்நாளைப் போர் மரபாக இருந்ததும் வேண்டும். இந்த தலைவர்களுடைய இருவர் இவ்வாறு மனதை கருதிப்போட்ட மதித்துப் போற்றும் பண்பாட்டினையும் கொண்டிருந்தனர்.

# 38. பாணியிற் கொட்டும்!

வீரன் ஒருவன் தன் குதிரைமேல் ஏறிப் பகைவரைச் செருக்குடன் வந்து கொண்டிருக்கின்றான். குதிரையின் காற்குளம்படியின் ஒலி தாளலயத்துடன் கேட்கின்றது. இதனைக் கண்டு வியந்த சான்றோர் ஒருவர், அதன் சிறப்பை இப்படிப் பாடுகின்றனர்.

“அரசனுக்குரிய அரண்மனையிலே காலை முரசம் முழங்கும். போர்ப் பாசறையிலே துடியனின் துடி முழக்கம் எழும். குற்றமின்றி தான் புரிந்ததன் மகிழ்ச்சியைத் தெரிவிக்க முழங்கும் துடியனின் துடிகொட்டும் முறைகளைப் போல, அந்தப் பாணியிலேயே ஒலித்துக் கொண்டிருந்தது, குதிரையின் குளம்படிகளின் ஒலியும்.

“அதன்மேல் அமர்ந்து வருகிற அவனும், கொன்றும் இறப்பாட்டிலே களிப்புடையோன் ஆவான். அவன் மிகவும் சினத்துடனே பகைவரை அழிப்பது கருதி வந்து கொண்டிருக்கின்றான். அவனால் வெட்டப்படும் தலைகளைப் பருந்தினம் கவ்விறா உண்டு களிக்கும். வடித்த இலைக் கொழுந்தொத்த சிறந்த வேலினை இருபாலும் வீசியவனாக, அவன் களத்திலே உலாவுகின்றான்.”

போர்க்களத்திலே குதிரைமேலமர்ந்து இருபாலும் பகைவீரரைச் சுற்றிச் சூழ்ந்து வெட்டி வீழ்த்திக் களிப்புடன் வருகின்ற வீரனின் போராண்மையை, அவனுடைய குதிரை அடியிட்டு வருகின்ற பாணியைச் சிறப்பிப்பதன் மூலம், இவ்வாறு சான்றோர் போற்றுகின்றனர்.

அடுதிறல் முன்பின் ஆற்ற முருக்கிப்
படுதலை பருந்தின்ன நூறி—வடிவிலைவேல்
வீசிப் பெயர்பவன் மாத்தமாத் தீதின்றி
நன்மையிற் றாங்கும் துடியன் துடிகொட்டும்
பாணியிற் கொட்டும் குளம்பு.

(புறத்: 1381)

குதிரைகளைத் தக்கபடி போர்ப்பயிற்சி செய்வித் திருந்தாலன்றி, அவை வளர்ந்த பயன்படாமற் போய் விடும் என்பார்கள். அந்த வகையில் மிகவும் சிறப்பான போர்க் குதிரை இது என்பாம். இதனால் குதிரைப் படைகள் நகுரோரிடம் மிகுந்திருந்தன என்பதும் காட்டப் பெற்றது.

## 39. தருமம் தானம் கருமம்!

இந்த நாளிலே நம் மகன் போர்வீரனாகப் பணி யாற்றச் செல்கின்றான் என்றால், நம் தமிழ் நாட்டுப் பல பெற்றோர்கள் அதனை உவப்புடன் வரவேற்பு இல்லை. இந்த நிலை தமிழ் நாட்டிலே எப்படி ஏற்பட்ட தென்பதே நமக்குப் புரியவில்லை. போர் மறத்தாற் சிறந்து விளங்கிய தமிழர் பரம்பரையினர் என்று பெரு மைப்படும் நாம், போர்ப்பணியினை ஏற்க முன்வராதது என்றால், முன் வருவதை வேண்டா வெறுப்பாக நோக்கு வதென்றால், அது வருந்துதற்குரிய நிலைதானே! நாட்டுநிலைத் தம் உயிரையும் கொடுத்துக் காத்துநிற்கத் துணிவுடைய நல்ல வீரர்களையுடைய நாடுதான், நாடும் உயர் சிறப்புடையதாகிச் செம்மாந்து விளங்குதற்கு உரியதாகும். அத்தகைய வீரர்கள் நம்மிடையே பெருகும் போதுதான், நாமும் நம்முடைய உரிமையைப் பேணி வாழுகின்ற சிறப்பினைப் பெற்று, வளமான வாழ்வின ராகி உயர்வோம்.

இந்த வேளையில் தமிழ் நாட்டிலே ஒரு தாயார் தன் மகனைப் போர்க்களத்திற்கு அனுப்பிவிட்டுக் கொண்டு நின்ற பூரிப்பினை நாம் கருத்திற்கொண்டால், நம்முள்ளும் அந்த உணர்வு கொ ள் ந் து எழுந்து ஒளிசெய்யத் தொடங்கும்.

தருமமும் ஈதேயாம் தானமும் ஈதேயாம்
கருமமும் காணுங்கால் ஈதாம்—செருமுனையிற்

[illegible]
வாள்வாய்ப் புகழ்ப் பெறின்!

(புறம்: 1403)

“[illegible] என்று சொல்லுகின்றார்கள். [illegible] [illegible] என்கின்றார்கள்.”

“என் மகனோ போர்முனைக்குப் போயிருக்கின்றான். அவன் எதிர்த்திருக்கும் யானைப் படையிலே தலைவனை வெட்டி வீழ்த்தி [illegible] கொண்டிருக்கும். அந்தக் களத்திலே, என் மகன் பகைவரது வாள்வாய்ப்பட்டுச் சாவினைத் தழுவப்பட்டான் என்றால், அதுவே எனக்குத் திருவும் தானமும் [illegible] ஆகும்!”

இந்த மூதாட்டியின் நெஞ்சத்திலே நிறைந்திருக்கின்ற உரிமை வேட்கையைப் பாருங்கள்! களத்திற்குச் சென்று தன் மகன் உயிரோடு மீண்டுவர வேண்டுமே என்றுகூட அவள் கவலைப் படவில்லை. பகைத்தலைவனை வெட்டி வீழ்த்தி, அவன் தானும் களத்திலே வீழ்ந்துபட்டால், அதுவே தனக்கு எல்லாப் பேறும் வாய்த்ததுபோல என்கின்றாள்!

## 40. அச்சம் பயந்ததே!

வீரர்கள் தாம் களத்திடையே சென்று கடுமையாகப் போரிடுதலையும், அங்ஙனம் பகைவரோடு இருந்து போரிட்டுத் தம் பட்டுவீழ்தலையும் தமக்குச் சிறப்புத் தருவ தாகவே கொண்டிருந்தனர். வீரனைப் பெற்ற தாயும் கூடத் தன் மகனைக் களத்துக்கு மகிழ்வுடன் அனுப்பி வைத்து இன்புறுகின்றனள்.

எனினும், களத்தையும் களப்போரையும் விரும்பிடாத வராயே நின்று பயந்தோரும் சிலர் அந்நாளில் இருந்தனர்

இல்லை. அவர்கள்தாம் கணவரின் காதல் மனைவியர் ஆவர்.

தம் கணவன்மாரோடு உயிர் ஒன்றிக் கலந்த கற்புடைமகளிரை உடையவர் அவரானவர், அவர்களைத் தம் கணவன்மாரை இழந்து விடுகின்ற வைகல் நிலையினை எந்நிலையிலும் இல்லாதிருந்தது. அவர்கள், அந்தத் துயரினைத் தாங்கமாட்டாமல் களத்திற்குச் சென்று வேல்பட்டு வீழ்ந்து கிடக்கும் தம் கணவனைக் காண்கின்றனர். அந்த வேலைப் பறித்து தாமும் அதன்பால் வீழ்ந்து தம் உயிரையும் தம் கணவனது உயிரோடு ஒன்று சேர்த்துவிடுகின்றனர்.

இப்படிப்பட்ட ஒரு சிறந்த காதலுடைமையைக் காட்டுகின்ற செய்யுள் இதுவாகும். அந்தத் தலைவியின் தியாகம் நம்மை சிந்திக்கச்செய்கின்ற பெருமிதம் கொண்டு பாடுகின்றது.

இன்ப முடைப்புகொண்ட மெய்துயில் காண்மினோ
அன்பி னுயிர்மறக்கும் ஆரணங்கு—தன்கணவன்
அன்னானை உட்கொள்ளும் அச்சம் பயந்ததே
புல்லார்வேல் மெய்கிழித்த புண்.

(புறத். 1404)

"பகைவருடைய வேற்படை அந்த வீரனின் உடலினைக் கிழித்துப் புண்படுத்தியது. அந்தப் புண்ணினைக் காணக் காண அவள் உள்ளம் பெருமிதத்தது. தன் கணவன் தன் அருகே இல்லாமற்போனதான நிலையினை உள்ளத்தே கொள்ளவும் அவளால் இயலவில்லை. ஆனால், அவள் பால் அச்சம் தோன்றித் அவளின் நீங்கள் தனித்திருக்கின்ற நிலையின் அச்சம் அவளுடைய உள்ளத்தை பெரிதும் வாட்டியது.

"தன் உடம்பினை நோக்கினான். அவன் தன்னைத் தழுவிக் கிடந்த இன்பத்தின் தலைவியை நோக்கி

ளாள். அவள் உள்ளம் ஆன்றோர் யார்க்கு முன்னுறு நிலை வித் கொண்டது.

"அன்பின் விழுமியாய், களத்தில் பட்டு வீழ்ந்த தம் கணவனைக் கண்டதும், அவனைப் புண்படுத்திய அந்த வேலின்மேலே தானும் வீழ்ந்து மடிகின்ற பெண்கள் பேரின்ப நலத்தைத் தம்முடைய உடம்பினைத் துறத்தலைக் கொண்டு அடைவார்கள்.

"இந்நிலையை உணர்ந்ததும், அவள் கணப்போதும் தாம திக்கவில்லை. அந்த வேலின்பால் வீழ்ந்து அந்நிலையே தானும் உயிர் நீத்தாள்.

"அவளுடைய நிலையைக் கண்டவர் வியந்தனர். அவளுடைய தெய்வக் கற்பின் சீர்மையை நினைத்தனர். தாமும் மெய்ம்மறந்து அவளைப் போற்றினர்."

இங்ஙனம் மறவர்களின் மனைவியர், தாமும் மறக் கற்பினால் மாண்புற்றுத் திகழ்ந்த செம்மையும் உடைய வராயிருந்தனர். தகடூர் நாட்டின் இந்த மேதகுமாண்பின் செழுமையினை நினைக்கும் போதெல்லாம், நாமும் அந்தத் திருநாட்டை நினைந்து நினைந்து பூரிப்படை கின்றோம்!

இந்தச் செய்யுளை நச்சினார்க்கினியர் 'யாத்தருங் கற்றின் சாற்றிய பெருமையும்' என்னும் இத்துறைக் கண் காட்டுவர்.

## 41. கழலின் திண் காய்!

தகடூர் நாட்டு மறவர்களின் மாண்புகளை நாம் மீண்டும் மீண்டும் நினைக்க நினைக்க, நம் கண் முன்னர், தமிழரின் வீரமரபு எத்துணை சிறந்ததாக இருந்தது, காலப் போக்கில் எத்துணை மாறுதலுக்கு உட்பட்டிருக்கின்றது என்ற கவலைதான் அதிகமாகின்றது.

தன்னுடைய ஒரே பேறான செல்வமகனைப் போர்க் களத்திற்கு அனுப்பிவிட்டு, அவன் களத்தின்கண் ஆற்றி வந்த வீரத் திருவிளையாடல்கள் பலவற்றையும் கேட்டுக் கேட்டுத், தான் பெற்ற மகனை நினைந்து நினைந்து பெருமைப்பட்டுக் கொண்டிருக்கின்றாள் ஒரு தாய்! ஆண்டுகளால் முதிர்ச்சியுற்ற அவளது உள்ளம், தன் மகனின் பெருமையை நினைந்து பூரித்திருந்தது. அவள் பால் வந்து 'நின் மகன் களத்தே புண்பட்டு வீழ்ந்தான்' என்று சிலர் உரைக்கின்றனர்.

அந்தச் சொற்களைக் கேட்டதும் அவள் துணுக்குறுகின்றாள். கொந்தளிக்கும் அவள் உள்ளம் அவளைக் களத்தை நோக்கி இழுத்துச் செல்லத் தளர்நடை கொண்ட அவள், தணியாத ஆர்வத்துடன் தன் மகனின் திருமுகத்தைக் கடைசி முறையாகக் காணும் ஆர்வத்துடன் விரைகின்றாள்.

அந்த வீரனின் பெயர் நெடுங்கோளாதன் என்று தொல்காப்பிய உரையாசிரியரான நச்சினார்க்கினியர் கூறுகின்றனர். நெடுங்கோளாதனின் தாய்தான் அந்த மூதாட்டி. அந்தத் தாயின் மனநிலைதான் எவ்வளவு பெருமைப்பட்டுப் பெருமிதம் அவளது உள்ளமெல்லாம் குடிகொண்டு விடுகின்றது! அவளுடைய புகழ்ப்பாட்டின் ஒலி செவிகளிலும் எதிரொலிக்கின்றது! நம்மையும் சோகக் கடலுள் ஆழ்த்தி விடுகின்றது!

களத்தே அவளுடன் துணையாகச் சென்றோர், 'தாயே! இதோ கிடக்கின்றான் நின் மகன். அவனைப் பாருங்கள்!' என்கின்றனர்.

அந்தத் தாயும் பார்க்கிறாள். மகனைக் காணவில்லை அவள், அவனை மூடிக் கிடக்கின்ற அம்புக் கூட்டக் குவியலைத்தான் காணுகின்றாள். அவ்வளவு அம்புகள் தைக்க அவன் வீழ்ந்தான் என்றால், அவனை அழிக்க எத்துணை பகை மறவர் வளைந்து நெருக்கியிருப்பார்கள்! அவர்கள் அம்பாய் இரண்டு நின்று கொல்லுமாறு, அவன்

எத்தனை அளவிறந்து கண்கட்டு அறிவினை விளைத் திருப்பாள்! செய்யும் அப்பாள் அந்த நிலையுதனையும் நினைக்கின்றது.

"என் மகள் இவள் எவ்வுதனை, எதனைக் கன்றி யாள் அறிவேனோ? எதனைக் கன்றிதான் இவள் என் மகளென்று அறிவேனோ? இவள் என் மகள் ஆதலைத் தான் யான் எதனைக் கன்றி அறிவேனோ?

"கண்கள் கனைக் கட்டத்தே நழுவிக் கிடக்கின்றன. கனவிலோ, அழகிய மாலை விளங்கும் கழுத்திடத்தே காணக் கொட்டப்பட்டுச் சிதைந்து போய்க் கிடக் கின்றது.

"மாலோ, பொருதும் முன்னையுடைய அம்புகள் நழுவிக் கிடக்கின்றன, புனல் வழிந்தாலி, அம்புக் கட்டைப் போன்று, ஒரு நாழிகை நேரம் வந்து வைத்த அம்புகளின் செறிவொடு விளங்குகின்றது.

"நெஞ்சமோ கொடிய கனைகள் பாய்ந்து துளை பட்டுத் தோன்றுகிறது. துடைகளோ தம்முடைய நிறத் தையும் மறைத்துக்கிடக்கும் பெரிய கனைகளால் நிறைந்தனவாகி விளங்குகின்றன.

"அதனால், கட்டவிழ்ந்த பூங்கொடி போன்று அம்பு கள் செறிந்த படுக்கையிடத்தே கிடந்த இந்தக் காளையைக்கண்டு, இவன் என் மகனோ என்பதை யான் அறிவேனோ?

"அழகுடன் காய்ந்து விளங்கும் கழுத்திலே இன்னமும் காயம் போன்று இவன் உடல் தோன்று கின்றதே!"

எத்தனை டறிவோ எத்தனை டறிவோ
என்மகன் ஆதும் எத்தனை டறிவோ
கண்ணோ கணையும் விளைவே தனையே
வண்ண மாலை வகன்றிடக் குறைந்தன
வாயே,

பொருநுகளைப் பகழி மூழ்கலிற் புலால் வழிந்து
ஆய நாறிவல பப்புசெறிந் தற்றே
செஞ்செவ் வெஞ்சொல் கடகதன குறுமகே
பிறங்கமர்த்து பலரை மிகைத்தன னதனால்
அயிர்ப்பு வயப்பகைக் கிடந்த காளை
கவிழ்ப்புள் கழற்றின் காட்சியாள் நானே!

(புறத். 1495)

இங்ஙனம் கதறிய தாய், தன் மகனைக் கண்டு, அந்தக் காட்சியினாலே தன் உள்ளம் நெகிழ்ப்ப, அந்நிலையிலே வீழ்ந்து உயிர் நீத்தாள். இதனை, 'இத் தகுதி யாத்திரைச் செல்வனைத் தாங்கும் பெயர்த்த நெடுந் தோளாதன் தாய் இறந்துபட்ட தலைப் பெயல்நிலை' என்று குறித்துப் போற்றுவர் நச்சினார்க்கினியர்.

## 42. கல்லாக் காளை!

ஒரு வீரன் போர்க்களத்திலிருந்து, போரின் இடையிலே வீட்டிற்குத் திரும்பி வந்துவிட்டான் என்றால், அவன் அப்படித் திரும்பி வந்ததை நினைத்து, அவனைப் பெற்றவள் எப்படி வேதனைப்படுவாள் என்பதைக் காட்டுவதாக அமைந்துள்ளது, இந்தச் செய்யுள் ஆகும்.

தன் மகன் களத்திலிருந்து திரும்பி உயிருடன் வந்திருக்கின்றான்; களத்திற் போரோ மிகவும் கடுமையாக இருக்கின்றது; தன் கைவேலைக் களிற்றின்மீது எறிந்து அதனைக் கொன்றுவிட்டுத் தன் கையில் வேறு ஆயுதம் இல்லாததால்தான் அவன் திரும்பியிருக்கின்றான்; இந்த நினைவெல்லாம் அந்தத் தாயின் உள்ளத்தில் அப்போது எழவே இல்லை.

அவள் உள்ளம் பெரிதும் வேதனைப்படுகின்றது. தன் குடிக்கு என்றுமில்லாதபடி பழியைக் கொண்டுவந்து விட்டானே தன் மகனென்று அவள் துடிக்கிறாள்:

அவனைப் பெற்ற வயிற்றிலே அடித்துக்கொண்டு, தன் தீவினைக்கு நொந்தும் கொள்ளுகின்றாள்.

அவனுடைய முறையைப் பார்த்தால், அப்படிப்பட்ட பழிச்செயலைச் செய்த மகனை ஏன் பெற்றோமென்று அவள் அடைந்த துயரமும் மனக்கொதிப்பும் நமக்கு நன்கு புலனாகும்.

"காதலைப் பருவத்தே பிள்ளையையுடைய வயிறே! காது வினைக்குதவிப் பிள்ளைபெற்றெடுத்த வயிறே! நீ நோன்பு செய்யாது போயினைபோலும்! அதன் காரணமாகத்தான் நின்னிடத்திலிருந்து அவன் வந்து உதித்தே தோன்றினான் போலும்!

"நம்முன் மனம்பொருந்தாது போயினர் சேரரும் அதிராசரும். அதன் காரணமாகக் கொடிய போரிலும் அவர்கள் கடுபட்டனர். அதன்பின், அரிதான போர்த் தொழிலைச் செய்து, அந்தக் களத்திலே, வயிறே! நீ செந்தொழிலைச் செய்யாது போயினையே!

"சிறுபிள்ளை புல்லினையுடைய முகத்தைக்கொண்ட கலிற்றினை, வேல்கொண் எறிந்து கொன்றவனை என்பார்கள். ஆனால், நின் மகனோ அந்த யானையினது முகத்திடத்திலே ஒளிந்துபோக, நீயும் அந்தக் களத்தினின்றும் வெளிப்போந்தனனாகத் திரும்பி வந்துள்ளனையே!

"கன்றிய மன்மிசைக் கல்லாத நின்னைப் பெற்றது இந்த வயிறு! ஆம் இதுவரை யாரும் செய்யாத பெரும் பழியினைச் செய்துவிட்டதே!

"மருத்துவ அந்தக் காலின் மாமயூரத்திலைப் பெரிதும் புண்பட்டிருந்த அவன் அத்தலையே உயிரினைவிட்டுச் சிறந்தனன்" என்றும் நாம் அறிதல் வேண்டும்.

சாதுவன் வயிறே சாதுவன் வயிறே
கேள்வ வளைத்த துன்னின் நமனே
பொருந்தா மன்னர் அருஞ்சமம் முருக்கி
அக்களத் தொழிந்தும் செல்லாய் மிக

புன்முகக் குருகாம் எதிர்ந்த வெட்சி
அதன்முதற் தொழிய கிடக் நகையே
எம்மில் செய்யா அரும்பழி செய்து
கல்லாக் காளையின் வீழ்ந்த வசிந்தே!

(புறத்-1406)

'கல்லிலே வேலோடு நிற்கும் போர்க்கருத்தாளி தாவி தலைநிலைப்பெயல் திணை' என்று இச் செய்யுளை, 'மாற்றரும் கூற்றம் சாற்றிய பெருமையும்' என்னும் துறைக்கு உதாரணமாகக் காட்டிக் கூறுவர், தொல்காப்பிய உரையாசிரியரான நச்சினார்க்கினியர்.

## 43. அழுகையும் துடிமுழக்கும்!

இரவலர்களுக்குத் தப்பற்ற புரவலனாக இருந்த அதிகமான் இறந்துவிட்டான். தன் நாட்டின் உரிமையினைக் காத்துநின்று களத்திலே வீழ்ந்து விட்டான். சேரன் போரிலே வென்றான்; ஆனால் அதிகமானோ மக்களின் உள்ளங்களைத் தன்னுடைய மறைவினாலே வென்று விட்டான். அவனது வெற்றியின் சிறப்பு, அவனைக் கொன்று பெற்ற வெற்றியினால் மகிழ்ச்சி துள்ள வேண்டிய சேரமானின் உள்ளத்திலும், இழப்பின் வருத்தமாகவே கவிந்து தொடங்கியது என்பதனால் அவனிறந்த சிறப்பெய்தி நிலை பெறுகின்றது.

அதிகமான் இறந்து விட்டான். அவன் இறப்பினை அறிந்தபோதும் தகடூர் மறவர்களின் உள்ளங்கள் தளர்ந்து போய் விடவில்லை. தம் தலைவனை இழந்ததும் சோர்ந்து பின்னடைய வேண்டிய படையினர், பகைவரை எதிர்த்துச் சாவதைத் தாமே ஒருவரின் ஒருவர் முந்துகின்றனர். துடிமுழக்கம் களத்திலே ஒலித்த வண்ணமாய்.

தகடூர் மறவரின் இந்தச் செயலை நோக்கும் சான்றோரின் உள்ளம் வேதனையாலும் வியப்பினாலும் ஒரு

வேர் வெதும்புகின்றது. 'இரவலரே வருக வருக' என இசைத்துக் கொண்டிருந்த துடியின் ஒலியை அதிகனின் நகரிக் கோட்டையிடத்தே கேட்டவர்கள் அவர்கள். அந்த ஒலியே மறுபடியும் கேட்கின்றது. ஆனால், அது இரவலரை வருகவென அழைக்கும் ஓசையாக இல்லை. கவிரக் கோமான் அதிகன், புரவலனாக விளங்கிய இரவலர் புகலிடம், களத்தில் மாய்ந்து விட்டான்; அவன் பெற்ற வீர சுவர்க்கத்தைப் போற்றுவதாக முழங்குகின்றது துடிப்பறை.

அவன் அரண்மனையிடத்தே பெண்கள் அழுது புலம்புகின்றனர். கேட்போரது கண்ணீரை ஆர்க்கவுடைய கொடிய பூசலின் ஒலியோ மிகவும் கடுமையாக எழுகின்றது. அந்த ஒலியைக் கேட்டுப் புலவரின் உள்ளமும், அதிகனின் பிரிவை நினைந்து புலம்புதலைத் தொடங்குகின்றது.

அப்போதும் துடிப்பறை ஒலிக்கிறது!

அது எஞ்சியவர் செவியும் போர்ப்பறை ஒலி!

புலவர் வருந்துகின்றார், 'புரவலன் மாய்ந்த போதும் இந்தப் போர்த்துடி முழங்கவேண்டுமோ? பெண்கள் அழுது புலம்புகின்றனர்! அதனைக் கேட்டும் பொங்கும் இத்துடி என்றால், அது, அவன் தோற்கண்ணையுடைய நல்லமையாது போலும்!' என இரங்குகின்றார்.

**இரவலர் வம்மின் எனவிசைத்த இன்றுடி**
**புரவலன் மாய்ந்ததற்பின் பொங்கும்—உரைமருங்க**
**பேதையர் விம்முறுத பொழுதன் கேட்டக்கால்**
**தோற்கண்ணை போலும் துடி.**

(புறத்: 1487)

இச் செய்யுளை நச்சினார்க்கினியர் தொல்காப்பிய உரையில் மேற்கோள் காட்டுவர்.

# 44. அணியில் புகழ்!

தகடூர்ப் போரிலே அதிகமான் வீழ்ந்த செய்தி தமிழகமெங்கணும் விரைவிலே பரவியது. சேரமானை வெற்றிக்காகப் பாராட்டுவோர்களும் கூட, தகடூர் அதிகமானின் வீழ்ச்சிக்கு வருந்துவோராக அதிகமாயினர். அப்படி வருந்துகின்ற ஒருவரின் கருத்து இது.

“இரும்பு என முழங்குகின்ற செருந்தி முரசத்துடனே கூடிவந்த பகைவர்களின் படைமறவர்கள் முற்றுகையிட்டுத் தன் பழமையான ஊராகிய தகடூர் என்னும் கோட்டையிடத்தே இத்துணைநாள் அடைபட்டுக் கிடந்தான் அதிகமான்.

‘அதனை உடைத்து வெளிவந்து, களத்திலே பகைவரது இருதிறத்துச் சிறந்த வெள்ளை எதிர்நின்றவர்களை, அவன் ஆற்றிய போராண்மை வீர விளக்கமாகத் திகழப் பெற்றது! அங்கே, அவனும் இறுதியில் களத்திலே பட்டான்.

‘எவ்விடத்தே அவன் வீழ்ந்து பட்டான்!

‘அவன் மிகவும் பெரிய தலைமையாளன்!

‘அவன் பட்டது தகடூர்க் களத்தின் ஆனால், அவன் புகழோ பெரும்புகழ்! அது இவ்விடத்தும் நின்று நிலவுகிறதே! அது அவனின் வீழ்ச்சியைக் குறிக்கிற அழகிய புகழ்தான்! என்றாலும், அது களத்தில் வீழ்ந்த பெரும் புகழ். அதனை யாவும் போற்றுவோம்!

இரும்பனை முழங்கும் முரசமொடு இறுத்த
ஒன்னார் மன்னர்த் தந்த முன்னுகள்
கிழறிய விளங்கிய வேலோன் ஏந்தி
யாண்டுபட் டனனே நெடுந்தகை
ஈண்டுநின் தம்ம வனப்பினைப் பெரும் புகழே!

(புறத். 1453)

எப்போதோ எங்கோ அதியமான் இருந்தான்! அவன் புகழ் அவனுடன் இறக்கவில்லை! அது இன்றும், தமிழகம் எங்கும் நிலவுகிறது! அழியாத பெரும் புகழ் பெற்று விட்டான் அதியமான்! தோல்வியிலும் அவன் கண்டது வெற்றியே! வீழ்ச்சியிலும் அவன் பெற்றது உயர்ச்சியே!

## 45. தாயின் கனவு!

அதியமான் தன்னுடைய கோட்டையைக் காத்த வாறு உள்ளிருந்தபடியே சேரமன்னன் பெருஞ்சேரல் படைகளின் தாக்குதலைச் சமாளித்து விட்டான். என்றாலும் சேரனின் பெரும்படைக்கு முன்னால் அவனது வீரர்கள் உறுதியாகக் கொல்லப்பட வந்தது. அவ்வளவு அடைத்திருந்து அவன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த சோழப் படையும் வந்து சேரவில்லை. இறுதியில், மறுநாட் காலை தான் கோட்டையை விட்டு வெளியே போய், போரிலேயே ஈடுபடப் போவதாக அவன் முடிவு செய்துவிட்டான். அவன் தாய்க்கு அன்றிரவு சரியான தூக்கமே இல்லை. தீய கனவுகள் பல அடுத்தடுத்துத் தோன்றின. அவள் கவலையோடும் கண்ணீரோடும் இரவை நீந்திக் கடக்க முயன்று கொண்டிருந்தாள்.

மறுநாள் களத்திலே அதியமானும் வீழ்ந்து பட்டான். அவள் தான் கண்ட கனவைச் சொல்லிப் புலம்புகின்றாள். கேட்கும் தமிழ்ச் சான்றோரின் கண்கள் கலங்குகின்றன. அவளுடைய அந்தப் புலம்பலை நினைத்துப் பாடிக் களிக்கின்றார் அவர்.

"கனவு போலவும் இருந்தது; நனவுபோலவும் இருந்தது கண்ட அந்தக் காட்சி.

"நான் நினைக்கும் அளவாய், என் உள்ளத்து உள்ளும் நடுக்குறும்படியாக அந்தக் காட்சி தோன்றியது.

"கருநிறக் காக்கையும் வெள்ளைநிறக் கொக்கும், இரு வகையான உயர்இனங்களுக்கு அடையாளமாக எழுதப்பட்டு உயர்ந்த கொடிகளோடும், அச்சந்தருந்தக்க தோற்றம் கொண்ட கருமைக் கொண்டவைகளைப் பலப் பல கழிக் கால்களும், இரத்தம் சிந்தும் தலைகளாகிய உயிர்களைக் கொண்டவைகளாகக் களிப்புடன் ஆடிக் கொண்டிருக்கக் கண்டேன்!

"பவளநிறமுள்ளவள் போல விளங்கும் விரித்த கூந்தலை உடையவள்; மின்னலைப் போல விளங்கும் பெரிதான கோரைப் பற்களை உடையவள்; தாமரையைப் போலத் தோன்றும் பெருத்த முலைகளை உடையவள்; இடையினையும் மறைந்த பெரிதான வயிற்றைக் கொண்டவள்; இடி முழக்கத்தைப் போன்ற பெரிதான குரலினைப் பெற்றவள்; தக்க காரியங்களை உடையவள்; தசைகள் தொங்குகின்ற முதுகினைக் கொண்டவள்; உடலைப்போல விளங்கும் கருத்த மேனியினள்; காண்பதற்கு இன்னாததும் பிணநாற்றம் உடையதுமான மண்டையோட்டு மாலையினை அணிந்தவள்; விண்ணைப் போன்ற புருவத்தாள்; அகன்று உயர்ந்து பரந்த அல்குலை உடையவள்; கார் மேகமும், வெண் மேகமும் காற்றும் போலச் செல்லும் விரைந்த செலவினைக் கொண்டவள்; ஒரு பெண்ணினைக் கண்டேன் (இவள் காளி).

"இவள் தன் தலையை விரித்துக் கொண்டு, அகன்ற தன் வாயினைத் திறந்து விட்டவளைப் போலக் காத்திருந்த உலகினர் மறுமையின்புகளை அறிந்து, தம்முள் மாறுபாடு கொண்டிருப்பது அறிவினையுடைய பெருந் தாளாகிய நீ அறிக இச் முறை தான் காட்டுவது இம்மானிடர் என்று அறிவிப்பவளைப் போலத், தன் பூவினைக் காட்டி அவள் உலா வந்தனள். புறநி

எழும்படியாகத் தன் கைகளால் நிகர்த்தே அறைந்து ஆர்ப் பரிக்கின்றாள். தகடூரால் இந்தவுரையே தான் இடம் வையாக அப்படிக் கற்றி வந்தாள். பின்னர் தன் வாழிடமாகிய காட்டினைச் சென்றும் சேர்த்தனள்.

இத்தகைய ஒரு காட்சியைப் பார்க்கவேண்டும் என்று சொல்லும் கவலையினாலே நெஞ்சுபட்ட நெஞ்சத்துடனே. துயரக் கடலிடையே நீந்தியிருந்தனன் அதிகமானின் நாடு அன்றிரவு அவ்வாறு நிலைமை அமைந்திருந்தது.”

கடலே போலவும் கனலே போலவும்
முன்னிய நன்றியென் முனைகம் கடுக்குறக்
கருநிறக் காக்கையும் வெள்ளிறக் கூகையும்
இருவகை உயர்திணைக் கேந்திய கொடியொடும்
பெருவந்த தோற்றத்தால் உருவின படைவிக்
களங்கள் குருதி மன்னுடலக் தாடவும்
மலைபல்ல விழித்த கண்ணாள்
பிறையன்ன பேழ்வயிற்றாள்
குடமன்ன பெருமுலையாள்
இடைகரந்த பெருமோட்டாள்
இடியன்ன பெருகுரலாள்
நடியாயாள் நகைப்புறத்தாள்
கடலன்ன பெருமேனியாள்
வாள்மின்னாக் கமழ் கேசநுகள்
நிலையன்ன புருவத்தாள்
செந்நெறிய கைக்குள்ளாள்
மழுவும் மஞ்சள் மணியும் போலு
செவ்விழா சொருபென் டாட்டி
தலைமிசைத் தடக்கை நாற்றி
மறுமெறிந்து பாடு கொண்டாடிய
அறிவுக்கிய முறைமா விம்பம் மன்றே
புலிநல் காட்டு நீறுபொங் கத்தள்
கலைனாள் மீனைத் துணை கிடங்குசெய்து

காடு புறந்தன் கண்டோள் என்னும்
கலனை நெஞ்சமோ டவலம் நீந்தினள்
அன்றது மன்றல் அதியமான் நல்கு.

(தக்கயாகப் பரணி உரையில் உரையாசிரியர் காட்டும் தகடூர் யாத்திரைச் செய்யுள் இது)

இந்தச் செய்யுள், அதியமானின் தாய் தன் மகனின் அழிவுக்கு முன்னால் இப்படி முன்னதாகவே அவனழிவைக் குறித்த ஒரு தீய கனவைக் கண்டாள் என்கின்றது. இதனால், அதியமானின் தாயும் அந்தப் போர்க்காலத்தே உயிரோடிருந்தவள் என்று நாம் அறிகின்றோம். 'கலங்கு நெஞ்சமொடு அவலம் நீந்தினாள்' என்ற சொற்கள்தாம் எத்துணை உருக்கமாக அந்த அம்மையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன!

## 46. கருதலும் கருமே!

அதியமானுடைய தகடூர்க் கோட்டைப் படைத் தளபதிகளுள் ஒருவன் பெரும்பாக்கன் என்னும் பெயரினன்.

இவன் அதியமானால் சிறப்பிக்கப் பெற்ற போர் மறவனும் ஆவான். இவனுடைய போராற்றலை மதியாது, சேரமான் தன்னுடைய முனைப்படையிலே வந்து நின்று போரிட முயல்கின்றான். அப்பொழுது அரிசில்கிழார், அவனை விலக்குவாராகக் கூறுகின்றார்.

"சேரமானே! மெய்யான ஆற்றல் நிறைந்த மனத்தினனாக, நம்முடைய எதிர் தகடூர்ப் படையினை நடத்தி நிற்பவன் பெரும்பாக்கன் என்பவன்! அவனை நீ அறிய மாட்டாய்;

"தகட்டாரால் பொறிப்பித்த செய்வினைத் திறனால் அழகுற்றுத் தோன்றிக் கட்டுவிட்டுக் கோண் புகுந்தும் தேரையுடையவன்றும், கடைந்து சீறி வரும் மதக்க கனைப்பாட்டத்தையுடைய குதிரையின்

மெனாத், தலைமயிர்த்த கவிர்மலிமினைச் சூடியவனாக கருதிய இளையோனாமோ, இந்தப் பெருமானக்கனை என்றாக நினைத்தல் வேண்டாம்!

"இவன் சிறினாய், யானையுடைத்த தெருப மனை விட்டுச் சென்று படியும் மார்பெய்தனம் பேசவும் தோன்று வதும் குளித்த தருநாற்றத்தைக் கொண்ட மருதினை தழுக்கக் கொண்டிருப்பதும், வெண்மையான கொம்பு களை உடையதும், தலைமையுடையதுமான, தம் போர்க் களிறுகளை வெட்டிக் கொன்று நாளையும் செய்யக் கூடியவன்.

"இவன் தன் வீரத்தால் பகைவேந்தரைப் பூசிக்கும் உள்ளக் களிப்புடன் இருப்பவன். அப்படிக்கவர அவன் வருகிறான். காட்டுவினையுடைய கன்னியை உண்ணும் செய்வினையில் வல்ல தோற்றத்தையுடைய அடியவனே நீ எதிர்ந்து அவ்வமைய அவர்ள் கண்ணினை நோக்கிச் சிறிய கோலை மொழிகின்ற, மின்னல் தெறிவது போலக் கூறியவனாகச் சொல்லாது தன் வேலினைச் சுழற்றி விட்டு, நின்னைக் கொன்று, அந்த வெற்றியால் நகைத்துத் திரிகின்ற தன்மையினையும் உடையவன் அவன்!"

அரிசில்கிழார் சோழனுக்கு இப்படிச் சொல்ல, அவனும் தன் அடியவருடன், முனைப் படையினின்றும் நீங்கி, காவலான பின்னணிப் படையுள் சென் றனன்.

வெம்பிய மனத்தின் கம்பெழுதி நின்றோன்
அடர்சினைப் பொலிந்த கடர்வீடு பாண்டில்
கையின் தழுவி அருமைத் புலித்
தலை மயிர் கண்ணீர் மிடைபோல் சீறின்
வின்னுறுப் நெடுவை மிடுபுகள் கடும்பத்
தன்மையும் கடாரம் உயிர்த்த வெண்கோடு
அண்ணல் யானை வெதித் தொன்றோ
செம்மல் புனைமலர் அம்பகுத்து வருதல்
கடிமனை கன்னுள் மகன்கட் காட்டுதி
இதுவே நுமைகள் நோக்கின் சிறுபிய

கொலைமொழி மின்றுக்கிதக் குளைமதன்
வேல்நிரைத் திட்டு வருகுறும் வருமே!

(தொண்டைப்பட்டி புறத்திணை இயல்கள்
கச்சினைக்கிளியர் காட்டும் பேற்றினை)

## 47. நொந்து கை விதிர்க்கும்!

தகடூர்க் கோட்டை எவ்வளவு பாதுகாப்பை உடைய தாயினும் அது முடிவில் சேரமான் பெருஞ்சேரல் இரும் பொறைக்கு வீழ்ந்துவிடக்கூடியதே என்பதனை நன்றாக உணர்ந்திருந்தார் பொன்முடியார். அத்துடன், அந்தக் கோட்டையின் சிறந்த காவல் ஏற்பாடுகளையும் குறிப்பிடு கின்றனர்.

“மதுமாண்புடைய சேரப் படைமறவர் எனினும், அவர் ஏறிக் கடத்தற்கு இடமின்றி, எப்புறமும் செவ் வேறு வெண்ணிறுக்குவை அமைத்து அப்பிவைத்து வழுக்கும்படியாகப் பேணப்பட்டிருப்பது. தகடூர்க் கோட்டையின் மதிலாகும்.

“எந்திரப் பொறிகளைப் பலவாகச் செய்து அமைத்தே நிறுத்திவைத்துள்ளனர். அவை தம்மை நெருங்கி வருபவரை வளைத்துக் கொல்லக் கூடியன.

“கல்லெறியும் கவண்களும், கூர்வேலுடன் வேலும் பொறிகளும், காய்ச்சி எறியும் மெழுகும் அமைந்து, கூரான வாள் கணைகளும், மதிற்புறம் எங்கணும் பரப்பியிருக் கின்றனர். இவற்றால் விளையும் கேடுகளும் மிகுதியாக இருக்கும்.

“பத்தும் பாலையும் பசிய கனிகளையுடைய விடுப் புட்டாலும் எண்பட்ட பலவும் சென்றுமீண்டு எரிந்து கொன்றிருக்கும். புதிய பலகணிப்போல விளக்கும் பொறிகள் பலவற்றையும் அமைத்துள்ளனர்.

"இவற்றின் பின்னர்த், தாமே எப்படி வெற்றி வந்து தாக்கும் பெரும் பகுதிகளையும் வாரிவிட்டுத்தே தாக்கி வைத்துள்ளனர்?

"இவற்றை எல்லாம் கருதவே இல்லாத நிலை இப்போது ஏற்பட்டுவிட்டது. என்றாலும்,

"நாள்தோறும் வந்து வந்து மடிகின்ற வீரரின் மனைவியர்கள், வட்டத் திட்டத்தே மூழ்கி உயிர்துறக்கும் போது, அவர்களுக்காகத் தோன்றும் தெய்வக் கற்பு நலத்தைக் கண்ட சான்றோர், மீண்டும் மீண்டும் அத்தகையவரை நாள்தோறும் கண்டு கண்டு, அவரது அத்தகைய சாவிற்கு நொந்து நொந்து கைவிடுக்கும் நிலையும் உளதாகின்றது.

"நாள்வழித் தந்தையர் படைப் பெருக்கினை உடையவன் பெருஞ்சேரல் இரும்பொறை. அவன் உழிஞைப் பூவினைச் சூடி முற்றுகையிடுதற்கு அடையாளமான, தன்னுடைய முழக்கினை நாள் தோறும் கேட்கும்பொழுதெல்லாம், எம் தலைவன் கணவீ, அந்த நினைவினையே கொள்ளுகின்றாயே!

மறனுடை மறவர்க் கேறுபட மின்றி
வெம்போர் மடவாள் மப்பி வெவ்வாயும்
எந்திரப் பறவை இயற்றின நிறீஇக்
கல்லும் கவணும் கடிமிளைப் பொறியும்
வில்லும் கணையும் பலபடப் பரப்பிப்
பந்தும் பாவையும் பசிவிற் புட்டிலும்
என்றிவை பலவும் சென்றுசென் றெறிய
முந்தை மறவர் மயங்கிய இன்றை
எம்பெறும் பழி மாற்றின் நுதலிச்
சுட்டுன் போரின் நாவிலும் வட்டத்
தீப்பாய் மகளிர் திகழ்நலம் பேர
சோகமும் சோகமும் சொல்லுகை விதிர்க்கும்
தூக்கரும் தானை இரும்பொறை
புக்கோன் தன்னுழை கேட்டொறும் கலுழ்ந்தே!

'தாக்குதற்றானை பெருக்கெடுத்தோடும் புனல்போல் தன்னுடைய கோட்டையும் கைப்பற்றிக் கட்டுக் கடப்பரல் மகளிர். நெஞ்சு நகம் போர் நோக்குநர் நோக்குநர் நொந்துவரு மிறுக்கும்! எனக் கூட்டியும் பொருள் கொள்ளலாம்.

## 48. நாளை ஊர் கொள்வோம்

காவல்நாட்டைப் பிடிக்கும் நோக்கமுடைய அரசர் படைகளின் வலிமையான தாக்குதலாலும், அவர் படைத் தலைவர்களின் போர் நுட்பத் திறனாலும், பெரிதான அழிபாட்டிற்கு உட்பட்டு நொந்துவிட்டது. தனது படையின் பெருநிலையைக் கண்டதும் சோர்வின் நன் அருகே இருந்த அறிவிற்றோரையும் பொன்னுடையாரையும் நோக்கு இன்றான். படை பட்ட தன்மையினைக் கூறுமாறு, கவலையுடன் விசாரிக்கின்றான். அப்போது அவர்கள் கூறுவதாக விளங்கும் செய்யுள் இது

"தலையானைப் போன்று பாய்ந்து வந்தன குதிரைகள். மலைகளைப் போன்று ஒன்றுடன் ஒன்று மோதிப் போரிட்டன யானைகள். இக்கொளி எழ, விண்ணை நாணொலி எழுப்பியபடி வில்வீரர்கள் இறந்தனர்.

"இப்படிப்பட்ட இவைகளை எல்லாம் பகைவர் புறமிடுமாறு வெற்றிகண்டவர்கள், முன்னாளிலே நம் படை மறவர்கள்.

'இனி, இவர்களுடன் வந்து, இந்தப் போரிலே, இன்று பகைவரைப் புறங்கண்டு, கைத்திட்டுத்தே பசும்புண் பெற்றும் விளங்குகின்ற வேந்தனாகிய சேரமானே!

'பெரிய களிற்றினைத் தாக்கிய கணை தைத்து விளங்கிய பகைவர் பகழிகளை, முகத்திடத்திருந்து வழியும் சுவியைப்போல கைத்தெறித்தபடி நகைமிக அடுத்தே விடப்பக், காக்கனிந்த கனைய மாத்த எழுவினை

0-,1A,T N91



உடையவராக வீர வல்லமையுடைய நம் ஆடவர்கள், உருக்கி வார்த்த மிகுந்த சினத்தையுடையவராகச் செருக்குற்றவராக, களத்திலே நானை வெற்றிகொண்டு ஆரவாரிப்பார்கள்.

''இந்நிலையிலே, இந்நாள் காலத்தால் தமிழரிடமிருந்து போய்விட்டது. ஆயினும், நாம் இப்போது முழுமை [illegible] முழுமையாகச் சென்று தமிழை யும் மேம்படுத்திக் கொள்வோம்.

''அதனிடத்து நாடும் வேண்டா, கலையை விட்டு அகத்திலடைக'' என்று தெரிவிக்கின்றனர்.

கலையொடு பாய்ந்த மாவும் மரையொடு
பகைவர் உடுத்த யானையும் இடப்பட
திணையமைத்து உய்த்த வலவரும் என்றிவை
பலபுலம் கண்டோர் முன்னால், இனியே
அளம்புலம் கண்ட பைம்புண் வேந்தே!
பகைவர் நுழைந்த கணையின் வைந்நுனை
முகைவு நுங்கிற் றுத்துப் பிடப்பக
களையக் கறுக்கருக் கருங்கண் ஆடவர்
உருகெழு வேழத்து தெறுத்தனர் ஆர்ப்ப
மின்னுபோல் மீற்று களம் கடும
உருமிசை கொண்ட மயிர்க்கண்
திருமுரசு இரங்க ஊர்கொள் குடுமியே!

(தொல்காப்பிய உரையிடத்து நச்சினார்க்கினியர் மேற்கோள் காட்டும் செய்யுள் இது.)

தமிழ் யாத்திரைச் செய்யுள்கள் முற்றவும் கிடைக்கவில்லை என்பது உண்மையானாலும், எப்போதாவது இருந்து புதைபொருள் கிடைத்தாற்போலக் கிடைத்து நமக்கு மிகுந்தோரும் என்ற நம்பிக்கையுடன், அதன் சில செய்யுட்களை அறிந்து [illegible]

# தென்மழையின்

## 1990-91ம் ஆண்டின் வெளியீடுகள்

[illegible] — கு. அழகிரிசாமி
புதிய ரோஜா — ,,
கவியும் காதலும் — ,,
[illegible] — ,,
தமிழ் தந்த கவியமுதம் — ,,
தமிழ் தந்த கவிப்பேழை — ,,
தமிழ் தந்த கவிச்செல்வம் — ,,
வீர அனந்தன் — டாக்டர் ம. எஸ். பெருமாள்
வடநகரை பாரதம்
கலைச் செல்வபாரதி } — ச. முருகானந்தம்
பொறுத்து முடித்தது — ,,
அதர்வேஷியர் — ,,
ஆராய்ச்சித் தொகுதி — ,,
சொல்லடி சிவசக்தி — ஞானச தனகோபால்
ஒளியின் நிழலில் — ,,
புரட்சிக்கு வித்திடும்
பாவேந்தர் பாட்டு } — கவிதை நாதன்
பெரியார்
ஒரு நாடகச் சித்திரம் } — ,,
வேதகம் வாசம் — கவிதை நாதன்
பாரதியார் வாழ்வியல் — த. ஜேம்ஸ்மரிய ஆரோக்கியம்
புதுமைப் (பைந்)க் கவிஞர்
சுப்பிரமணிய பாரதியார் } — Dr. [illegible]
கவிஞன் உள்ளம் — ,,
பாவேந்தர் பாரதிதாசன்
ஒரு கண்ணோட்டம் } — ,,
நவபாரத நாயகம் — கவிஞர் முத்துமணி
சுதந்திரப் பாட்டு — கவிஞர் சுப்பு ஆறுமுகம்
முத்தினை வளம் — புலியூர் கேசிகன்
திக்குவாய் போக்கும்
வழிகள் } — அ. வைரவேல் MA
தமிழ்ப் பயண இலக்கியம் — டாக்டர் இரா. தண்டாயுதம்
பாரதிதாசன் படைப்பு
கவிதை நலங்களை } — அரங்க இராமலிங்கம்